# உதயன்

www.onlineuthayan.com

32பக்கங்கள் சுடர் 28 கதிர் 047 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 28 சனிக்கிழமை (12/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00





## மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன்

# குற்றப் பிரேரணை சபையில் வெற்றி

### நாடாளுமன்றில் நேற்று கடும் வாதப்பிரதிவாதங்கள்

கொழும்பு, ஜனவரி 12

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் முதல் பெண் பிரதம நீதியரசரான கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவைப் பதவிநீக்கம் செய்யும் குற்றவியல் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 106 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவாக 155 வாக்குகளும், எதிராக 49 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 20 பேர் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையான கட்சிகள் குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த அதே வேளை, ஆளுந்தரப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன.

இதையடுத்து இந்தத் தீர்மானம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவித்தார்.

நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் சபை கூடியது. அதன்போது நேற்றைய தினம் இரண்டாவது நாளாகவும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினருக்கிடையே கார

பார்க்க பக்கம் 4

## நாட்டைப் பிளவுபடுத்த நினைப்பது பகற்கனவு

### சொல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.12

போரால் பிளவுபடுத்த முடியாத நாட்டை வேறு வழிகளினூடாகப் பிளவுபடுத்த முடியும் எனச் சிலர் எண்ணுவாராயின், அது வெறும் பகற்கனவென்றே நான் அவர்களுக்குச் சொல்லுவேன்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நம்மை போரால் குற்றவாளிகளாக உலகத்துக்கு எடுத்துக் காட்டுவதற்காக அவர்களுக்குக் கிடைக்கும் டொலரை அவர்கள் பயன்படுத்துகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இராணுவத்தினரின் நிகழ்வொன்றில் கலந்து

பார்க்க பக்கம் 17

## சர்வதேசத்தின் குழிக்குள் வலிந்து விழுகிறது அரசு

கொழும்பு, ஜன.12

நீதிமன்றத் தீர்ப்பை நிராகரித்து பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொண்டதன் மூலம் சர்வதேசம் வெட்டி வைத்துள்ள குழிக்குள் தானாகவே போய் விழப்போகிறது இந்த அரசு என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

குற்றவியல் பிரேரணையின் இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

பிரதம நீதியரசருக்கு எதிரான எழுத்துமூல சாட்சியங்களை அடிப்படையாக வைத்தே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையைத் தயாரித்திருக்கின்றது.

சாட்சிகள் எவரும் நேரில் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படவில்லை. பிரதம நீதியரசருக்கும் சாட்சிகளை அழைக்க அனுமதி வழங்கப்படவில்லை.

பார்க்க பக்கம் 4

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு மொட்டைக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிலரின் வீடுகளுக்கு அனுப்புநரின் பெயர் விவரம் எதுவும் இல்லாமல் மொட்டைக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை கட்டாயம் பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளுக்கு சமுகமளிக்குமாறு அதில் குறிப்பிடப்பட்

பார்க்க பக்கம் 4

## 'கறுப்பு வெள்ளி' பிரகடனம்; நீதிமன்றில் கறுப்புக் கொடி!

கொழும்பு, ஜன.12

பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்யும் அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய தினம் கறுப்பு வெள்ளிக்கிழமையாகப் பிரகடனப்படுத்தப்பட்டு சட்டத்தரணிகளால் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்படி கொழும்பு, புதுக்கடை உயர் நீதிமன்ற வளாகத்திலும், நாடு முழுவதிலுமுள்ள சில நீதிவான் நீதிமன்றங்களிலும் கறுப்புக் கொடியேற்றி அவர்கள் தமது கடும் எதிர்ப்பை

பார்க்க பக்கம் 4

## நாடாளுமன்றத்துக்கு அதிகாரமில்லை வாக்களிக்க மறுத்தார் டியூ குணசேகர

கொழும்பு, ஜன.12

''நாடாளுமன்றம் அதி உயர்சிறப்புவாய்ந்த ஒன்றல்ல. அதற்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. 1978 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பில் நாடாளுமன்றத்தின் அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது. அதை மீளப் பெறவேண்டும் என்றால் முடிந்தவரை உடனடியாக 78 ஆம் ஆண்டு அரசமைப்பை இல்லாதொழிக்க வேண்டும்''

-இவ்வாறு அமைச்சர் டியூ. குணசேகர நேற்றைய குற்றவியல் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இந்த நாடாளுமன்றம் 1978 ஆம் ஆண்டு முதல் இப்

பார்க்க பக்கம் 4

## புதிய நீதியரசர் நியமனத்தை எவ்விதத்திலும் ஏற்காதீர்கள்

### உயர்நீதிமன்ற நீதிபதிகளிடம் சட்டத்தரணிகள் கோரிக்கை

கொழும்பு, ஜன.12

பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து விலக்குவதற்கும், அவருக்குப் பதிலாக புதிய நீதியரசர் ஒருவரை நியமிப்பதற்கும் மேற்கொள்ளும் முயற்சி அரசமைப்பு விதிகளுக்கு முரணானதாகும். இதை நாம் ஏற்க மாட்டோம். அதேபோல் உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் புதிய நீதியரசர் நியமனத்தை ஏற்க மறுக்க வேண்டும் - என்று இலங்கை சட்டத்தரணிகள் கூட்டு அறிக்கையின் வாயிலாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பிலான அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 78 ஏயின் கீழ் நாடாளுமன்றத்தால் நிறுவப்பட்ட தெரிவுக்குழுவுக்கு அரசமைப்பு விதி 107 (3) படி உச்ச நீதிமன்ற நீதிவான் ஒருவருக்கு எதிராக குற்றம் கண்டுபிடிப்பதற்கான அதிகாரம் கிடையாது. உச்ச நீதிமன்றம் ஜனவரி முதலாம் திகதி இதனைத் தெளிவுபடுத்தியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சட்டத்தரணிகளின் கூட்டறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

117 நாடாளுமன்ற உறுப்பினர்களால் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றவியல் பிரேரணையில் இடம்பெற்றுள்ள மூன்று குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்ற

பார்க்க பக்கம் 4

## தமிழர் விடுதலைக்கு ஆதரவான

## குர்திஷ் பெண்கள் மூவர் பரிஸில் சுட்டுக்கொலை!

பரிஸ், ஜன.12

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் அதிகமுள்ள லாச்சப்பல் பகுதிக்கு மிகவும் அருகிலுள்ள கார் டு நோர்ட் தொடருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள குர்திஷ் கல்வி வளாகம் ஒன்றில் நேற்றுக்காலை 3 குர்திஷ் இனப் பெண்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவானவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. 3 பெண்களில் ஒருவரான 32 வயதான பிடன் டோகன் அந்தக் கல்வி நிறுவனத்தின் தகவல் பிரிவில் பணிபுரிகிறார். மற்றொரு பெண்ணான சாகின் கான்சிஸ், குர்தீஷ் இயக்கமான தொழிலாளர் கட்சியின் உறுப்பினராக இருக்கிறார். மூன்றாவது பெண் யார் என்று அடையாளம் தெரியவில்லை.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து சென்ற பிரான்ஸின் உள்துறை அமைச்சர் மனுவல் வால்ஸ் சம்பவத்தை உறுதி செய்ததுடன், இதுகுறித்த விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்

பார்க்க பக்கம் 17

## வெளியானது ரிஸானாவின் மரண தண்டனை காணொளி

கொழும்பு, ஜன.12

மூதூர் ரிஸானா நபீக்கிற்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட விதம் தொடர்பில் ஊடகங்களில் வெளியாகியுள்ள காணொளி முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப் போன்று ஏற்கனவே ரிஸானாவிற்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தி தொடர்பில்

பார்க்க பக்கம் 4

## பிரான்ஸ் அரசின் உதவியுடன் யாழில் மீன்பிடித் துறைமுகம்

யாழ்ப்பாணம்,ஜன.12

பிரான்ஸ் அரசின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான பேச்சுக்கள் இடம்பெற்றுவருவதாகவும் பிரான்ஸ் தூதுவர் கிரிஸ்ரின் றொபின் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம் தலைமையிலான குழுவினர், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கப் பிரதிநிதிகளுடன் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கலந்

பார்க்க பக்கம் 17

## புலனாய்வாளர்கள் என்று கூறி வர்த்தகர்களின் விவரம் திரட்டல்

### யாழ். நகரப் பகுதிக் கடைகளில்

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்.நகரப் பகுதியிலுள்ள சில வர்த்தக நிறுவனங்களிடம் புலனாய்வாளர்கள் என்று அறிமுகப்படுத்திய சிலர் வர்த்தக நிறுவனங்கள் தொடர் [illegible] செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று தினங்களாக இந்தச் சம்பவம் இடம்பெற்று வருவதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய

பார்க்க பக்கம் 17


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 6 நாட்களில்
Gold Sponsor
TECHNOLOGY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் பணியாளர் மீதான தாக்குதலுக்கு கண்டனக் குரல்கள்

## உதயன் மீதான தாக்குதல்; அரசு தொடர்ந்தும் பாராமுகம்

### மாவை எம்.பி. குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜன.12

உதயன் மீதான தாக்குதல்கள் தொடர்கின்ற போதும் இதுவரை அரசு தாக்குதல் மேற்கொண்டவர்களை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்ததாவது

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் வடமராட்சிப் பகுதி விநியோகத்தர் நா. பிரதீபன் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் கொண்டு சென்ற உதயன் பத்திரிகை ஆயிரக்கணக்கில் அவர் சென்ற மோட்டார் சைக்கிளுடன் சேர்த்துத் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. அச் செயலை நாம் கண்டிக்கின்றோம்.

பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். குறிப்பாக தமிழ் பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றனர். அச்சுறுத்தப்படுகின்றனர். ஆண்டு தோறும் மாதம் தோறும் உதயன் மற்றும் சுடரொளி பத்திரிகையாளர்களும் அந்த நிறுவனமுமே தாக்கப்பட்டு வருகின்றமையைக் குறிப்பிட வேண்டும்.

தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ்த் தேசியத்தின் பால் அக்கறை கொண்டு எழுதி வருவதையும் செய்தி வெளியிட்டு வருவதையும் பொறுத்துக் கொள்ள முடியாத ஜனநாயக விரோத சக்திகளே பத்திரிகை சுதந்திரத்தை அச்சுறுத்தி, பலியிட்டு வருகின்றனர். இனந்தெரியாதோர் என்றால் அவர்கள் கைதுசெய்யப்பட மாட்டார்கள்.

இலட்சக்கணக்கில் குறிப்பாக வடபகுதியில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவமும், காவல்துறையும் வடபகுதியில் பாதுகாத்துக் கொண்டு நிற்கும் நிலையில் இந்தப் பகுதிகளில் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் நடைபெறுகின்றன. தமிழ் மக்களின் உரிமைக்குரலை முற்றாக அடக்கி அழித்து விடுவதே இந்தத்தாக்குதலின் நோக்கமாகும்.

பத்திரிகையாளர்கள், பத்திரிகை நிறுவனங்களினதும் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும். அடையாளங்கள் தெரிந்த குற்றவாளிகளே நடமாட விடப்பட்ட நிலையில் அரசிடம் நியாயத்தை எதிர் பார்க்காது விட்டாலும் ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டு உரத்துக் குரல் கொடுத்துப் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமென அறை கூவல் விடுக்கிறோம் என்றுள்ளது.

## மிலேச்சத்தனமான தாக்குதல்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் விநியோகப் பணியாளர் நா. பிரதீபன் பத்திரிகை விநியோகப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டுள்ளார். அவர் எடுத்துச் சென்ற பத்திரிகைளும் அவரது மோட்டார் சைக்கிளும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது. மற்றுமொரு விநியோகஸ்தரை அச்சுறுத்தும் வகையில் இனந்தெரியாத நபர்கள் பின்தொடர்ந்து சென்றுள்ளனர். எனினும் அவர்களது நடவடிக்கையை முன்கூட்டியே அவதானித்தமையினால் அவர் அதிர்ஷ்டவசமாக தாக்குதல்களில் இருந்து தப்பித்துக் கொண்டார். காட்டுமிராண்டித்தனமானதும், மிலேச்சத்தனமானதுமான இத்தாக்குதல் சம்பவத்தினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது என அதன் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-


தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்க முற்படும் தமிழ்த் தேசத்தின் பல்வேறு துறை சார்ந்தவர்கள் மீது தொடர்ச்சியான அச்சுறுத்தல்களும் கைதுகளும் கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளன. இதில் ஊடகத்துறை சார்ந்தவர்கள், மதத்தலைவர்கள், மருத்துவத்துறை சார்ந்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர், அரசியல் பிரமுகர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள், பொது மக்கள் போன்ற தரப்பினர் அண்மைக் காலத்தில் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கும் விசாரணைகள் மற்றும் கைதுகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே.

ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்காத, கருத்துக்களை கருத்துக்களால் வெல்லத் திராணியற்று வன்முறைக் கலாசாரத்திலும் கொலைக் கலாசாரத்திலும் நம்பிக்கை கொண்டுள்ள ஜனநாயக விரோத சக்திகளே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர். தமிழ்த் தேசத்தின் இருப்பை அழிப்பதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இன அழிப்புச் செயற்பாடுகள் வெளிவராமல் தடுக்கும் வகையில் தமிழ் மக்களை மரண பயத்தில் தொடர்ந்து வைத்திருக்கும் நோக்கிலேயே இத்தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தாக்குதலானது கருத்துச் சுதந்திரத்திற்கும், ஊடக சுதந்திரத்துக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். குறிப்பாக எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் மீளவும் இலங்கை தொடர்பான விவகாரம் எடுத்துக் கொள்ளப்படும்போது தமிழர் தாயகத்தில் இருந்து, எமது பிரச்சினைகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் எதுவும் சர்வதேச சமூகத்தினை சென்றடையக் கூடாது என்பதற்காகவே இவ்வாறான அச்சுறுத்தல்களும் கைதுகளும் தொடர்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.

இராணுவத்தினரதும், பயங்கரவாதத்தடுப்புப் பிரிவினரதும் கைது வேட்டைகள் மிகத்தீவிரமாக நடைபெற்றுவரும் நிலையில் மேற்படி தாக்குதல் சம்பவமானது இலங்கை அரசுக்குத் தெரியாமல் ஒருபோதும் நடைபெற்றிருக்க வாய்ப்பு இல்லை. இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க சர்வதேச சமூகம் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனவும் கோருகின்றோம்- என்றுள்ளது.

## தமிழர்களின் குரலை நசுக்குவதற்கு முயற்சி

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கண்டனம்



யாழ்ப்பாணம், ஜன.12

உதயன் பத்திரிகை விநியோகப் பணியாளர் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் மற்றும் பத்திரிகை தீயிட்டுக் கொழுத்தப்பட்டமை தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

வடக்கில் தமிழர்களின் கருத்துச் சுதந்திரத்தைப் பறித்து அவர்களைத் தொடர்ந்து அரசியல் அநாதைகளாகத் தக்க வைக்கவே இத்தகைய மிலேச்சத்தனமான தாக்குதலை ஊடகங்களின் மீது பேரினவாத சக்திகள் மேற்கொண்டு வருகின்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான பாதுகாப்புத் தரப்பினரின் தாக்குதல் சம்பவத்தை விசாரிக்கவும் கண்டறியவும் நேரில் சென்ற உதயன் பத்திரிகை ஆசிரியரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான சரவணபவனும் மிரட்டப்பட்டனர்.

உதயன் பத்திரிகையை வடக்கிலும் இலங்கைத் தமிழர் வாழும் இடங்களிலும் தனது பணியை மிகவும் நெருக்கடி மிக்க காலகட்டத்தில் ஆரம்பித்து கடந்த மூன்று தசாப்தங்களாக தமிழ் மக்களின் தேசிய அரசியல் சுதந்திரம் மற்றும் சமுக ரீதியான நெருக்கடிகள் தொடர்பில் தனது கருத்துக்களைத் தெட்டத் தெளிவாக வெளியிட்டு அதற்காகக் குரல் கொடுத்து வரும் ஒரு ஜனநாயக நிறுவனமாகும். ஆனால் எமது நாட்டில உள்ள முற்போக்கு ஊடகங்கள் மீது அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள அராஜக அடக்குமுறைகளின் ஒரு பகுதியாகவும் தமிழர் தரப்புக் குரல்வளையை நெரித்து அழித்துவிடும் நிகழ்ச்சியாகவுமே உதயன் பத்திரிகையின் மீதான இத்தகைய தாக்குதல்களை நோக்கவேண்டியுள்ளது.

இப்பத்திரிகை தொடங்கிய காலம் முதல் அதன் பணியாளர்கள் மற்றும் நிருபர்கள் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் நிறுவன உடைமைகள் அழித்தொழிக்கப்பட்டும் வந்துள்ளன எனினும் உதயனின் குரல் மட்டும் தொடர்ந்தும் தமிழ் மக்களின் குரலாக ஒலித்தவண்ணமுள்ளதை ஏற்றுக்கொள்ளமுடியாதவர்களின் கையாலாகத்தனத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.- என்றார். (த)

## உதயன் பணியாளர் மீதான தாக்குதல் ஜனநாயகத்தைக் கருவறுக்கும் செயல்

### வலி.மேற்கு பிரதேச சபை தலைவர் கண்டனம்



யாழ்ப்பாணம், ஜன. 12

தமிழினத்தின் நீண்ட துயரமான பயணத்தின் விம்பத்தை எடுத்துக்காட்டிவரும் உதயன் பத்திரிகைப் பிரதிகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தியும், விநியோகப் பணியாளரை மிலேச்சத்தனமாகத் தாக்கியமையும் ஜனநாயகத்தின் ஆணிவேர் கருவறுக்கப்பட்டதைத் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு தெரிவித்துள்ளார் வலி.மேற்கு பிரதேச சபையின் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்.

உதயன் பத்திரிகையின் விநியோகப் பணியாளர் மீதான தாக்குதலைக் கண்டித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் ஆராய்ச்சி மாநாட்டின் 39ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் உதயன் பத்திரிகைப் பணியாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் மட்டுமல்லாது குற்றவாளிகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். யதார்த்தங்களையும் உண்மைகளையும் திட்டமிட்டு அழிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் பிறப்பாலும் உணர்வாலும் தமிழர்கள் என்றும் அழிக்கப்பட முடியாதவர்கள், இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-16)

## பத்திரிகைச் சுதந்திரம் குடாநாட்டில் கேள்விக்குறி

### வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர்



யாழ்ப்பாணம், ஜன.12

தமிழ் மக்களின் குரலாக வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகையின் விநியோகிஸ்தர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் பத்திரிகைகள் எரியூட்டப்பட்டமையும் பத்திரிகைச் சுதந்திரத்தை யாழ். குடாநாட்டில் தொடர்ந்தும் கேள்விக்குரிய நிலையிலேயே வைத்திருக்கின்றது. இச் செயற்பாடானது ஊடக தர்மத்தை கேள்விக்குரியதாக்கி ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும், விநியோகஸ்தர்களையும் அச்சுறுத்துவது என்பது மிக வன்மையாக கண்டிக்கத்தக்கது என வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நேற்று முன்தினம் வடமராட்சியில் இடம்பெற்ற இச் சம்பவத்தை மீண்டும் மக்களை சென்றடையக்கூடிய கருத்துச் சுதந்திரத்தையும், எழுத்துச் சுதந்திரத்தையும் மழுங்கடிக்கும் செயற்பாடாகவே பார்க்கின்றோம்.

இச் சம்பவங்களினூடாக பேனாக்களைக் கூட இப்படித்தான் எழுத வேண்டும், கருத்துக்கள் மக்களை சுயாதீனமாக சென்றடையக் கூடாது என்பதையும், ஊடக தர்மத்தை கேள்விக்குறியாக்குகின்ற நிலையையே தொடரும் இச் சம்பவங்கள் காட்டுகின்றன.

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாக உள்ள ஊடக சுதந்திரத்தை பாதுகாத்து சுயாதீனமாகவும் தங்குதடையின்றியும் ஊடகங்கள் இயங்குவதற்குரிய நடவடிக்கைகளை உரிய தரப்பினர் மேற்கொண்டு ஜனநாயக விழுமியங்களை செயல் வடிவாக்க முன்வரவேண்டும்- என்றார். (த)

## தாக்குதலாளிகளை உடன் கைது செய்க

### புளொட் சித்தார்த்தன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன.12

உதயன் மீதான தாக்குதலாளிகளை உடன் இனங்காணுமாறு புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமராட்சி பகுதியில் இனந்தெரியாதோரால் உதயன் பத்திரிகை விநியோகஸ்தர் மோசமாகத் தாக்கப்பட்டமையையும், இதே நபர்களால், விநியோகத்திற்கிருந்த உதயன் பத்திரிகைகள் எரியூட்டப்பட்டமையையும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) அமைப்பினராகிய நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஜனநாயக சூழல் பேணப்படுவதாக அரசு அடிக்கடி அறிக்கையிட்டு வரும் இக் காலப்பகுதியில்தான் உதயன் பத்திரிகையும் அதன் ஊழியர்களும் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாவதை அவதானிக்க முடிகிறது. பத்திரிகையில் வெளிவரும் செய்திகளையும் கருத்துக்களையும் சகித்துக்கொள்ள முடியாத சக்தியொன்றே இதன் பின்னணியில் இருப்பதென்பது வெள்ளிடை மலை. கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ள திராணியற்ற சக்திகளே இக் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளது. உரிமைகள், நீதி-நியாயங்கள் மீறப்படும்போது வாய்பொத்தி, கைகட்டி அதற்கு ஒத்திசைவாக இருக்கவேண்டுமென அதிகார பலமுள்ள தரப்பு எதிர்பார்க்குமாயின் அங்கு சர்வாதிகார ஆட்சி நடைபெறுகின்றதென்பதே உண்மையாகும்.

ஊடக சுதந்திரம் மறுக்கப்படும்போது ஒட்டு மொத்த ஜனநாயக உரிமைகளுமே மறுக்கப்படுகிறது. இதனை நாம் மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன் இத்தாக்குதலில் ஈடுபட்டவர்களை காவல்துறை இனங் கண்டு அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்- என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ரிக்கெட்’ வழங்காத பஸ்களுக்கு எதிரான நடவடிக்கை எப்போது?

## விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம், ஜன.12

*‘ரிக்கெட்’ வழங்காத தனியார் பஸ்களுக்கு எதிராக இந்த வருட ஆரம்பத்தில் இருந்து பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படவில்லை.*

தனியார் பஸ்களில் ‘ரிக் கெட்’ வழங்க வேண்டும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் தெரி விக்கப்பட்டது. எனினும் இதனை பெரும்பான்மை யான தனியார் பஸ்கள் பின் பற்றுவதில்லை என்று விச னம் தெரிவிக்கப்படு கிறது.

வடமராட்சி சங்கத்துக்கு உட்பட்ட தனியார் பஸ்களில் ‘ரிக்கெட்’ வழங்கப்படுகின்ற போதும் ஏனைய சங்கங் களுக்கு உட்பட்ட பஸ்கள் இதனைப் பின்பற்றுவ தில்லை.

தனியார் பஸ் நடத்து நர்கள் ‘ரிக்கெட்’ வழங்காத தன் காரணமாக பயணி களுக்கும் நடத்துநர்களுக் கும் இடையில் முரண் பாடுகளும் தோன்றுகின்றன. பெரும்பாலும் நடத்துநர்கள் மீதிப் பணமாக சில்லறைக் காசுகளை வழங்க பின்னிற் பதால் பிரச்சினை ஏற்படு கின்றது.

இதனைத் தவிர்க்கும் முகமாக தனியார் பஸ்களில் ரிக்கெட் வழங்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் பல முறை அறிவித்தல் வழங்கப் பட்டது.

இந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் போக்குவரத்துப் பொலிஸா ரால் 2013 ஜனவரியில் இருந்து ரிக்கெட் வழங்காத தனியார் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டி ருந்தது.

இருப்பினும் தனியார் பஸ்கள் இன்னமும் ரிக்கெட் வழங்கும் நடைமுறையைப் பின்பற்றவில்லை. பொலி ஸாரும் ரிக்கெட் வழங்காத பஸ்களுக்கு எதிராக இன்ன மும் நடவடிக்கை எடுக்க வில்லை. இதேபோன்று தேசியபோக்குவரத்துஆணைக் குழுவும் எந்த நடவடிக் கைகளையும் மேற்கொள்ள வில்லை.

எனவே, எதிர்காலத்தில் மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க பொலிஸார் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-5)

# நிகழ்வுகள் இன்று

**ஒன்றுகூடல்**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஒன்று கூடல் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற வுள்ளது. வைத்தியசாலை யில் கடமையாற்றி இளைப் பாறியும் இடமாற்றம் பெற் றுச் சென்றவர்களும் நிகழ் வில் கௌரவிக்கப்படவுள் ளனர்.

ஒன்று கூடலுக்கு யாழ்பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர் நிர்வாக உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்திய சாலையிலிருந்து வந்து சேவை அடிப்படையில் பணிபுரியும் வைத்திய நிபு ணர்கள் மற்றும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் இருந்து வந்து பணிபுரியும் உத்தியோகத்தர்கள் ஆகி யோர் அழைக்கப்பட்டுள்ள னர் என்று நலன்புரி சங்கத் தினர் தெரிவித்தனர். (ம-9)

**மணிவிழாவும் நூல் வெளியீடும்**

உடுப்பிட்டி மகளிர் கல் லூரியின் முன்னாள் அதிபர் திருமதி லிடியாநேசரட்ண தேவி யோசெப்பின் மணி விழாவும் நேசமலர் நூல் வெளியீட்டு விழாவும் பிற் பகல் ஒரு மணிக்குபழைய மாணவர் சங்க உபதலைவி செல்வி ச.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற வுள்ளன. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வட மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்துகொள்வார்.

வடமாகாண கல்வி அமைச்சின் ஓய்வு நிலை பிரதிச்செயலாளர் வே.செல்வ ரத்தினம், வடமராட்சி வலய கல்வித் திணைக்கள கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இ.குட்டித்தம்பி, கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் ஆகி யோர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்துகொள்வர் கள். (ம-8-253)

**கூட்டம்**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 2013 ஆம் ஆண்டு உள்ளகப் பயிற்சி மாணவர்களுக்கான கூட்டம் காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-14)

* * *

இலங்கை செஞ்சிலு வைச் சங்க ஆளுநர் சபைக் கூட்டமும் நிறுவன அபிவிருத்திக் கூட்டமும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக் காரியாலயத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெற வுள்ளன. (ம-14)

**விவேகானந்தர் பிறந்ததின வழிபாடு**

சுவாமி விவேகானந்த ரின் 150 ஆவது பிறந்த தின வழிபாட்டு விழா காலை 6.30 மணிக்குப் புத்தூர் கிழக்கு பெரிய தம்பிரான் ஆலயத்தில் இடம்பெற வுள்ளது. (ம-14)

# மழையால் பயிர்கள் நாசம் கடன்பட்டோர் திண்டாட்டம்

வடமராட்சி,ஜன.12

வடமராட்சிப் பிரதேசத் தில் கடும் மழையால் வெங் காயம், புகையிலைப்பயிர் கள் நாசமடைந்துள்ள நிலை யில் பயிர்ச் செய்கைக்காக வங்கிகளில் பெற்ற கடன் களை எப்படித் திருப்பிச் செலுத்துவது என்று வடம ராட்சிப் பிரதேச விவசாயி கள் அங்கலாய்க்கிறார்கள்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பல ஆயிரக்கணக் கான விவசாயிகள் பணப் பயிரான புகையிலை, வெங்காயப் பயிர்களைப் பயிரிடவென பருத்தித் துறை, நெல்லியடிப் பகுதி களில் உள்ள வங்கிக் கிளைகளில் பெருந்தொகை யான பணத்தைக் கடனாகப் பெற்று விவசாய நடவடிக் கைகளுக்குப் பயன்படுத்தி யுள்ளனர்.

இந்த நிலையில் மழை யினால் வெங்காயம், புகை யிலைப் பயிர்கள் அழிவ டைந்துள்ளன. அழிவடைந்த பயிர்களை மீள் நடுகை மேற்கொள்ள வேண்டியுள் ளது.

பயிரழிவால் பெரும் செலவுகள் ஏற்பட்டுள்ள வேளையில் கடன் பெற்ற பணத்தை எப்படிச் செலுத்து வது என்று பல விவசாயி களும் திண்டாடி வருகின்ற னர்.

வடமராட்சிப் பிரதேசத் தில் புலோலி மேற்குப் பகுதி யில் வெங்காயச் செய்கை யில் ஈடுபடும் பெரும் பாலான விவசாயிகளே மிகக் கூடுதலாக பணத்தை வங்கிக் கடன்களைப் பெற்றுள்ளனர்.

அவ்வாறு பெற்ற கடன் பணத்தை பயிரழிவால் எவ்வாறு ஈடுசெய்யப் போகி றோம் என்று புலோலி மேற்கு கமக்காரர் அமைப்பைச் சேர்ந்த விவசாயிகள் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அழி வடைந்த பயிர்களை மீளப் பயிரிட வேண்டி இருப்ப தால் அதற்கான செலவு களுக்குப் பணத்தை எங்கு எவ்வாறு திரட்டுவது என விவசாயிகள் கூறுகின் றனர். (ம-8)

## இறப்பு, பிறப்பு சான்றிதழ் கோரி அதிக விண்ணப்பங்கள்

தென்மராட்சி, ஜன.12

தென்மராட்சி பிரதேச செயலக மேலதிக பதிவாளர் பிரிவுக்குகடந்தவருடம்5ஆயி ரத்து 368 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றில் 4 ஆயிரத்து 273 பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களும் 906 விவாகப் பதிவு சான்றிதழ்களும் 189 இறப்பு சான்றிதழ்களும் கோரி விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று மேல திக பதிவாளர் பிரிவு புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த விண்ணப்பங்கள் உடனுக்குடன் பரிசீலனை செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. (ம-9)

# அல்வாயில் விபத்து இருவர் படுகாயம்

வடமராட்சி, ஜன. 12

அல்வாய் கிழக்கு மாலு சந்தியில் நேற்றுமுற்பகல் மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் மோதி விபத்துக் குள்ளானது.

விபத்தில் இருசாரதிகளும் படுகாயமடைந்து பருத்தித் துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இந்தவிபத்துச்சம்பவத்தில், அல்வாய் கிழக்கு கொல ணியைச் சேர்ந்த அருமைத் துரை நிறோஜன் (வயது-24), அல்வாய் வடக்கைச் சேர்ந்த கிட்டிணன் அருமைத்துரை (வயது-55) ஆகிய இரு வருமே படுகாயமடைந்துள் ளனர்.

சம்பவம் தொடர்பில் நெல் லியடிப் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16-8)

# உதயன் பணியாளர் மீதான தாக்குதலுக்கு கண்டனக் குரல்கள்

## அடக்குமுறையின் வெளிப்பாடே உதயன் பத்திரிகை மீதான தாக்குதல்

### வலி.வடக்குப் பிரதேச சபைத்தலைவர் சுகிர்தன்

யாழ்ப்பாணம், ஜன.12

உதயன் பத்திரிகை விநி யோகஸ்தர் பிரதீபன் மீதான தாக்குதல் அதிகாரத்தினூ டான அடக்குமுறையின் வெளிப்பாடே- இவ்வாறு தெரிவித்தார் வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் லயன் சோ.சுகிர்தன்.

உதயன் விநியோகஸ்தர் தாக்கப்பட்டமையைக் கண் டித்து விடுத்துள்ள அவரது அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வரு மாறு:-

ஊடகவியலாளர்கள் நமது நாட்டில் அவ்வப்போது தாக் கப்படுகின்றார்கள். உதயன் பத்திரிகை துணிச்சலோடு செயற்படுவதால் பலமுறை தாக்குதலுக்குள்ளானது. அதன் சகோதரப் பத்திரிகை யான சுடர் ஒளியும் பல முறை தாக்கப்பட்டுள்ளது. இரண்டினதும் செய்தியாளர் கள் தாக்கப்பட்டுள்ளார்கள். பத்திரிகை நிறுவனங்கள் தாக்குதலுக்கு இலக்காகின. உதயன் பத்திரிகையின் களஞ் சியம் தீயிட்டு எரிக்கப்பட் டுள்ளது. 2006 ஆம் ஆண் டும் இதேபோன்று பத்திரிகை விநியோகிக்கச் சென்ற பாஸ்கரன் என்ற விநியோ கஸ்தர் சுடப்பட்டார்.

ஜனநாயக நாட்டில் இவ்வாறான சம்பவங்கள் கண்டிக்கப்படத்தக்கவை. மக் களுக்கு - மக்கள் மீதான அநீதிகளுக்கு - நடுநிலை தவறாமல் அவர்களின் அடக்குமுறைகளை உதயன் வெளிக்கொணரத் தவறுவ தில்லை. இவ்வாறான சம் பவங்கள் ஊடக சுதந்திரத்தை ஒடுக்குகின்ற செயற் பாடுக ளாகும்.

தாக்குதலுக்கு இலக்கா கிய பிரதீபனுடன் மற்றைய பகுதிக்கு பத்திரிகை விநி யோகிக்கச் சென்ற விநியோ கஸ்தரையும் இருவர் மோட்



டார் சைக்கிளில் பின் தொடர்ந் துள்ளனர். அவர் நெல்லியடிப் பொலீஸில் முறைப்பாடு பதிவுசெய்யச் சென்றபோது பொலிஸார் அதனை ஏற்க மறுத்துள்ளனர். பொலிஸாரின் இவ்வாறான செயற் பாடுகள் மனவருத் தத்தை ஏற்படுத்துகின்றன. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கின்ற பொலிஸார் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து சட்டத்தின்முன் நிறுத்தி உரிய தண்டனையை அவர்களுக்கு வழங்கவேண் டும். - என்றுள்ளது. (த)

## உதயன் விநியோகத்தர் மீதான தாக்குதல் காடையர்களின் மிலேச்சத்தனமான செயல்

### வலி.தென்மேற்குப் பிரதேசசபை தவிசாளர்

யாழ்ப்பாணம், ஜன.12

உதயன் பத்திரிகை விநி யோகஸ்தர் பிரதீபன் மீதான தாக்குதல் ஈவிரக்கமற்ற காடையர்களால் மேற்கொள் ளப்பட்ட ஒரு மிலேச்சத் தனமே. இவ்வாறான சம்ப வங்கள் மிகவும் கண்டிக்கத் தக்கனவாகும் - வலி.தெற்கு பிரதேசசபைத் தலைவர் தி.பிரகாஷ் இவ்வாறு தெரி வித்தார்.

உதயன் விநியோகஸ்தர் தாக்கப்பட்டமையைக் கண் டித்து விடுத்துள்ள அவரது அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வரு மாறு:-

பத்திரிகை சுதந்திரமும் நமது நாட்டில் குழிதோண் டிப் புதைக்கப்பட்டுள்ளது. உதயன் பத்திரிகையின் ஆசி ரியர் [illegible] யாழ்.பல் கலைக்கழகத்தில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளார். ஊடக சுதந்திரம் இங்கு முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. ஜன நாயக நாட்டில் ஊடகவி யலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது. அவர்கள் பூரண சுதந்திரத்துடன் செயற்பட வேண்டும். ஆனால், நமது நாட்டில் சகல சுதந்திரங்க ளும் அடியோடு மறுக்கப்படு கின்றன.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கின்ற பொலிஸார் இவ்வாறான சம்பவங்களைக் கண்டும் காணாதிருப்பது வேதனை யளிக்கின்றது.

ஆர்ப்பாட்டங்கள், கண் டன அறிக்கைகள் என்பவற் றால் எதுவித பலனு மில்லை. மனிதாபிமானம், ஜனநாயகம் என்பவற்றைப் புரிந்துகொள்ளும் திறன்



கொண்டவனுக்குத்தான் இவற்றின் தாற்பரியத்தை உணர்ந்து, புரிந்து கொள்ளும் தன்மை உண்டாகும். புரியா தவனுக்கு, மக்கள் சக்தி யென்ற மாபெரும் சக்தியாக எமது மக்கள் பொங்கி யெழுந்து மீண்டும் கடுமை மயான ஒற்றுமையுடைய மக்கள்போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே இவ்வாறான சூத்திரதாரி களுக்குத் தகுந்த பாடம் புகட்ட முடியும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுப்பு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வெளியிட்டனர். அத்துடன், சட்டத்தரணிகள் அனைவரும் கறுப்புப் பட்டிகளை அணிந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டதால், உயர்நீதிமன்றம் உள்ளிட்ட நாட்டின்பல பாகங்களில் நேற்றும் நீதிமன்றப் பணிகள் முடங்கின.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை பதவிநீக்கம் செய்யும் பிரேரணையை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று நாடுமுழுவதிலுமுள்ள சட்டத்தரணிகள் அரசுக்குத் தமது கடும் எதிர்ப்புகளைத் தெரிவித்துவருகின்றனர்.

இந்தநிலையில், குற்றவியல் பிரேரணை நடவடிக்கையிலிருந்து தாம் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் என்ற உறுதியான நிலைப்பாட்டிலுள்ள அரசு, உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம், மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளாது, தெரிவுக்குழு அறிக்கை தொடர்பில் நேற்று இரண்டாவது நாளாகவும் நாடாளுமன்றில் விவாதம்நடத்தியது. நாடாளுமன்றத்தில் மேற்படி விவாதம் நடத்தக்கூடாது என அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட சட்டத்தரணிகள், நேற்றைய தினத்தைக் கறுப்பு வெள்ளிக்கிழமையாகப் பிரகடனப்படுத்தி அனுஷ்டித்தனர்.

சட்டத்தரணிகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்ட கறுப்பு வெள்ளிக்கிழமையான நேற்று, கொழும்பு புதுக்கடை உயர்நீதிமன்ற வளாகத்தில் கறுப்புக் கொடிகளை ஏற்றிப் பறக்கவிட்டிருந்தனர். அத்துடன், நேற்றுப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட சட்டத்தரணிகளும் கறுப்புப் பட்டிகளை அணிந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கறுப்புக்கொடி எதிர்ப்பு நடவடிக்கைகள் உயர்நீதிமன்ற வளாகத்தில் மட்டுமன்றி, அநுராதபுரம், கேகாலை உள்ளிட்ட நாடுமுழுவதிலுமுள்ள சில நீதிவான் நீதிமன்றங்களிலும் மேற்படி கறுப்புக் கொடியேற்றி எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இது தொடர்பில் சட்டத்தரணிகள் ஒன்றியத்தின் பிரதிநிதி கருணாரத்ன ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில்:-

பிரதம நீதியரசரைப் பதவிநீக்கம் செய்யும் அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலே நேற்றைய தினத்தை கறுப்பு வெள்ளிக்கிழமையாகப் பிரகடனப்படுத்தி அனுஷ்டித்தோம். இந்தக் கறுப்பு வெள்ளிக்கிழமையை நாடு முழுவதிலுமுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் அனுஷ்டிக்குமாறு நாம் சட்டத்தரணிகளுக்கு அறிவித்திருந்தோம்.

இருப்பினும், நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டன - என்றார். கேகாலை நீதிமன்றத்திற்குச் செல்லும் வீதியில் கட்டப் பட்டிருந்த கறுப்புக் கொடிகளைப் பொலிஸார் அகற்றிய மையால், சட்டத்தரணிகளுக்கும், பொலிஸாருக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து கறுப்புக் கொடிகளை அகற்றாமல் பொலிஸார் அங்கிருந்து சென்றுள்ளனர். (சி)

## சர்வதேசத்தின்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சாட்சிகள் அழைக்கப்பட்டிருந்தால் அந்தச் சாட்சிகள் குறுக்கு விசாரணைகள் செய்யப்பட்டு குற்றச்சாட்டுகள் உண்மையானவையா அல்லது பொய்யானவையா என்று தெரியவந்திருக்கும்.

ஆனால், அவ்வாறானதொரு ஏற்பாடு செய்யவில்லை. பிரதம நீதியரசரை அவமானப்படுத்தி விரட்டிவிட்டு தமக்குத் தேவையானவாறு பக்கச்சார்புடன் தெரிவுக்குழு அறிக்கையைத் தயாரித்துள்ளது. சாட்சிகள் நேரில் வராமல் - சாட்சிகளைக் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தாமல் எப்படிக் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியும்? இதனால்தான் இந்த அறிக்கை வலுவற்றது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாம் மதிக்கவேண்டும். ஆனால், அவ்வாறு செய் யாது இங்கு குற்றப்பிரேரணை விவாதிக்கப்படுகிறது.

இந்த நாட்டில் நீதி இல்லை என்று கடந்த வருடம் மார்ச் மாதம் ஜெனிவா மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்த அரசு ஏற்கனவே சர்வதேசம் வெட்டிவைத்துள்ள குழியை மேலும் விசாலமாக்குகிறது. அந்தக் குழியில் தானாகப் போய் விழப் பார்க்கிறது - என்றார். (சி)

## பல்கலைக்கழக..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டுள்ளது. இந்தக் கடிதங்கள் தொடர்பில் மாணவர்களின் பெற்றோர்களும் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளைத் தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்'. 'பயங்கரவாதிகள் மீள ஒருங்கிணையத்தயார்'. ஆகிய தலைப்புக்களில் இரண்டு கடி தங்கள் ஒன்றாக கடித உறைகளில் வைத்து அனுப்பப்பட்டுள்ளன. கடிதங்களின் இறுதியில் சுயாதீன புத்திஜீவிகள் அமைப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதிய..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வாளியென நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவுசெய்துள்ளது.

இந்த முடிவை அரசமைப்பின் 140ஆவது விதிக்கிணங்க மேன்முறையீட்டு நீதிமன்றம் 2013ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி நிராகரித்து கட்டளை பிறப்பித்துள்ளது.

சட்ட ரீதியான எந்த ஓர் அடிப்படை ஆதாரமுமின்றி பிரதம நீதியரசரை பதவியிலிருந்து நீக்க எத்தனிப்பது அரசமைப்புக்கும் இந்நாட்டின் சட்டத்துக்கும் முரண்பாடான செயலாகும் என்பதை நீதிமன்றத்தின் வியாக்கியானமும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவும் துலாம்பரமாக எடுத்துரைக்கின்றன.

இந்த வியாக்கியானத்துக்கும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கும் மாறாக, இந்தக் குற்றவியல் பிரேரணை மீது நாடாளுமன்றம் விவாதம் நடத்தி, பிரதம நீதியரசரை பதவியிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க முயற்சிக்கின்றது என்பதை நாம் அறிவோம்.

இவ்வாறு சட்டத்துக்கு விரோதமாக பிரதம நீதியரசரை பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக புதிதாக ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் நாம் அறிவோம்.

அவ்வாறு புதிதாக ஒருவரை நியமிப்பது, இலங்கையின் அரசமைப்புக்கு முரண்பாடான ஒரு செயலாக அமையும். அப்படி நியமிக்கப்படுபவரும், பிரதம நீதியரசரின் பதவியைத் தட்டிப்பறிக்கும் ஒருவராகவே கணிப்பீடு செய்யப் படுவார்.

நீங்களும், அதுபோல நாமும் உடன்பட்டாலும், உடன்பாடு இல்லாவிட்டாலும் எங்கள் நீதிமன்றங்களின் முடிவுகளை கடைப்பிடிக்கின்றோம்; அவற்றை கௌரவிக்கின்றோம்.

மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள இடர்பாடான சூழ்நிலையில், இலங்கை நீதித்துறையும், சட்டத்தரணிகளும் வரலாற்றிலேயே மிகுந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைப்பாடு இத்தருணத்தில் உருக்கொண்டுள்ளது.

இந்த இடர்பாடான தருணத்தில் இந்த நாட்டு மக்களின் தொட்டு உணரமுடியாத மரபு வழி நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்க செயற்படுமாறு தங்களிடம் கோரிக்கை விடுவது எங்களின் தலையாய கடமை என்பதை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களாகிய நாங்கள் உணர்கின்றோம்.

கீழே கைச்சாத்திட்டுள்ள நாங்கள் புதிய நீதியரசர் நியமனத்தை (அல்லது பதில் நீதியரசர் நியமனத்தை) ஏற்கவும், அங்கீகரிக்கவும் மறுப்புத் தெரிவிக்குமாறு உச்ச நீதிமன்ற நீதிபதிகளை ஆவலோடு வேண்டிக்கொள்கின்றோம்.

இவ்வாறு நியமிக்கப்படும் ஒருவருடன் அமரவும் மறுப்புத் தெரிவிக்குமாறு தங்களை விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம். இத்தகைய நீதியரசர் நியமனம், நீங்களும் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களாகிய நாமும் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட அரசமைப்புக்குக் குந்தகமானதாகும்.

எங்கள் நீதிமன்றங்களின் முடிவுகளைக் கைக்கொள்ளுமாறு நாங்கள் தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். உச்ச நீதிமன்றத்தினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் தீர்ப்புகளைக் கைக்கொள்ள மறுத்தால் உங்களால் இதர எமது நீதிமன்றங்களின் கட்டளைகளையும் மற்றவர்கள் கைக்கொள்வார்கள் எனத் தங்களால் எதிர்பார்க்க முடியாது. - இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## நாடாளுமன்றத்துக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போது வரை நான்கு பிரதம நீதியரசர்களுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையைச் சந்தித்துள்ளது.

அவர்களில் நெவில் சமரக்கோன், சரத் என். சில்வா மற்றும் ஷிராணி பண்டாரநாயக்க ஆகியோரும் அடங்குகின்றனர்.

இந்தப் பின்னணியில் தற்போது விவாதிக்கப்படும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான பிரேரணை பற்றி எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்த விடயத்தில் அரசமைப்பைப் பொறுத்தவரை இந்த நாடாளுமன்றத்திலும், நீதிமன்றங்களிலும் மற்றும் வீதிகளிலும் பல்வேறு வகையான கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்தக் குற்றப் பிரேரணை ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் இது அரசியல் மயப்படுத்தப்பட்டுவிட்டது. அது வீதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டது. எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து விலகிக்கொண்டமை சரியான செயற்பாடல்ல. அவர்கள் தொடர்ந்தும் தெரிவுக் குழுவில் இருந்துகொண்டு தனியான ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்க வேண்டும். அவர்கள் செயற்குழுவில் இருந்து விலகியிருக்கக் கூடாது.

இந்த முழுக் காலப்பகுதியில் ஊடகங்கள்தான் முழுமையான நன்மைகளை அடைந்தன.

குற்றவியல் பிரேரணைக்காக நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரும் உரிமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் உண்டு. குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றஞ்சாட்டப்பட்டவர் பதவியில் இருந்து விலக வேண்டும். அல்லது விலக்கப்பட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

எமது அதி உயர் சிறப்புத்தன்மை பறிக்கப்பட்டுவிட்டது. எமது அதிகாரம் பறிக்கப்பட்டுவிட்டது.

சட்டத்தை உருவாக்குபவர்கள் என்ற வகையில் 1972 ஆம் ஆண்டு அரசமைப்பில் நாம் அனுபவித்த அதிகாரங்களை 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பில் அனுபவிக்க முடியாது.

### நாடாளுமன்றத்தின் மீது கடிவாளம்

நாடாளுமன்றம் நீதித்துறையாலும், நிறைவேற்று அதிகாரத்தாலும் கடிவாளமிடப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பே இதற்குக் காரணம்.

முடிந்தவரை உடனடியாக அந்த 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பை இல்லாதொழிப்பதே சிறந்ததாகும்.

எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொண்டால் வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகள் ஏற்படாது.

உயர்நீதிமன்ற நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பில் புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் அல்லது தற்போதுள்ள நாடாளுமன்ற நிலையியல் கட்டளையில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

அவ்வாறான ஏற்பாட்டு வரைவு அரசமைப்பில் 2000 ஆம் ஆண்டு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பான 30 கூட்டங்கள் முடிந்துவிட்டன. எதுவும் நடக்கவில்லை. மேற்படி காரணங்களைக் கவனத்தில் கொண்டு இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இருந்து விலகியிருக்கு மாறு எனது கட்சி எனக்கு அறிவுறுத்தியுள்ளது. அதன்படியே நான் செயற்படுகிறேன் - என்றார். (த-2)

## வெளியானது..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துயருற்றிருக்கும் முஸ்லிம்களுக்கும் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் மேற்படி காணொளி மேலும் துயரத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமையும் என புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். மரணதண்டனை நிறைவேற்றப்படும் காணொளி இலங்கை அரச ஊடகமொன்றில் ஒளிபரப்பப்பட்டுள்ளது. இதனை அவதானித்த புத்திஜீவிகளே இக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

குறித்த காணொளி யுரியூப் இணையத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடும் புத்திஜீவிகள், இக் காணொளியை அகற்ற அரசு அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுள்ளனர். (சி)

## குற்றப்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சாரமான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுவந்த நிலையில், இரவு 7.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டு குற்றவியல் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானத்தை மேற்கொள்வதற்காக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குற்றவியல் பிரேரணை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அனுப்பிவைக்கப்படவுள்ளது என சபாநாயகர் அறிவித்தார்.

### சுயாதீனக் குழு ஆராயும்

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு தனக்கு அனுப்பிவைக்கப்பட்ட பிரேரணையை, நால்வர் அடங்கிய சுயாதீனக் குழுவொன்றினூடாக ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வார்.

ஆளுந்தரப்பின் 116 எம்.பிக்கள் கையொப்பமிட்ட, 14 குற்றச்சாட்டுகள் அடங்கிய பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை, கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி கொண்டுவரப்பட்டது.

இந்தக் குற்றவியல் பிரேரணையை விசாரிப்பதற்காக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் 11பேர் அடங்கிய விசேட தெரிவுக்குழு கடந்த நவம்பர் மாதம் 13ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில், ஆளுந்தரப்பின் சார்பில் 7 பேரும், எதிர்க்கட்சிகள் சார்பில் ஐ.தே.கவில் இவரும், ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் சார்பில் தலா ஒவ்வொரு பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டனர்.

அத்துடன், தெரிவுக்குழு நியமிக்கப்பட்ட நாள்முதல் ஒருமாத காலத்துக்குள் இந்தத் தெரிவுக்குழு தமது விசாரணை அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் சபாநாயகரால் பணிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, விசாரணைகளை ஆரம்பித்த தெரிவுக்குழு முன்னிலையில் பிரதம நீதியரசர், நவம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் முன்னிலையானார். தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதை நிரூபிப்பதற்காக தமது பக்க நியாயங்களை எடுத்துக்கூற அவர் கால அவகாசம் கோரினார். அதையடுத்து தெரிவுக்குழுவால் அவருக்கு இருவாரகால அவகாசம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து கடந்த டிசம்பர் மாதம் நான்காம் திகதி இரண்டாவது தடவையாக தெரிவுக்குழு முன்னிலையில் சமுகமளித்த பிரதம நீதியரசர், தெரிவுக்குழு விசாரணைகள் நியாயமாகவும் வெளிப்படையாகவும் நடைபெறவில்லை என்றும், தெரிவுக்குழுவின் ஆளுந்தரப்புப் பிரதிநிதிகளில் இருவர் தன்னை தகாத வார்த்தைகளால் நிந்தித்தனர் என்றும் தெரிவித்து தெரிவுக்குழு விசாரணைகளிலிருந்து அதிரடியாக வெளிநடப்புச் செய்தார்.

டிசெம்பர் 7ஆம் திகதி இடம்பெற்ற தெரிவுக்குழு விசாரணையில், பிரதம நீதியரசர் கலந்துகொள்ளவில்லை. அதனையடுத்து, குற்றவியல் பிரேரணையை தெரிவுக்குழு விசாரித்து வந்தபோது, ஆளுந்தரப்பினரால் விசாரணைகள் பக்கச்சார்பாக நடத்தப்படுகின்றன என்று தெரிவுக்குழுவின் எதிர்க் கட்சிப் பிரதிநிதிகள் நால்வரும் விசாரணை நடவடிக்கைகளிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

### தன்னிச்சையான அறிக்கை

அதன்பின்னர், ஆளுந்தரப்பின் 7 தெரிவுக்குழுப் பிரதிநிதிகளும் குற்றவியல் பிரேரணை தொடர்பில் தன்னிச்சையாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தயாரித்து, பிரதம நீதியரசர் குற்றவாளி என்று டிசம்பர் 8ஆம் திகதி அறிவித்தது.

பிரதம நீதியரசருக்கு எதிரான 14 குற்றச்சாட்டுக்களுள் 5 ஐ விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆளுந்தரப்பின் தெரிவுக் குழு பிரதிநிதிகள், அவற்றுள் 1, 3, 5 ஆகிய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன என்றும் 2,5 ஆகியன நிராகரிக்கப்பட்டன என்றும் தெரிவித்தனர்.

இந்தத் தெரிவுக்குழு விசாரணை நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறுகோரி 7 ரிட் மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

அத்துடன், தெரிவுக்குழு அறிக்கையின் தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குமாறுகோரி, டிசம்பர் 19ஆம் திகதி பிரதம நீதியரசர் தரப்பால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, 21ஆம் திகதி விசாரணைகளுக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், இது தொடர்பில் உயர் நீதிமன்றத்திடம் வியாக்கியானம் கோரியதுடன், சபாநாயகர் உள்ளிட்ட தெரிவுக்குழு உறுப்பினர்களை கடந்த 3ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு அறிவிப்பு விடுத்தது.

கடந்த 3ஆம் திகதி தமிழ்க் கூட்டமைப்பு, ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் மட்டும் மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையாகினர். நிலையியல் கட்டளைகள், சட்டங்கள் அல்ல என்றும், தெரிவுக்குழுவும் அதன் அறிக்கையும் சட்ட வலுவற்றது என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

### தெரிவுக்குழு அறிக்கையை இரத்துச் செய்யத் தீர்ப்பு

இதேவேளை, பிரதம நீதியரசரின் ரிட் மனு மீதான விசாரணையை 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. இதன்படி குறித்த மனுவை 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், தெரிவுகுழு அறிக்கையை இரத்து செய்யுமாறு தீர்ப்பளித்தது.

இருப்பினும், நீதிமன்றத் தீர்ப்பினையும், சட்டத்தரணிகள், எதிர்க்கட்சியினர், சர்வதேச அமைப்புகளின் கடும் எதிர்ப்பையும் கருத்திற்கொள்ளாது நேற்றுமுன்தினமும், நேற்றும் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடத்தி, வாக்கெடுப்புக்கு விட்டு பிரேரணையை நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி கல்வி வலயத்தில் பொங்கல் விழா

அக்கராயன்,ஜன.12

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் பொங்கல் விழா எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணியளவில் வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் இந்த விழா இடம்பெறவுள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய விழாவான பொங்கல் விழா தமிழர் வாழும் பகுதியெங்கும் நாளை மறுதினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிலையில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திலும் இந்த விழா சிறப்பான வகையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் கலந்து கொள்வரெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# பொதுத் தேவைக்குரிய காணிகளை அபகரிக்காது பாதுகாக்க வேண்டும்

## கிளிநொச்சி காணி மீளாய்வுக் கூட்டத்தில் தீர்மானம்

*கிளிநொச்சி,ஜன.12*

***பொதுத் தேவைக்குரிய காணிகளை எவரும் அபகரிக்காது பாதுகாக்க வேண்டும் என்ற தீர்மானம் கிளிநொச்சியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.***

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற காணி மீளாய்வுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

பிரதேச செயலர் மட்டத்திலும் காணி தொடர்பாக இறுக்கமான விதிமுறைகளைப் பின்பற்றுவதெனவும் இங்கு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 600 பேரும், பூநகரியில் 320 பேரும் காணியற்றவர்களாக உள்ளதாகவும் விவரம் தெரிவிக்கப்பட்டது.

போரின் பின்னர் மீள்குடியமர்வு இடம்பெற்ற நிலையில் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் மோசமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



*2011 இல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 191 புள்ளிகள் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், மாகாண மட்டத்தில் மூன்றாமிடத்தையும், தேசிய மட்டத்தில் 10 ஆம் இடத்தையும் பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவி தம்பிமுத்து ரமேஷ் நிதுரசிக்காவை நவாலி கிழக்கு முதியோர் சங்கப் பொருளாளர் திருமதி ந.புவனேஸ்வரி கௌரவிக்கிறார். (50)*

# நிஸானா நபீக்கின் ஈடேற்றத்துக்கு அனைத்து மக்களும் பிரார்த்திப்போம்

## அழைப்பு விடுக்கிறார் மன்னார் நகரசபை உறுப்பினர்



சவூதி அரேபியாவில் சிரச்சேதம் செய்யப்பட்ட இலங்கைப் பணிப் பெண் றிஸானா நபீக்கின் ஈடேற்றத்துக்கு இலங்கை நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பிரார்த்திக்க வேண்டும் என மன்னார் நகர சபை உறுப்பினர் எம்.நகுசீன் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சவூதி அரேபியாவில் வீட்டுப்பணிப் பெண்ணாகக் கடமையாற்றிய றிஸானா நபீக் தனது பராமரிப்பில் இருந்த குழந்தையை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சவூதி அரசின் சட்டத்தின் பிரகாரம் கொலைக்கு கொலை தான் தண்டனையாக இருந்தாலும் இஸ்லாம் மன்னிப்பையும் மிகவும் கண்டிப்பாக வலியுறுத்துகின்றது.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பல விடயங்களை மன்னித்துள்ளார். குறித்த கொலையை றிஸானா நபீக் செய்யவில்லையென நாம் நம்புகின்றோம்.

இறந்த குழந்தை மூச்சுத்திணறியதால் மரணத்தை எதிர்கொண்டுள்ளது. இந்தச் சம்பவத்தை மன்னித்து றிஸானா நபீக்கை விடுதலை செய்திருக்கலாம்.

ஆனால் இறுதி வரை விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கையில் இருந்த றிஸானா நபீக்கின் குடும்பத்தினருக்கும் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் அதிர்ச்சியூட்டும் தகவல் கிடைத்துள்ளது.

றிஸானா நபீக்கிற்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதால் அவரின் பிரிவால் வாடும் அன்னாரது குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் அன்னாரது ஈடேற்றத்துக்கு அனைவரும் பிரார்த்தனைகளை மேற்கொள்வோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (க-12)

உதயனின்
தமிழர் திருநாளில்
பொங்கும் திருவிழா
2013
விழாவை முன்னிட்டு
நடத்தப்படும் போட்டி
முதலாம் பரிசு - 7,000/=
இரண்டாம் பரிசு - 5,000/=
மூன்றாம் பரிசு - 3,000/=
மேலும் 10 பேருக்கு தலா ஆயிரம் ரூபா
கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதி பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்...
கேள்விகள்
1) 2012/12/21 அன்று உலகம் அழியும் என்று குறிப்பிட்ட நாள்காட்டியின் பெயர் என்ன?
2) இலங்கையின் பிரதம நீதியரசர் யார்?
3) 'திவிநெகும' என்ற திட்டத்தின் தமிழ்ப் பதம் என்ன?
4) நல்லூர் இராசதானியை ஆண்ட கடைசி மன்னன் யார்?
5) வடமாகாணத்தின் அடையாளமாகக் கொள்ளப்படும் மரம் எது?
நிபந்தனை
★ வயது - வேறுபாடு கிடையாது.
★ 'உதயனில்' வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து அனுப்ப வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
★ குலுக்கல் மூலமே வெற்றியாளர்கள் நிகழ்வில் வைத்துத் தேர்வு செய்யப்படுவர்.
★ நிகழ்வில் வைத்து மாத்திரம் உடனடியாகவே பரிசில் வழங்கப்படும்.
★ பரிசுக் கூப்பன்களை எதிர்வரும் 13/01/2013 அன்று மாலை 6 மணி வரையில் அனுப்ப முடியும்.
★ உங்கள் பெயர், முகவரி, பிறந்த திகதி என்பவற்றைக் குறிப்பிட மறவாதீர்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி:
தமிழர் திருநாளில் பொங்கும் பெருவிழா - 2013
'உதயன்' வெளியீட்டகம், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
பெயர்: ..........
முகவரி: ..........
பிறந்த திகதி: ..........

## மருந்தாளரின் புறக்கணிப்பு தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 12

நாடளாவிய ரீதியில் வைத்திய சாலைகளில் பணிபுரியும் மருந்தாளர்கள், நேற்று முன்னெடுக்கவிருந்த பணிப்புறக்கணிப்பு, சுகாதார அமைச்சரின் உறுதிமொழியை அடுத்துத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளருடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடிச் சாதகமான பதிலைத் தருவதாகக் கூறியதையடுத்துத் தமது பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் நான்கு பிரதான கோரிக்கைகள் உட்பட 12 கோரிக்கைகளை முன்வைத்து புதன், வியாழன் ஆகிய் நாள்களில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். புதன்கிழமை 'எக்ஸ்றே' கதிர் இயக்கப் பிரிவினரும், இயன் மருத்துவர்களும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். வியாழக்கிழமை மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அதன்படியே நேற்று மருந்தாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டது. சுகாதார அமைச்சர் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதாக உறுதியளித்ததையடுத்து பணிப்புறக்கணிப்புத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

கலந்துரையாடல் வெற்றியளிக்காவிடின் தமது போராட்டம் தொடரும் என்று நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் நுட்ப வல்லுநர்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# மாணவர்களின் பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு

கிளிநொச்சி, ஜன.12

கிளிநொச்சியில் மாணவர்களின் பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வொன்று இடம்பெற்றது.

கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி கல்வி அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

அன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னாள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தற்போதைய வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மருத்துவமனையின் அத்தியட்சகரான மருத்துவர் த.சத்தியமூர்த்தி, பல் மருத்துவ நிபுணர் எஸ். தவராசா, ஆரம்பக் கல்விக்கான உதவிப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தரம் 1 ஐச் சேர்ந்த சுமார் 350 மாணவர்களுக்கு பற்பசை, பற்தூரிகை என்பன வழங்கப்பட்டன. அத்துடன் பற்சுகாதாரம் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன.

சுவீடன் நாட்டில் வாழும் மருத்துவர் ஒருவரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் யலிந்திரா



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் யலிந்திரா நேற்று(11.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவேந்திரன் மற்றும் சுபத்ரா (குஞ்சு -லண்டன்),ராஜினி(ராணி), நகுலேஸ்வரன் (அப்பன்), ஆகியோரின் சகோதரியும், சதீஸ்கண்ணன், மகிந்தன், சதீஸ்குமார், சதீஸ்வரன் ஆகியோரின் அன்பு தாயும், விஜித்தாவின் அன்பு மாமியும், கௌதமின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(13.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராதம்பு,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
## மணிவிழாவும் நூல் வெளியீடும் - 12.01.2013



## திருமதி லிடியா நேசரட்ணதேவி யோசேப்

(ஓய்வுபெற்ற அதிபர், பழைய மாணவர் சங்கத் தலைவி)

எமது கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி 13.11.2012 இல் ஓய்வுபெற்ற அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய

## திருமதி லிடியா நேசரட்ணதேவி யோசேப்

அவர்களின் மணிவிழா சிறப்புற வாழ்த்துவதுடன் அவர் தனது ஓய்வுக் காலத்தில் ஆரோக்கியத்துடனும் மனநிறைவுடனும் வாழ எல்லாம் வல்ல ஆண்டவனின் அருளை வேண்டுகின்றோம். எமது கல்லூரியின் பழைய மாணவிகள், நலன் விரும்பிகள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் அனைவரையும் இந்த மணிவிழாவுக்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பாடசாலை சமூகம்.

# மரண அறிவித்தல்

திருமதி **கணேசு நாகேஸ்வரி** (இராசாத்தி)



தாவடி தெற்கு, கொக்குவில் நெல்லொருபதி பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணேசு நாகேஸ்வரி (இராசாத்தி) 08.01.2013 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சே.கணேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- உத்தமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சேனாதிராசா தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வநாயகி, சறோஜினிதேவி, ரவீந்திரன் (பிரான்ஸ்), சிவநேசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சவுந்தலா மற்றும் மகேந்திரன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயும், சபாநாதன், புஸ்பராசா, கிரிசாந்தி, வித்தியா, சாந்தி, பவளறஜனி (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
0213201188, 0213205482
0778364889

(28131)(5-6-7)

# அபிவிருத்திக்கு நிதி

வலி. வடக்கு, ஜன. 12

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கலிகை கந்தசுவாமி ஆலயக் கட்டடத்தில் உள்ள சிறிய திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் கடந்த ஆண்டு பன்முகப்படுத்திய வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் ஆலய நிர்வாகத்தினர் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின் திருத்த வேலைகளை மேற்கொள்ளும் வகையில் 25 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டதன் மூலம் உடனடியாக ஆலயத்தின் சிறிய திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ம-86)

* * *

வலிவடக்குஜன.12

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இந்து இளைஞர் சங்கத்துக்கு பன்முகப்படுத்திய வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்து இளைஞர் சங்க நிர்வாகத்தினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் கடந்த ஆண்டு பன்முகப்படுத்திய வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

இந்து இளைஞர் சங்கத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் புதிய தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் முகமாக 40 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. (ம-86)

# பொங்கல் விழா

வடமராட்சி,ஜன.12

பருத்தித்துறை, வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக பொங்கல் விழா எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(ம-8)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் வாகனங்களுக்கும் பிளாஸ்ரிக் உடைவுகள் ஒட்டுதல், ஸ்பிறே பெயின்ரிங் செய்தல், பைவர் மோல்டிங், பிளேற்றிங் மோல்டிங், கண்ணாடி பொலிசிங் செய்தல் என்பன சிறந்த முறையில் சீர்செய்து கொடுக்கப்படும். (நல்லூர் பின் வீதி)

இல.286/2,அரசடி வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:கி.கேதீஸ்வரன் 077351 2591
(28228)(5-6-7)

# மரண அறிவித்தல்

## திருமதி டேவிட் ஜெயமணி



யாழ்ப்பாணம், 420, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டேவிட் ஜெயமணி 09.01.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கப்பொன் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற டேவிட்டின் அன்பு மனைவியும், செல்வம், லில்லி, காலஞ்சென்றவர்களான யோசெவ், பங்கராஜ், விக்ரர், ஜோன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சனி, ரஞ்சன்,ஸ்ரெலா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணாளன்,மலர்,அருள் ஆகியோரின் மாமியாரும்,தீபா (பிரான்ஸ்), சோபா, கபாஷ்கர், கீர்த்தனா,ஜெனா, றியோனி, றிஜோயா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.01.2013) சனிக்கிழமை 5/12, இராசாவின் தோட்ட லேன் எனும் இடத்திலிருந்து பி.ப.2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு அடைக்கல மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/12, இராசாவின்
தோட்ட லேன், யாழ்ப்பாணம். (28127)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினரும்,
S. ரூதாகரன் குடும்பத்தினரும்
(பேரமகன் லண்டன்)

# நினைவு கூரல்



பிறப்பு
05.04.1957

இறப்பு
08.12.2012

திருமதி
## பெ(F)லீஷியா மனோறிதி ஜெனநாதன்

(நவீல்ட் பாடசாலை, கைதடி)

உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக கர்த்தர் சமீபமாயிருக்கிறார். (பிலிப்பியர் 4:5)

அன்னாரது நினைவு கூரல் ஆராதனை நாளை (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு சுண்டுக்குளி பரி.யோவான் ஆலயத்திலும் அதைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வு பரி.யோவான் கல்லூரி பீற்றோ மண்டபத்திலும் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இல.22,சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி. (28130)(5.6.7)

C.N.ஜெனநாதன் குடும்பத்தினர்.
021 222 7093

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



## அமரர் சோமசுந்தரம் சற்குணம்

(குணதங்கம்)

நாளை (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை சோமசுந்தரம் சற்குணம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அன்னாரின் ஆத்ம சாந்தி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலையடி,பண்டத்தரிப்பு. (28176)(5.6.7)

சபாநாயகம் தனுஜன்
077 611 0852

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்திய-பாக்.நல்லுறவில் விரிசல் மீண்டும் ஒரு போருக்கு வித்திடுமா...?

காஷ்மீர் எல்லையில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள், பரம வைரிகளான இந்தியாவையும் பாகிஸ்தானையும் மற்றொரு போருக்குள் இழுத்துவிடும் பேராபத்துக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன. சில தினங்களுக்கு முன்னர் காஷ்மீர் பகுதியில் இந்திய எல்லைக்குள் ஊடுருவிய பாகிஸ்தான் படையினர் நடத்திய தாக்குதலில் இரு இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர் எனவும், உயிரிழந்த படையினரில் ஒருவரின் தலையை பாகிஸ்தான் படையினர் துண்டித்து எடுத்துச்சென்றுவிட்டனர் எனவும் இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது. இது மிகவும் காட்டுமிராண்டித்தனமான, மனிதாபிமானமற்ற செயற்பாடு எனவும், இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

தெற்காசியாவின் அமைதிக்கு, அணுசக்தி நாடுகளான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சுமுகமான உறவுகள் நிலவவேண்டியது மிக அவசியமானது. இரு நாடுகளுக்கும் இடையில், மீண்டும் ஒரு போர் ஏற்படுமானால் தெற்காசியப் பிராந்தியத்தின் அமைதியை அது சீர்குலைத்துவிடும்; பேரழிவுகளுக்கு வழிவகுக்கும்.

2008ஆம் ஆண்டு மும்பாயில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளின் சூத்திரதாரிகள் பாகிஸ்தானில் இருந்து வந்தவர்களே என்பது விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து இந்திய - பாகிஸ்தான் உறவுகள் மிக நலிவு நிலை கண்டன. மிகவும் பாதுகாப்பான அரண்களைக் கொண்ட 460மைல் நீள இந்திய-பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் உருவானது. கடந்த நான்கு வருடங்களாக இதனை நேர் சீர் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு வரும் நிலையில் தற்போது காஷ்மீர் எல்லையில் இரு தரப்பினரும் பலப்பரீட்சைக்குத் தயாராகி வருவது தெற்காசியப் பிராந்தியத்தின் அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இந்த நெருக்கடியின் மையப்பகுதியாக விளங்குவது காஷ்மீரே. 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த வேளை, இந்தியாவில் 75 சதவீதத்துக்குக் கூடிய முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதி இந்தியாவில் இருந்து பிரிக்கப்பட்டு முஸ்லிம்களுக்கான தனி நாடு என்ற ரீதியில் பாகிஸ்தான் உருவாக்கப்பட்டது. இந்தப் பிரிவினையில் காஷ்மீர் பகுதி உள்ளடக்கப்படவில்லை. அவ்வேளையில் காஷ்மீர் மகாராஜாவாக இருந்த ஹரிசிங்டோக்ராவிடம் அப்பொழுது மூன்று தெரிவுகள் முன்வைக்கப்பட்டன. காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கலாம் அல்லது பாகிஸ்தானுடன் இணைக்கலாம் அதுவுமன்றேல் தனிநாடாகவும் வைத்திருக்கலாம் என்பதேயாகும் அவை. அத்தகைய பின்புலத்தில் பாகிஸ்தான் படைகள் அங்கிருந்த பூர்வீகக் குடிகளின் உதவியுடன் காஷ்மீர் மன்னருக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்தபோது காஷ்மீர் மன்னர் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஐ.நாவின் தலையீடு காரணமாக 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் காஷ்மீர் யுத்தம் முடிவுக்கு வந்தது. யுத்தநிறுத்தம் ஏற்பட்ட போது, பாகிஸ்தான் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த காஷ்மீரின் 37 வீதமான பகுதி பாகிஸ்தான் நிர்வாகத்தின் கீழும், மிகுதி 63 வீதமான பகுதி இந்தியாவின் நிர்வாகத்தின் கீழும் கொண்டுவரப்பட்டன. காஷ்மீரில் ஒருவருட காலத்துக்குள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, காஷ்மீர் மக்கள் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைந்து கொள்ளலாம் என்று ஐ.நா. தீர்மானம் கூறியது. ஆனால் இதுவரை அத்தகையதொரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப் படவில்லை.

பனிமலைகளும் வளம் நிறைந்த பள்ளத்தாக்குகளும் கொண்ட காஷ்மீரின் உரிமைக்காக இந்தியாவும் பாகிஸ்தானும் இரு முழு அளவிலான போர்களையும் கார்கில்லில் ஒரு பெரும் மோதலையும் நடத்த நேர்ந்தது. பாகிஸ்தான் படைகளின் ஆதரவுடன் இந்தியாவின் கார்கில்ஸ் பகுதிக்குள் ஊடுருவிய இஸ்லாமிய தீவிரவா திகளுடனான மோதலில், இந்தியா நூற்றுக்கணக்கான படையினரை இழக்க நேர்ந்தது. கடும் சண்டையின் பின்னரே இந்தியாவால் கார்கில்லை மீண்டும் கைப்பற்ற முடிந்தது. அதுமட்டுமன்றி, 1965 ஆம் ஆண்டில் இடம்பெற்ற காஷ்மீர் போர், 1971 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பங்களாதேஷ் போர் என்று இந்தியாவும் பாகிஸ்தானும் கடந்த 65 வருட காலத்தில் பல போர்முனைகளைக் கண்டுவிட்டன. 1965 ஆம் ஆண்டின் போர் இரண்டாவது உலகப் போரின் பின்னர் இடம்பெற்ற பெரும் கவச வாகனப் போராக வர்ணிக்கப்பட்டது.

1962 ஆம் ஆண்டில் இந்தியாவுடன் எல்லைச்சண்டை ஒன்றை நடத்திய சீனா, இந்தியாவைப் பலவீனப்படுத்துவதற்கு பாகிஸ்தானை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வருவதாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. 1950 ஆம் ஆண்டில் மாஸேதுங் - சௌஎன்லாய் தலைமையிலான சீன மக்கள் குடியரசை முதலில் அங்கீகரித்த நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று. சீனாவிடமிருந்து பொருளாதார இராணுவ தொழில்நுட்ப உதவிகளை பாகிஸ்தான் தாராளமாகப் பெற்று வருகிறது. பாகிஸ்தானின் ஆழம் கூடிய கடல்துறைமுகமான கௌடாரின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கிய சீனா, பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்கும் நாடுகளின் பட்டியலில் முன்னிலை வகிக்கிறது.

தெற்காசியாவின் வல்லாதிக்க நாடுகளான சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பகைமையை பாகிஸ்தான் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதாகவும் பரவலான விமர்சனங்கள் உள்ளன. இன்றைய நிலையில் தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதி ஏற்படுவதற்கு காஷ்மீர் பிரச்சினையே தடையாக இருக்கிறது. ஐ.நா. வின் தீர்மானத்துக்கு அமைய, காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் பிராந்தியத்தில் அமைதி நிலவுவதற்கு அணு ஆயுத நாடுகளான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சுமுகமான நல்லுறவு நிலவவேண்டியது அவசியம் என்பதும் புறம் தள்ளிவிட இயலாத யதார்த்த உண்மையாகும்.

# சேமலாப நிதித் திட்டச் செயற்பாடு தற்போது மிகத் துரித கதியில்

## கடந்த வருடம் 1784 பேர் இணைவு

யாழ்ப்பாணம்,ஜன.12

வடக்கு மாகாணத்தில் ஊழியர் சேமலாப நிதி நடைமுறைப்படுத்தல் தற்போது புதிய உத்வேகத்தைப் பெற்றிருப்பதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் கடந்த காலங்களிலும் பார்க்க இப்போது இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது.

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் மூலம் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் பெரிதும் நன்மையடைவார்கள்.

கடந்த ஆண்டில் ஆயிரத்து 784 பேர் இந்த ஊழியர் சேமலாப நிதி திட்டத்தில் இணைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் 854 பேரும், வவுனியாவில் 333 பேரும், கிளிநொச்சியில் 386 பேரும், முல்லைத்தீவில் 156 பேரும், மன்னாரில் 55 பேரும் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

அதனைவிட கடந்த ஆண்டில் 902 நிறுவனங்கள் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணத்தில் 264 நிறுவனங்களும், வவுனியாவில் 481 நிறுவனங்களும், கிளிநொச்சியில் 81 நிறுவனங்களும், முல்லைத்தீவில் 63 நிறுவனங்களும், மன்னாரில் 13 நிறுவனங்களும் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டன.

இந்தப் புள்ளி விவரத்தின்படி யாழ்.மாவட்டத்திலேயே அதிகமானோர் இந்த ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

இதனைவிட வவுனியா மாவட்டத்தில் அதிகமான நிறுவனங்கள் கடந்த ஆண்டில் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளன.

இந்த ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தை இந்த ஆண்டிலும் கூடுதலாக நடைமுறைப்படுத்துவதற்குத் தொழில் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ள அங்கத்தவர்கள் போர் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ தமது ஊழியர் சேமலாப நிதி ஆவணங்களைத் தவறவிட்டிருந்தால் அச்சப்படத் தேவையில்லை. உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவர்களின் ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஆவணங்களைத் தவறவிட்டவர்கள் உடனடியாகத் தத்தமது மாவட்டத் தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும்-என்றார். (த-17)

# 'ரெலோ'வின் தேசிய மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில்

அம்பாறை, ஜன.12

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 8 ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மிக விமரிசையாக நடைபெறவிருக்கின்றது.

மாநாட்டுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருவதாகக் கட்சியின் செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

இந்த மாநாட்டையொட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை ஒவ்வொரு தேர்தல் மாவட்டமாக மாவட்டப் பொதுக் குழுக்கள் கூடவுள்ளதுடன், அதில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர், உப மாவட்ட செயலாளர் தெரிவுகளும், கட்சியின் பொதுக்குழு உறுப்பினர் தெரிவுகளும் இடம்பெறவுள்ளன.

இத் தெரிவுகள் முறையே திருகோணமலையில் எதிர்வரும் 16 ஆம் திகதியும், அம்பாறை மாவட்டத்தில் 17 ஆம் திகதியும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 ஆம் திகதியும், யாழ் மாவட்டத்தில் 19 ஆம் திகதியும், மன்னார் மாவட்டத்தில் 20 ஆம் திகதியும், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் 21 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளதாகவும் செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

மேலும் இந்த 8 ஆவது மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், மற்றும் நேசக்கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் விசேட அதிதிகளாகக் கலந்து கொள்வர். அத்தோடு கட்சியின் சர்வதேசப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, கட்சி மாநாட்டில் பரிந்துரைக்கப்படவிருக்கும் கட்சி யாப்பின் திருத்தம், தேர்தல் ஆணையாளருக்கு செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(த-12-30)

# மருத்துவ அதிகாரிகளின் கொடுப்பனவுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.12

அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் டிஏரி கொடுப்பனவு ஆகியவை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு 4 மணித்தியாலங்கள் வீதம் மாதத்தில் 120 மணித்தியாலங்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மருத்துவ அதிகாரிகளின் சம்பள அளவுத் திட்டத்துக்கு அமைய மாதாந்தம் 35 ஆயிரம் ரூபா தொடக்கம் 70 ஆயிரம் ரூபா வரை மேலதிக நேரக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

மருத்துவ அதிகாரிகளுக்கு தற்போது 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வரும் டிஏரி கொடுப்பனவும் 10 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் ஜனவரி மாதம் 5 ஆயிரம் ரூபாவும் ஜூலை மாதம் 5 ஆயிரம் ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு 40 மணித்தியாலயங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

# 'திவிநெகும'வுக்கு ஆதரவு தெரிவித்தோர் தமிழர் உரிமை பற்றிப் பேச முடியாது

## கொழும்பு மாநகரசபை உறுப்பினர் பாஸ்கரா குமுறல்

கொழும்பு,ஜன.12

'திவிநெகும' சட்டவரைவுக்கு ஆதரவு தெரிவித்த குறிப்பாக சிறுபான்மை இனத்தைச் சார்ந்த கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனிவரும் காலங்களிலாவது சிறுபான்மை சமூகத்தின் உரிமை பற்றி பேசி சமூகத்தை ஏமாற்றுவதை கைவிடவேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்-

ஆண்டாண்டு காலமாக தமது சொந்த நலனுக்காக அரசுடன் இருந்து தமது இருப்பை தக்க வைத்துக்கொள்ளும் சிறுபான்மை இனக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு சாதகமாக செயற்பட்டதன் பின் மக்கள் [illegible] தெரிவித்து வந்தது புதிய விடயம் அல்ல.

அதேவேளை மாகாண சபை தமிழ் பேசும் மக்களின் தீர்வோ அன்றி குறைந்த பட்ச சலுகையோ இல்லை என்ற வேளையிலும் அதில் உள்ள அற்பசொற்ப அதிகாரங்களையும் எடுப்பதற்கு ஆதரவு தெரிவித்தல் என்பது தமிழ் பேசும் மக்களின் தலைவிதி எப்படிப் போனாலும் தமது தலைவிதி நன்றாக இருந்தால் சரி என்ற நிலைப்பாட்டில் ஆதரவு தெரிவித்த சிறுபான்மை இனக் கட்சி உறுப்பினர்கள் உள்ளதை அவர்களின் செயல் தெட்டத்தெளிவாக மக்களுக்கு படம்போட்டு காட்டுகின்றது.

எனவே இனிவரும் காலங்களில் ஆதரவு தெரிவித்த சிறுபான்மைக் கட்சிகள் தாம் தனித்துவத்துடன் இயங்குகிறோம், இல்லையேல் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்கான செயற்பாட்டை நாம் என்றும் காட்டிக்கொடுத்ததில்லை என்று அறிக்கை விட்டுக்கொண்டு தாமும் குழம்பி மக்களையும் குழப்பாமல் தாம் அரசு சார்பு நிலைப்பாடு என்ற ஒரே நிலைப்பாட்டில் இருந்தால் மக்கள் தமது செயற்பாடுகளை நிதானத்துடன் மேற்கொள்ள வசதியாகவும் உதவியாகவும் உலகத்திற்கு தெளிவான செய்தியை சொல்லவும் வாய்ப்பாக இருக்கும்.

தமிழ் பேசும் மக்களின் இரு மாகாணங்களில் ஒன்றாக அமையக் கூடிய கிழக்கு மாகாணத்தின் தேர்தல் காலத்தில் சொன்ன பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமாந்த மக்கள் வடக்குத் தேர்தலை எதிர்பார்த்த வேளை மாகாண சபையில் உள்ள அதிகாரத்தைக் குறைத்து பலாப்பழத்தில் உள்ள சுளைகளை எடுத்தபின் உள்ள தோல் சக்கையான நிலையே மாகாண சபைக்கு உள்ளது. அதேவேளை 'திவிநெகும' சட்ட வரைவை எதிர்த்தவர்களை இவ் வேளையில் பாராட்டாமல் இருக்க முடியாது-என்றார்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் நிலைமைகளை நேரில் பார்வையிட்டார் பிரான்ஸ் தூதர்

மன்னார், ஜன.12

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபின் மன்னாருக்கான பயணத்தை நேற்று மேற்கொண்டார். நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் நகர சபை தலைவர், உப தலைவர் ஆகியோருடன் மன்னாரின் நிலைமை தொடர்பில் அவர் கலந்துரையாடினார்.

மன்னார் நகர சபைக்குச் சென்ற பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபின் மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், செயலாளர் எஸ்.ஜே.குரூஸ். நகர சபையின் உறுப்பினர்களான இரத்தினசிங்கம் குமரேஸ், டிலான் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார். மன்னார் மாவட்டத்தில் தமிழ்,முஸ்லிம் மக்களின் நிலைமை, மாவட்ட மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், மாவட்டத்தில் இடம் பெற்று வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பிலும், குறிப்பாக அரச தரப்பு அமைச்சர் ஒருவரினால் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட விரோத காணி அபகரிப்பு, பாகு பாடான வேலை வாய்ப்புக்கள் உள்ளிட்ட பல பிரச்சினைகளை மன்னார் நகர சபையின் உறுப்பினர்கள் அதன்போது சுட்டிக்காட்டினார்கள். (த-12)



## நடைபாதை வியாபாரிகள் வெளியேற்றப்பட்டனர்

கிளிநொச்சி, ஜன.10

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாகவும் விதி முறைகளுக்கு மாறாகவும் வியாபாரத்தில் ஈடுபட்ட நடைபாதை வியாபாரிகள் நீதிமன்ற உத்தரவின் பேரில் வெளியேற்றப்பட்டனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள பரந்தன் பகுதியில் பிரதேச சபையின் விதி முறைகளை மீறியும் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்கள் நீதி மன்ற உத்தரவுக்கு அமைவாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பரந்தன் பகுதிக்கு சென்ற கரைச்சிப் பிரதேச சபையினர் மற்றும் நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொண்ட பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று அங்கிருந்த வர்த்தகர்களை வெளியேற்றினர். (த-6)

**பிரதேச சபையின் விதி முறைகளை மீறியும் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.**

## கண்டாவளைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

கிளிநொச்சி, ஜன.10

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை ஆகியவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனை, உற்பத்தி என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனைக் குறிப்பிட்ட சில கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புகள், முழுமூச்சாக நின்று கட்டுப்படுத்தி வருகின்றனர்.

ஆயினும் அந்தப் பகுதியில் கடமையாற்றும் அரச பணியாளர் ஒருவரின் உதவியாளர் கசிப்பு உற்பத்தி, விற்பனையில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த ஆண்டு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டு நீதிமன்றால் தண்டிக்கப்பட்டுள்ளார்.

ஆயினும் மீண்டும் குறித்த அலுவலரின் ஆதரவுடன் அவர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாகவும் இது குறித்துக் கிராம மக்கள் பல தடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-6)



முல்லைத்தீவுக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்ட இலங்கைக் கத்தோலிக்க ஆயர் குழுவினர் புதுக்குடியிருப்புப் பாடசாலை ஒன்றுக்கு நேரடியாகச் சென்று மாணவர்களின் நிலைமைகளைப் பார்வையிட்டனர். (த-400)

## வான் கதவுகள் திறக்கப்பட்டதால் அழிவடைந்த நெல் வயல்கள்

கிளிநொச்சி,ஜன.12

இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் பல இடங்களிலுள்ள நெல்வயல்கள் நீரில் மூழ்கி அழிவைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தவிர்ந்த வேறு இடங்களிலிருந்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால் இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் திடீரென அதிகரித்துள்ளது. இதனையடுத்து வான் கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக குளத்தின் நீர் வெளியேறும் பகுதியில் அமைந்துள்ள பரந்தன், முரசுமோட்டை , கண்டாவளை, உமையாள் புரம், வட்டக்கச்சி, பன்னங்கண்டி, புளியம் பொக்கனை ஆகிய இடங்களிலுள்ள நெல் வயல்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

வயல்களிலுள்ள நெற்பயிர்கள் சாய்ந்து வீழ்ந்த நிலையில் காணப்படுகின்றன. இந்தப் பியர்கள் கதிர்வந்த நிலையில் வீழ்ந்து கிடப்பதால் பெரும் அழிவை எதிர்கொண்டுள்ளன.

மேலும் கதிர்கள் முற்றாத நிலையில் உள்ளதால் இவற்றால் பயன் எதுவும் தமக்குக் கிடைக்காதென பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெரும் போகத்தின் போது மூன்றாவது தடவையாக வெள்ள நீர் வயல்களைச் சேதப்படுத்தியுள்ளது.

தற்போது சேத விவரங்களை கமநல சேவை நிலையத்தினர் கமக்கார அமைப்புகளினூடாகத் திரட்டி வருகின்றனர். சகல விவரங்களும் கிடைத்த பின்னர் மொத்த சேதவிவரம் தெரிய வருமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அறுவடையை நம்பிக் கடன் வாங்கிய விவசாயிகள் செய்வதறியாது கவலையில் மூழ்கியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-426)

## வீட்டுக் கடன் பெற்றவர்கள் வேறு இடங்களுக்கு நகர்வு

கிளிநொச்சி, ஜன.12

கிளிநொச்சி யூனியன் குளம் புதிய குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுக்கடன்களைச் செலுத்த முடியாமல் அந்தப் பகுதியில் குடியேறிய சுமார் 21 குடும்பங்களும் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகள் இல்லாமல் இருந்த நூறு குடும்பங்களுக்கு 1/4 ஏக்கர் வீதம் காணிகளையும் அவர்களுக்கான வீட்டுக் கடன்களையும் கடந்த 2010 ஆம் ஆண்டு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வழங்கியிருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் சொந்தக் காணிகள் இன்றி இருந்த சுமார் 21 குடும்பங்கள் மாத்திரமே கடன்களைப் பெற்று அந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்தன.

குறித்த 21 குடும்பங்களுக்கு வீட்டுக்கடனாக மூன்று லட்சத்து 28 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட நிலையில் குறித்த கடனை மாதாந்தம் செலுத்துவதுடன் பத்து வருடங்களுக்கு நீடித்த கடனாகவும் இது வழங்கப்பட்டது.

குறித்த 21 குடும்பங்களும் பெற்றுக் கொண்ட கடன் தொகையில் வீடுகளைக் கட்ட முடியாமலும் கடன்களைச் செலுத்த முடியாமலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டன.

அதேவேளை குறித்த கிராமத்தில் போதிய வசதிகள் இல்லாமையால் அந்தக் குடும்பங்கள் குறித்த குடியிருப்பில் இருந்து வேறு இடங்களுக்கு சென்றுள்ளதுடன் தற்போது அந்த வீடுகளும் பூர்த்தியாக்கப்படாமல் காணப்படுகின்றன.

200 ரூபாவைக் கூட நாளாந்த வருமானமாக கூடப் பெற்றுக் கொள்ள முடியாத மிகவும் வறுமையின் கீழ் உள்ள இந்தக் குடும்பங்கள் கடனைச் செலுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-6)

## துணுக்காயில் வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவி



துணுக்காய், ஜன.12

முல்லைத்தீவு துணுக்காய் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், மாற்றுவலுவுள்ளோர்களுக்கும் விதவைகளுக்கும், தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கும் பிரஜைகள் முன்னணியின் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

துணுக்காய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமங்களில் கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவல்லாத பொருள்களும் அதே இடத்தைச் சேர்ந்த மாற்றுவலுவுடையோர் 5 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் தாய், தந்தையரை இழந்த 3 மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட்டது.

அத்துடன் மேற்படி மாற்றுவலுவுடையோரின் பராமரிப்பு மற்றும் மருத்துவச் செலவுக்காகவும் தாய், தந்தையரை இழந்த 3 மாணவர்களுக்கும் மாதாந்தம் உதவு தொகை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தேறாங்கண்டல் அ.த.க. பாடசாலையின் தரம் 11 மாணவர்களுக்கு சப்பாத்துக்களும் இதில் வழங்கப்பட்டன. அத்துடன் 18 விதவைகளுக்கு தலா ஐந்தாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரஜைகள் முன்னணியின் தலைவருமான ஜெ.சிறீரங்கா, துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர்களான ஈ.நந்தகிருஷ்ணன், ச.சிவகுமாரன் ஆகியோர் இந்த உதவிகளை வழங்கினார்கள். (த-426)

## வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவி வழங்கல்

கிளிநொச்சி, ஜன.10

மாங்குளத்திலும், ஏனைய வன்னிப் பிரதேசங்களிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி டானியல் எஸ்.தியாகராசா உதவி வழங்கியுள்ளார்.

நேரடியாக சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிட்ட அவர் 230 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக உலர் உணவுப் பொருள்களை வழங்கி உதவியுள்ளார்.

அத்துடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும் [illegible] பால்மா பைக்கற்றுக்களையும் அவர் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவக மாணவருக்கு 300 சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், ஜன.12

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் கோரிக்கையின் பேரில் தீவகத்தில் உள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 300 பாடசாலை சிறுவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக வேலணை பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி அதற்கான நிதியை ஏற்பாடு செய்துள்ளார்.

இதன் மூலம் வேலணை பிரதேச சபைக்கு 150 சைக்கிள்களும் நெடுந்தீவு பிரதேச சபைக்கு 75 சைக் கிள்களும் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு 75 சைக் கிள்களுமாக மொத்தம் 300 சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா முன்வைத்த கருத்திட்டத்திற்கு அமையவே இந்தச் சைக்கிள்கள் வழங்கு வதற் கான அனுமதியை வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி வழங்கியிருந்தார். (ம-50)

# புதிய மின் இணைப்புகளுக்கு உயர்வடைந்தது கட்டணம்

### சுன்னாகம் மின் பொறியியலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.12

புதிய மின் இணைப்புகளுக்கான கட்டணம் இந்த ஆண்டில் இருந்து ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

புதிய மின் இணைப்புகளுக்கு முன்னர் 15 ஆயிரத்து 900 ரூபா அறவிடப்பட்டது. இந்த வருடத்தில் இருந்து ஆயிரம் ரூபாவால் இது அதிகரிக்கப்பட்டு 16ஆயிரத்து 900 ரூபா அறவிடப்படுகிறது.

**இந்த தொகை முதல் 50 மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட வர்களுக்கே. மேலதிக தூரத் தைப் பொறுத்து மின் இணைப்புக் கட்டணம் அறவிடப்படும்.**

இந்த தொகை முதல் 50 மீற்றர் தூரத்துக்கு உட்பட்டவர்களுக்கே. மேலதிக தூரத்தைப் பொறுத்து மின் இணைப்புக் கட்டணம் அறவிடப்படும்.

அதேபோன்று வடக்கின் வசந்தம் மின்சாரத்துக்கு மின் இணைப்பு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு மின் இணைப்பு இலவசமாக வழங்கப்படும் மாதாந்தக் கட்டணம் வழமை போன்று செலுத்த வேண்டும்.

வடக்கின் வசத்தம் திட்டத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட பகுதி மக்களுக்கு இதுவரையில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு மின்சாரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் 70 ஆயிரம் பேருக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இந்த இணைப்புகளை இந்த வருடத்துக்குள் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

மீள் குடியமர்ந்துள்ளவர்களில் மின்சாரம் வழங்கக் கோரி விண்ணப்பம் அனுப்புவோருக்கும் மின் இணைப்பு வழங்கத் தயாராக உள்ளோம் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## இருவேறு சம்பவங்களில் காயமடைந்த இருவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி,ஜன.12

மோட்டார் சைக்கிள் விபத்து மற்றும், இனம் தெரியாதோரின் தாக்குதல் ஆகியவற்றால் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டு கைமுறிந்த நிலையில் உடுத்துறை வடக்கைச் சேர்ந்த நடராசா சதீஸ்(வயது 30) என்பவரும், மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த நிலையில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த சோமசுந்தரம் கருணாகரன் (வயது 48) என்பவருமே யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களாவர். (ம-9)



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 88 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழாவில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள பெண்கள் விடுதிப் பராமரிப்புக்காக ஒரு லட்சம் ரூபா நிதியை தெல்லிப்பழை வைத்தியசாலைப் பணிப்பாளர் எம்.உமா சங்கரிடம் தொண்டுநாத சுவாமிகள் கையளிக்கிறார். (ம-86)

## சாரதி அனுமதியின்றி மோ. சைக்கிள் செலுத்தியோருக்கு அபராதம் விதிப்பு

வடமராட்சி,ஜன.12

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவில் சாரதி அனுமதிப் பத்திரம் , காப்புறுதிப்பத்திரம் என்பன இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவருக்கு 22 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தப் பிரிவு வீதிகளில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட பருத்தித்துறை போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவரையும் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மூவர் மீதும் தனித்தனியாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் போது மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து தலா 7ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மூவரும் அபராதத்தைச் செலுத்திச் சென்றனர். (ம-8)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

வடமராட்சி, ஜன.12

அனுமதிப் பத்திரம் இன்றி லொறியில் மணல் ஏற்றிச் சென்றவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்ட வழிச் சோதனையின் போது அனுமதியின்றி லொறியில் மணல் ஏற்றிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக லொறிச் சாரதி மீது பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குற்றச் சாட்டை சாரதி ஏற்றுக் கொண்டதையடுத்து மணலைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்ட நீதிபதி சாரதிக்கு 21 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ம-8)

### மயானத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில்

## கண்ணாடிப்பிட்டி மயானத்தில் சடலம் அடக்கம் செய்யக் கட்டணம்

தென்மராட்சி, ஜன.12

சாவகச்சேரி நகர சபையின் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் சடலத்தைத் தகனம் அல்லது அடக்கம் செய்வதற்கு கட்டணம் அறவிடப்படவுள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் சடலம் தகனம் அல்லது அடக்கம் செய்வதற்கு 500 ரூபா கட்டணம் அறவிடுவது என்றும் கட்டணத்தை நகர சபை அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெறவேண்டும் என்றும் நேற்று நடைபெற்ற நகரசபை மாததாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை தெரி வித்தார்.

இந்து மயான அபிவிருத்தியில் தாமும் பங்களிக்கும் முகமாக சடலத்தைத் தகனம் அல்லது அடக்கம் செய்வதற்கு கட்டணம் அறவிட வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்ததை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று கூறப்பட்டது. (ம-9)

## நல்லூரில் கழிவகற்றல்

யாழ்ப்பாணம், ஜன.12

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் தேங்கி கிடக்கும் கழிவுப் பொருள்கள் குப்பைகள் என்பன தற்போது துரிதமாக அகற்றப்பட்டு வருகின்றன.

தற்போது பெய்த மழையை அடுத்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. இதனைத் தடுக்கும் வகையில் கழிவுப் பொருள்களைத் துரிதமாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

சபையின் கழிவகற்றும் வாகனம் உடாகத் திருநெல்வேலி கொக்குவில் பிரதேசங்களில் தேங்கிக் கிடந்த கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை இந்த வாரத்தில் அகற்றி முடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பிரதேசத்தில் பொது இடங்களில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைவர் மேலும் கூறினார். (த-17)

## வெள்ளம் பாதித்த மக்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஜன.12

சரவணை சின்னமடு மாதா ஆலயத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்திருந்த மக்களுக்கு வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா சமையல் பாத்திரங்களையும் உலர் உணவு பொருள்களையும் வழங்கியுள்ளார். சுமார் 70 குடும்பங்கள் வெள்ளத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கே தலைவர் முதற் கட்ட உதவியை வழங்கியுள்ளார். இதேவேளை யாழ், செயலக இடர் முகாமைத்துவ பிரிவுக்கும் இவ்விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும், விரைவில் உதவிப் பொருள்களைப் பெற்று வழங்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார். (ம-50)

## தோட்டக் கிணறுகளில் புட்வால்வுகள் திருட்டு

வலி. வடக்கு, ஜன.12

**இரண்டு இளைஞர்கள் சுன்னாகம் பொலிஸாரால் கைது**

புன்னாலைக்கட்டுவன் தோட்ட வெளிகளில் உள்ள கிணறுகளில் காணப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களின் குழாய்களில் இருந்து பித்தளையிலான புட்வால்வுகளை திருடிய குற்றச் சாட்டின் பேரில் இரண்டு இளைஞர்கள் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கடந்த பல மாதங்களாக தோட்டங்களில் உள்ள கிணறுகளில் நீர் இறைப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த பித்தளையிலான புட்வால்வுகள் தொடர்ந்து திருடப்பட்டு வந்தன.

இந்த நிலையில் சுமார் பதினெட்டுக்கும் இருபதுக்கும் இடைப்பட்ட வயதுகளை உடைய இரண்டு இளைஞர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத் தப்பட்டனர். (ம-86)

## பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் விவரம் திரட்டல்

### மகளிர் அபிவிருத்தி நிலையம் முன்னெடுப்பு

யாழ்.மாவட்டத்தில் பெண்களைத் தலைமைத்துவ மாகக் கொண்ட குடும்பங்களின் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளை மகளிர் அபிவிருத்தி நிலையம் மேற் கொண்டு வருகிறது.

போர்க் காலச் சூழலில் கணவனை இழந்த குடும்பங்கள், விபத்து மற்றும் நோய் உட்பட ஏனைய காரணங்களால் கணவனை இழந்த குடும்பங்கள் தற்போது குடும்பத்தை பொறுப் பேற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குடும்ப அங்கத்தவர்களின் வாழ்க்கைச் செலவு, ஏனைய அடிப்படைத் தேவைகள் உட்பட பெண்கள் தாமே சுயதொழில்களை மேற்கொண்டு குடும்பப் பொருளாதாரத்தைப் பொறுப் பேற்று வருகின்றனர்.

இந்த நிலையில் பெண்களைத் தலைமைத்துவ மாகக் கொண்ட குடும்ப விவரங்களை திரட்டும் நடவடிக்கைகளை மகளிர் அபிவிருத்தி நிலையம் மேற் கொண்டு வருகிறது.

முதற்கட்டமாக தீவகப் பகுதிகளில் இந்த விவரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக போர்க்காலச் சூழலில் கணவனை இழந்தவர்கள் மற்றும் விபத்து, நோய் போன்ற காரணங்களால் கணவனை இழந்தவர்களின் விவரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மகளிர் குழுக்கள் இணைந்து தீவகப் பகுதிகளில் கிராமம் கிராமமாகச் சென்று நேரடியாகப் பெண்களுடன் கலந்துரையாடி இனங் காணப்பட்ட தலைமைத்துவத்தையுடைய பெண்களின் குடும்ப விவரங்களைத் திரட்டி வருகின்றனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய இராணுவ வீரர்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் கொடூரமாகக் கொலை செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் பாகிஸ்தானின் தேசியக்கொடிக்குத் தீயிடும் பாரதீய ஜனதாக் கட்சியின் இளைஞர் அணியான பாரதிய யுவ மோர்ச்சா தொண்டர்கள்.

## இந்தியா - பாக். எல்லையில் மீண்டும் துப்பாக்கிச்சூடு

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பதற்றம் நிலவும் சூழ்நிலையில், நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் தரப்பில் இருந்து 3 முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்திய எல்லைப் பகுதியான ஜம்மு - காஷ்மீரின் பூஞ்ச் பகுதியில் 3 தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பதிலுக்கு இந்தியா தரப்பிலும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்தியா தரப்பில் இருந்தே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பாகிஸ் தான் கூறுகிறது. ஆனால் இதற்கு இந்திய இராணுவத் தலைமை மறுப்புத் தெரிவித்துள்ளது.

## தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட முடியாது

### கர்நாடகா மீண்டும் அறிவித்தது

சென்னை, ஜன.12

தமிழகத்துக்கு காவிரியிலிருந்து தண்ணீர் திறந்து விட முடியாது என்று கர்நாடக அரசு மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கர்நாடக அணையிலுள்ள 16 டி.எம்.சி. நீர் அந்த மாநில குடிதண்ணீருக்கு அவசியம் தேவை என்பதால், குடிதண்ணீருக்காக வைத்துள்ள நீரை திறந்து விடுமாறு கர்நாடகத்துக்கு உத்தரவிட முடியாது என்றும் காவிரி கண்காணிப்புக் குழுவும் கைவிரித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

காவிரி கண் காணிப்புக் குழுக் கூட்டம், மத்திய நீர்வளத்துறை செயலாளர் துருவ் விஜய் சிங் தலைமையில் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.


கர்நாடகம், புதுவை, கேரளா ஆகிய மாநி லங்களின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். தமிழ கம் சார்பாக தலைமைக் கழக உதவிச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன், பொதுப் பணித்துறை செயலர் சாய் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாக். குற்றச்சாட்டை நிராகரித்தது இந்தியா

## இராணுவ வீரர்கள் படுகொலை விவகாரத்தில் ஐ.நா. விசாரணை தேவை இல்லையாம்

டில்லி, ஜன.12

ஜம்மு காஷ்மீரில் இரு இந்திய இராணுவ வீரர்களை படுகொலை செய்து தலையைத் துண்டித்த சம்பவம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை தேவை இல்லை என்று இந்தியா அறிவித்துள்ளது.



இந்திய இராணுவ வீரர்கள் இருவர் பாகிஸ்தான் இராணுவத்தினரால் தலை துண்டிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்திருந்த பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹினா ரப்பானி,

தமது நாட்டு இராணுவத்தினர் இத்தகைய செயலில் ஈடுபடவில்லை. அவ்வாறு நடைபெற்றால் மூன்றாம் தரப்பு விசாரணையை நடத்தட்டும் என்று கூறியிருந்தார்.

பாகிஸ்தானின் மேற்படி கருத்தை இந்தியா நிராகரித்துள்ளது.

இதுகுறித்து டில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம்,

எல்லைப் பகுதியில் இரு இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவம் மிகக் கொடூரமானது. இந்தியா இதனை மிகத்தீவிரமாக நோக்குகிறது. ஐக்கிய நாடு அமைப்பைக் கொண்டு இதை விசாரிக்க இந்தியாவுக்கு விருப்பமில்லை. இந்த விவகாரத்தை சர்வதேசப் பிரச்சினையாக்க சம்மதிக்க மாட்டோம். இது தொடர்பாக பாகிஸ்தானின் யோசனையைத் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம்.

ஏற்கெனவே பாகிஸ்தான் துணைத் தூதரை வெளியுறவு அமைச்சகத்துக்கு அழைத்து இந்தியா தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. பாகிஸ்தான் கூறி வருவதுபோல, நமது இராணுவத்தினர் எந்த விதத்திலும் அமைதி ஒப்பந்தத்தை மீறவில்லை. இரு நாடுகளும் ஏற்றுக் கொண்ட விதத்திலேயே எமது வீரர்கள் செயற்பட்டனர் - என்றார்.

## பெண்களின் தற்காப்புக்காக கத்தி வழங்க சிவசேனா முடிவு

டில்லி, ஜன.12

பெண்களின் தற்காப்புக்காக கத்திகள் வழங்க சிவசேனா முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக 21 ஆயிரம் பெண்களுக்கு கத்தி வழங்கப்பட உள்ளது.

பெண்களுக்கு எதிரானவன்முறை அதிகரித்து வருவதால் பெண்களின் தற்காப்பு தொடர்பாக ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமான யோசனைகளைக் கூறி வருகின்றனர். பெண்கள் வெளியில் செல்லும் போது மிளகாய் பொடி எடுத்துச் செல்ல வேண்டும் என்று மும்பை பொலிஸ் ஆணையாளர் கூறியிருந்தார். இதேபோன்று, பெண்கள் தங்கள் தற்காப்புக்காக மிளகாய் பொடியுடன் கத்தியும் எடுத்துச் செல்ல வேண்டும் என்று அண்மையில் புனே பொலிஸ் ஆணையாளர் கூறியிருந்தார்.

இதை நடைமுறையில் செயற்படுத்த சிவசேனா முடிவு செய்துள்ளது. எதிர்வரும் 21 ஆம் திகதி பால் தாக்கரேக்கு பிறந்த தினம். அன்றைய தினம் 21 ஆயிரம் பெண்களுக்கு கத்தி வழங்க முடிவு செய்யப்பட்டு இருப்பதாகவும், தென் மத்திய மும்பையில் உள்ள கட்சியின் அனைத்து கிளை அலுவலகங்களிலும் பெண்களுக்கு மேற்படி கத்திகள் விநியோகிக்கப்படும் என்றும் சிவசேனா வட்டாரங்கள் கூறின. (வ)

## இந்தியா வரும் பாக்.குடிகளுக்கு விசா நடைமுறையில் மாற்றம்

டில்லி, ஜன.12

பாகிஸ்தானின் மூத்த குடிமக்கள் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வது எளிதாக்கப்பட்டுள்ளது. மேற்படி புதிய விசா ஏற்பாடுகள் ஜனவரி 15ஆம் திகதி தொடக்கம் நடை முறைக்கு வரவுள்ளது.

65 வயதுக்கு மேல் உள்ள பாகிஸ்தானியர்கள் அட்டாரி- வாகா எல்லையை வந்தடைந்த தும் அங்குள்ள சோதனைச் சாவடியில் ரூ. 100 அமெரிக்க டொலர்கள் கட்டணமாகச் செலுத்தினால் அங்கேயே விசா வழங்கப்படும்.

ஒரு நபருக்கு, இரு மாத இடைவெளியில் ஆண்டுக்கு இருமுறை மட்டுமே இந்த விசா அளிக்கப்படும். விசா காலத்தின்போது இந்தியாவில் உள்ள 5 இடங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளலாம். விசா மூலம் அதிக பட்சமாக 45 நாள்கள் மட்டுமே இந்தியாவில் தங்கியிருக்க முடியும். (வ)

## தமிழ்ப் பாடகி ஜெயஸ்ரீயின் பெயர் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரை

சென்னை, ஜன.12



'லைப் ஒப் பை' திரைப் படத்தில் இடம்பெற்ற தாலாட்டுப் பாடலை எழுதியதற்காக தமிழ்ப் பாடகி மும்பை ஜெயஸ்ரீ ஒஸ்கர் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு ஒஸ்கர் விருது வென்ற ஏ.ஆர். ரஹ்மான் வாழ்த்துத் தெரிவித்தார். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி மேற்படி 85 ஆவது அக்டமி விருதுகள் வழங்கப்படவுள்ளன.

புதுவையை மையமாக வைத்து பிரபல இயக்குநர் ஆங்-லீ இயக்கியுள்ள 'லைப்-ஒப்-பை' திரைப்படம் 11 பிரிவுகளுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதில் இசையமைப்பாளர் மைக்கேல் தன்னாவின் இசையில் தாலாட்டுப் பாடலைப் பாடிய மும்பை ஜெயஸ்ரீயின் தமிழ் பாடலும் ஆஸ்கார் பரிசுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடலை எழுதியவரும் ஜெயஸ்ரீதான் என்பது குறிப்பிடத்தக்கது.

'பைஸ் லுல்லாபை' என்ற குறித்த பாடலுக்கு கனடாவைச் சேர்ந்த இசையமைப்பாளர் மைக்கேல் டேன்னா இசை அமைத்துள்ளார். இதே பாடலுக்காக அவர் சிறந்த இசையமைப்பாளர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட் டுள்ளது. தான் எழுதிய பாடல் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள மும்பை ஜெயஸ்ரீ, "பாடல் எழுதுவது எளிதான ஒன்று தான் - என்றார். (வ)

## மத்திய துணைப்படை வீரரின் வயிற்றில் மாவோக்களின் இரசாயன வெடி குண்டு!

ஜார்க்கண்டு, ஜன.12

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாவோயிஸ்ட்டுகளுடன் நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்ட மத்திய பொலிஸ் படையைச் சேர்ந்த காவலரின் உடலில் இரசாயன வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

### ஜார்க்கண்டில் பயங்கரம்



கடந்த திங்கட்கிழமை ஜார்க்கண்டின் லடேகர் மாவட்டத்தில் மாவோயிஸ்ட்டுகளுடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 12 காவலர்கள் உயிரிழந்தனர். அதில் 5 பேரின் உடலை உடனடியாகக் கண்டு பிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில், இரு தினங்களுக்கு முன் இறந்த வீரர்களின் உடல்கள் கிடைத்தன. அவற்றை அப்புறப்படுத்த முயன்றபோது இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பொதுமக்கள் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

இதன் பின்னர் கிடைத்த உடலை நேற்று முன்தினம் பிரேத பரிசோதனை செய்ய எடுத்துச் சென்றனர்.

அப்போது வயிற்றுப் பகுதி வெட்டித் தைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

சந்தேகப்பட்டு அவற்றை ஸ்கான் செய்து பார்த்தபோது, அதன் வயிற்றுப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான பொருள் இருந்ததைக் கண்டுபிடித்த மருத்துவர்கள் உடனடியாக வெடி குண்டு நிபுணர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

விரைந்து வந்த வெடி குண்டு நிபுணர்கள் அந்தப் பொருள் ஒரு திரவநிலை வெடிகுண்டு என்பதை உறுதி செய்தனர்.

பின்னர் அந்த வெடி குண்டு பாதுகாப்பாகச் செயலிழக்கச் செய்யப்பட்டது. இதுபோன்ற வெடிகுண்டு இந்தியாவில் பயன்படுத்தப்படுவது இதுவே முதல் முறை என்று வெடி குண்டு நிபுணர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பாதுகாப்பு படையினரின் உடலில் மாவோயிஸ்ட்டுகள் பொருத்திய வெடிகுண்டு பாகிஸ்தானில் தயாரானவை என்று தெரியவந்துள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் குண்டு வெடிப்புகள் 103 பேர் சாவு; பலர் படுகாயம்

## பாகிஸ்தானில் தொடரும் பயங்கரம்



குவெட்டா, ஜன. 12

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 103 பேர் உயிரிழந்தனர். 200 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் குவெட்டா நகரில் ஷியா முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பில்லியோர்ட் அரங்கு ஒன்றில் இரண்டு குண்டுகள் வெடித்தன. அதில் 69 பேர் உயிரிழந்தனர். அந்த அரங்கின் கட்டடக் கூரையும் இடிந்து விழுந்தது.

இந்த தாக்குதலுக்கு சன்னி தீவிரவாத இயக்கத்தினர் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பதிலாக மிங்கோரா என்ற இடத்திலுள்ள சன்னி முஸ்லிம்களின் மசூதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் 22 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு எந்த இயக்குமும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.இதேவேளை குவெட்டா நகரின் சந்தையில் அமைந் துள்ளன சோதனைச் சாவடி மீது கார் குண்டு மூலம் தாக்கு தல் நடத்தப்பட்டது.

இதில் 12 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு யுனைடெட் பலூச் ஆர்மி என்ற பிரிவினைவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. நேற்றுமுன்தினம் மட்டும் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் மட்டும் 103 பேர் உயிரிழந்ததுள்ளனர்.

## பாடசாலையில் துப்பாக்கிச் சூடு; அமெரிக்காவில் இருவர் காயம்

வோஷிங்டன், ஜன.12

அமெரிக்காவில் பாடசாலை ஒன்றில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள உயர்நிலைப் பாடசாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதையும், அதில் இருவர் காயமடைந்ததை யும் உறுதிப்படுத்திய பொலிஸார், ''துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டவன் மாணவனாக இருக்கலாம். துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவில்லை. தற்போது நிலைமை கட்டுக்குள் இருக்கின்றது. விசாரணைகள் நடைபெற்று வருகின்றன'' என்று தெரிவித்தனர்.

இதேவேளை,

அண்மையில் நியூடவுணில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 29 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் அதிகரித்துவரும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா துப்பாக்கி கொள்வனவு தொடர்பில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வரும் சட்டத் திருத்தம் ஒன்றை விரைவில் கொண்டுவருவோம் என்று தெரிவித்துள்ளார்.

## 48 ஈரானிய பணயக் கைதிகள் விடுதலை



டமஸ்கஸ், ஜன.12

சிரியாவில் கடந்த ஒகஸ்ட் மாதம் சிரியக் கிளர்ச்சிப் போராளிகளினால் பணயக் கைதிகளாக பிடித்துவைக்கப் பட்டிருந்த 48 ஈரானியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2 ஆயிரத்து 130 சிறைக் கைதிகள் பரிமாற்ற அடிப்படையிலேயே இவர்கள் விடுவிக் கப்பட்டுள்ளதாக துருக்கிய அறக்கட்டளை நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

சிரிய இராணுவத்தினருக்கு ஈரானியர்கள் உதவியதாகப் போராளிகள் குற்றஞ் சாட்டினர். ஆனால் அவர்கள், தாம் ஷியா யாத்திரிகர்களென வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கில்லாடிக் கைதிகளில் இருவர் சாவு

கோலாலம்பூர், ஜன.12

மலேஷியப் பொலிஸாரின் கண்களில் மிளகாய் பொடி தூவிவிட்டுத் தப்பிச் சென்ற 7 கைதிகளில் இருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தப்பிய கைதிகளில் இரண்டு பேர் கார் ஒன்றில் தப்பிச் செல்லும்போது பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர்.

கைதிகளை இனங்கண்ட பொலிஸார் அவர்களின் காரைத் துரத்தி சென்றனர். கைதிகள் சென்ற கார் பாலம் ஒன்றின் மேல் மோதி நின்றுவிட்டது. அதையடுத்து கைதிகள் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளத் தொடங்கினர்.

பதில் தாக்குதல் நடத்திய பொலிஸார் இரண்டு கைதிகளையும் சுட்டுக் கொன்றனர்.

தப்பியோடிய மற்றைய கைதிகளை தேடும் பணிகள் முழுவீச்சில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆளில்லா விமானங்களின் தாக்குதல் தொடர்கிறது

### வஜிரிஸ்தானில் 5 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், ஜன.12

பாகிஸ்தானில் அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 5 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல் வடக்கு வஜிரிஸ்தானின் மிர் அலி நகருக்கு அருகில் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த இருவாரங்களில் மட்டும் வஜிரிஸ்தான் பகுதியில் நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதல்களில் சுமார் 40 பயங்கரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.


இதுபோன்ற ஏவுகணைத் தாக்குதல்கள் பாகிஸ்தானின் இறையாண்மையை மீறுவதாக உள்ளது என்று பாகிஸ்தான் அரசு கூறி வருகிறது. எனினும் ஆளில்லா விமானத் தாக்குதலை அமெரிக்கா தொடர்ந்து நடத்தி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலில் பனிப்புயல்: திண்டாடும் மக்கள்

ஜெருசலேம், ஜன.12

இஸ்ரேலில் கடந்த 20 ஆண்டுகள் இல்லாத வகையில் கடுமையான பனிப்புயல் வீசி வருகிறது. பனிப்பொழிவு காரணமாக 6 அங்குலம் முதல் 1 அடி உயரம் வரையில் பனிக்கட்டிகள் குவிந்து காணப்படுகிறது.

மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் வாகனங்கள் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. அதனையடுத்துப் பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. பனிப்புயலால் வடகிழக்கு இஸ்ரேல் பகுதி மிகவும் பாதிப்படைந்துள்ளது.



## ஒன்றுடன் ஒன்று மோதின ரயில்கள்

### சுவிஸில் 17 பேர் காயம்



ஜெனிவா, ஜன.12

சுவிஸில் இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. இந்த விபத்தில் 17 பயணிகள் காயமடைந்தனர். சுவிஸில் ரீன்பால் ரயில் நிலையத்துக்கு அண்மையில் இரண்டு அடுக்கு பயணிகள் ரயில் தடம் புரண்டது.

தடம்புரண்ட இந்த ரயில் மீது, மற்றொரு பயணிகள் ரயில் வேகமாக வந்து மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 17 பயணிகள் காயமடைந்தனர். இதனால் ரயில் போக்குவரத்து பல மணி நேரம் பாதிக்கப்பட்டது. மீட்புப் பணிகளின் பின்னர் போக்குவரத்து சீரானது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மேலாடையைக் கழற்றி போராடிய பெண்கள்



பிரேஸிலா, ஜன.12

உலகம் முழுவதும் பிரபலம் ஆகிக்கொண்டிருக்கும் 'பிக் ஷோ' நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரான்ஸில் பெண்கள் அமைப்பு ஒன்று ஆர்ப்பாட்டம் நடத்தியது. பிரேஸிலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, பெண்கள் தங்கள் மேலாடையைக் கழற்றி எதிர்ப்பைக் காட்டியதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

'பிக் ஷோ' நிகழ்ச்சியில் பெண்களுக்கான சுதந்திரம் பாதிக்கப்படுகிறது, பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்று கூறியே அந்தப் பெண்கள் அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் திடீரென தங்களது மேலாடையைக் கழற்றிப் போராட்டத்தில் ஈடுபட்டதால், அங்கு கூடியிருந்த மக்களும், பார்வையாளர்களும், பாதுகாப்பு அதிகாரிகளும் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். பெரும் கூட்டமும் கூடியது.

பின்னர் பொலிஸாரின் பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் அவர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டனர்.

## பிளவுபட்டிருக்கும் பலஸ்தீனத்தை இணைக்கும் முயற்சியில் முர்சி

### இரு குழுக்களின் தலைவர்களையும் தனித்தனியாக சந்தித்துப் பேச்சு

கெய்ரோ, ஜன.12

இரு பிரிவுகளாகப் பிளவுபட்டிருக்கும் பலஸ்தீனத்தை இணைக்கும் முயற்சியில் எகிப்து ஜனாதிபதி முகமது முர்சி இறங்கியுள்ளார்.

இதுதொடர்பாக பலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ் மற்றும் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் காலெத் மெஷால் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்து முர்சி கலந்துரையாடினார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அப்பாஸுடனான சந்திப்பின்போது எகிப்து வெளியுறவு அமைச்சர் முகமது கமல் அமர், முர்சியின் உதவியாளர் ஈஸம் எல்-ஹதாட், பலஸ்தீன செயல் அலுவலக உறுப்பினர் சயீப் எரகத், பதா கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் அஸாம் அல்-அஹமது மற்றும் அப்பாஸ் செய்தித் தொடர்பாளர் நபில் அபு-ருதினா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின்போது காஸா பகுதி பிரச்சினையில் சமரசத் தீர்வு காண்பது குறித்து ஆராயப்பட்டது. காஸாவில் உள்ளவர்களுக்கு எல்லை வழியாக மனிதாபிமான உதவிகள் செல்ல அனுமதிப்பது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

பலஸ்தீனத்தைச் சேர்ந்த மேற்குக் கரையை ஆளும் பதா கட்சித் தலைவர் அப்பாஸ் மற்றும் காஸா பகுதியை ஆளும் ஹமாஸ் அமைப்பின் தலைவர் மெஷால் ஆகிய இருவரும் முதன்முறையாக தனியாகச் சந்தித்துப் பேசினர்.

பலஸ்தீனத்தைச் சேர்ந்த இந்த இருபிரிவினருக்கும் இடையே காஸாவை ஹமாஸ் இயக்கத்தினர் கைப்பற்றியது தொடர்பாக 2007ஆம் ஆண்டு முதல் கருத்து வேறுபாடு நிலவி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவனுடன் தகாத உறவு; கைதானார் ஆசிரியை



கலிபோர்னியா, ஜன.12

பாடம் கற்க வந்த மாணவனுடன் தகாத உறவு வைத்து கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு ஆசிரியை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள உயர்நிலைப் பாடசாலையில் ஆசிரியையாகப் பணிபுரிபவர் கின்ஸ்லி வென்ஸ்கி (வயது 34).


இவர் தன்னிடம் படிக்க வந்த 17 வயது மாணவனுடன் தகாத உறவு வைத்து கொண்டார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில் தற்போது மேலும் ஒரு மாணவனுடன் அவருக்குத் தகாத தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. இது 7 ஆண்டுகளுக்கு முன்பு நடந்துள்ளது.

அப்போது கொலம்பியாவில் அவர் பணியாற்றி வந்தார். அங்குள்ள பள்ளியில் படித்து வந்த மாணவனுடன் அவர் உறவு கொண்டிருந்தது தற்போது அம்பலமாகியுள்ளது.

கைது செய்யப்பட்ட கின்ஸ்லி தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# தீ விபத்தில் 7 பேர் சாவு



மணிலா, ஜன.12

பிலிப்பைன்ஸில் நேற்றுக் காலை இடம்பெற்ற தீ விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

பிலிப்பைன்ஸ், ரிச்சார்ட் நகரித்தில் உள்ள விடுதி ஒன்றிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தால் விடுதி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

விபத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். அவர்களில் மூவர் அமெரிக்கர்கள் என்றும், ஒருவர் தென்கொரியாவைச் சேர்ந்தவர் என்றும் மற்றைய மூவர் பிலிப்பைன்ஸைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் மூன்று மணி நேரப் போராட்டத்துக்குப் பின்னர் தீ அருகில் இருந்த கட்டடங்களுக்குப் பரவாது தடுக்கப்பட்டது.

விடுதியின் இரண்டாவது அடுக்கு மரத்தால் வடிவமைக் கப்பட்டிருந்தமையால் தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

விபத்து ஏற்பட்டமைக்கான காரணத்தைக் கண்டறிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# 'அல்லாஹ்' என்ற சொல் முஸ்லிம்களுடையது மற்றையோர் பயன்படுத்தினால் தண்டனை

கோலாலம்பூர், ஜன.11

முஸ்லிம் அல்லாதவர்கள் 'அல்லாஹ்' என்ற சொல்லைப் பயன்படுத்த திடீரென மலேசியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் செலாங்கர் மாநில இஸ்லாமிய விவகாரங்கள் சபையின் செயலர் முகமது மிஸ்ரி இத்ரிஸ் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்:

''செலாங்கரில் முஸ்லிம் அல்லாதவர்கள் 'அல்லாஹ்' என்ற சொல்லை பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் அந்த சொல் புனிதமானது. முஸ் லிம்களுக்கு மட்டுமே உரித் தானது. அதை மற்றவர்கள் பயன்படுத்த கூடாது என்று கடந்த 2010ம் ஆண்டு சட் டம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இனிமேல் முஸ்லிம் அல்லாதவர்கள் யாரும் 'அல்லாஹ்' என்ற சொல்லை சலாங்கரில் பயன்படுத்த கூடாது என்று அறிவிக்கப் பட் டுள்ளது. இந்த உத்தரவை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.'' என்று தெரிவித்தார். மலேசியாவின் முக்கிய எதிர்க்கட்சியான ஜனநாயக செயல் கட்சியின் பொதுச் செய லாளர் புத்தாண்டு நிகழ்ச்சி யின் போது பேசுகையில், 'அல் லாஹ்' என்று பைபிளில் கூறியுள்ளபடி மலேசிய மொழி யில் பயன்படுத்த மலேசிய அரசு அனுமதிக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்.

மேலும் மலேசியாவில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் கூறுகையில், பல நூற்றாண்டுகளாக மலேயா மொழி பைபிளில் இடம்பெற்றுள்ள அல்லா என்ற சொல்லை பயன் படுத்தி வருகிறோம். இப்போது தடை விதிப்பது சரியல்ல என்று தெரிவித்துள்ளனர்.

# மனித மாமிசத்தை விற்ற சீனருக்கு மரண தண்டனை

பீஜிங், ஜன.12

11 பேரைக் கொடூரமாக கொலை செய்து, அவர்களின் மாமிசத்தை விற்றவருக்கு சீனாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தெற்கு சீனாவின் யுன்னான் மாகாணத்தை சேர்ந்தவர் ஷய்யாங்மிங் (வயது- 57). இவர் தொடர்ச்சியாக பல கொலைகளைச் செய்துள்ளார். கொலை செய்யப்பட்டவர்களின் உடலை வெட்டி மாமிசத்தை நாய்களுக்கு இரையாக போட்டுள்ளார்.

அத்தோடு கொலை செய்யப்பட்டவர்களின் மாமிசத்தை நெருப்பு கோழி இறைச்சி என ஏமாற்றி விற்றும் பணம் சம்பாதித்து வந்துள்ளார்.

11 பேரை கொலை செய்த ஷய்யாங்மிங்கை பொலிஸார் கைது செய்து, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் மரணதண்டனைவிதித்துத் தீர்ப்பளித்தது.

# உணர்ச்சியை வெளிப்படுத்தும் குழந்தை ரோபோ வடிவமைப்பு

நியூயோர்க், ஜன.12

உயிருள்ள குழந்தையைப் போல உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் 'ரோபோ' ஒன்றை அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

கலிபோர்னியா பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஹான்சன் ரோபோட்டிக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த டேவிட் ஹான்சன், இந்த புதிய வகை ரோபோவை உருவாக்கியுள்ளார். ஒன்றரை வயது குழந்தையைப் போன்று வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரோபோவுக்கு டியாகோ சான் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

உயிருள்ள குழந்தையைப் போன்று அழுவது, புன்னகைப்பது, கோபப்படுவது, குழப்பம் மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் இந்த ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது. உணர்ச்சிகளை வெளிப்படுத்த வசதியாக நெகிழும் தன்மையுள்ள பிளாஸ்டிக்குகளைக் கொண்டு முகம் உருவாக்கப்பட்டது.

இது தொடர்பாக டேவிட் ஹான்சன் கூறுகையில், ''போரில் ஈடுபடுத்தும் வகையில் உருவாக்கப்படும் ரோபோக்களை விட, இது போன்று உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடியவை தான் மிகவும் முக்கியமானது. இந்த ரோபோவுக்கு செயற்கை நுண்மதியை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம்'' என்றார்.


ஸ்ரீ நாககன்னியம்மன் துணை
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்



சித்தன்கேணி
அருள்மிகு ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த
**தைப் பொங்கற் பெருவிழா - 2013**
நாககன்னியம்பாள் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் மார்கழித்திங்கள் 23 ஆம் நாள் (07.01.2013) திங்கட்கிழமை கொடியேற்றத்தோடு ஆரம்பமாகி தைத்திங்கள் முதல் நாள் அவிட்ட நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை 8.00 மணியளவில் அபிஷேக அலங்காரத்தோடு சோடசதீப தூபங்களோடு நாககன்னியம்மன் நாகத்தில் திருவீதியுலா எழுந்தருளி தீமிதிப்பு வைபவம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் கலந்து எம்பெருமாட்டியைத் தரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

★ கொடியேற்றம்: 07.01.2013 மார்கழி 23 திங்கட்கிழமை சுவாதி நட்சத்திர நாளில் நடைபெற்றது.
★ தைப்பொங்கல்: 14.01.2013 தை முதல் திங்கட்கிழமை பெருவிழா 12.00 மணியளவில்

**தீ மிதிப்பு வைபவம்**

★ தீர்த்தம் கொடியிறக்கம்: 21.01.2013 திங்கட்கிழமை கார்த்திகை விரதமும், வைரவமடையும் நடைபெறும்

கிரியைகளை சிறப்புற நிகழ்த்துபவர்: ஆலய பிரதம சித்த ஞானகுரு இந்திரன் ஐயா
உதவிக்குரு: செ.ஸ்ரீசுபாஸ்கர் (சுந்தர்)

தைப்பொங்கல் அன்று நடைபெறும் நிகழ்ச்சிகள்
பஜனைப்பாடல்கள் வழங்குபவர்கள்
சுழிபுரம் அம்பாள் வில்லிசைக்குழுவினர்

**சைவச் சொற்பொழிவு**

அருளாசியுரை
ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)
விடயம் - இறைபணி நிற்றல்
நிகழ்த்துபவர் - சைவப்புலவர் க. நித்தியதசிதரன்
விடயம் - அகிலாண்ட பரமேஸ்வரி
நிகழ்த்துபவர் - சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர். செ. கந்த சத்தியதாசன் M.A.J.P. - (வலிகாம ஆசிரிய ஆலோசகர்)
விடயம் - சக்திவழிபாட்டின்அவசியம்
நிகழ்த்துபவர் - இளஞ்சைவப்புலவர் தைலைநாதன் (ஆசிரியர்)

**மங்கள வாத்தியம்**

நாதஸ்வரச்சக்கரவர்த்தி S. பாலமுருகன் குழுவினர் (ஈழ நல்லூர்)
தவில்வித்துவான் N. இராமநாதன் குழுவினர் (வட்டுக்கோட்டை)

நன்றியுரை - க. இரட்னேஸ்வரன் (ஓய்வுபெற்ற அதிபர்)

ஒலி அமைப்பு: ராஜன் சவுண்ஸ் சித்தன்கேணி.

குறிப்பு: [illegible]

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்"

சித்தன்கேணி
அம்பாளின் [illegible]
ஆலய சித்த ஞானகுரு இந்திரன் ஐயா
ஆலய [illegible]

விழா சிறப்புற வாழ்த்துவோர்: (SUBRA) கல்வி நிலையம், சித்தன்கேணி.



**அறை வாடகைக்கு**
A/C,NON A/C அறைகள்
மாத ,கிழமை வாடகைக்குண்டு.
தொடர்பு: 077691 7030.
(28221)(6.7.4)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
டோபர்மன்X ரிச்பக் நாய்க்குட்டிகள்
உடன் விற்பனைக்கு.
தொடர்பு:0770357307.அராலி, வட்டுக்கோட்டை.
(28102)(6.7.4)

**கடை வாடகைக்கு**
K.K.S வீதியில் பூநாறி மரச்சந்தியில் "செல்ல மகால்" மண்டபத்திற்கு 50 m தூரத்தில் சபாபதி வீதி,இல 22 இல் இரு கடைகள் வாடகைக்கு உண்டு. Store ஆக பயன்படுத்துவதற்கு உகந்தது.
தொடர்பு :0778083345, 0212221639
(28166)(6.711)

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, புங்கங்குளம் வீதியில் அமைந்துள்ள நி.பர.1 குளி 10¾ கொண்ட காணிக்குள் அமைந்துள்ள மாடி வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 309 8388
(28041)(6.7.4)



**பரதநாட்டிய அரங்கேற்றம்**



செல்வி
எறின் பிறின்சி பீற்றர்தாஸ்
காலம்:- 13.01.2013
ஞாயிற்றுக்கிழமை
இடம்:-
வீரசிங்கம் மண்டபம்
நேரம்:-
பிற்பகல் 3.00 மணி
குயிலுவக் கலைஞர்கள்
நட்டுவாங்கம்:-
திருமதி சுதர்சினி கரன்சன் (கலா வித்தகர், நுண்கலைமாணி)
குரலிசை:-
இசைமாணி திரு. தவநாதன் றொபேட் (விரிவுரையாளர் இசைத்துறை இராமநாதன் நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
மிருதங்கம்:-
திரு.சி.துரைராசா (இசைக்கலைமாணி)
வயலின்:- திரு அ.ஜெயராமன் (இசை ஞானச்சுடர்)
பிரதம விருந்தினர்:- நாட்டியவேள் கலைஞர் வேல் ஆனந்தன் (வடக்கு – கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் அழகியற் கல்வி ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
கலைஞர்கள், ஆர்வலர்கள், சுற்றத்தார், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நி.மு.: 3 ஆம் வட்டாரம், மண்டைதீவு.
த.மு.: 380, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
தங்கள் நல்வரவை இனிதே நாடும்
திரு.திருமதி பீற்றர்தாஸ் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'திவிநெகும' குறித்து மு.கா. இரட்டை நிலைப்பாடா?

## ஆதரவளித்தோர் மீது நடவடிக்கையை எடுப்பது யார் என்று கேட்கிறார் அன்வர்

மட்டக்களப்பு,ஜன.12

கிழக்கு மாகாண சபையில் 'திவிநெகும' சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு கட்சியின் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.

அந்த நிலையில் நாடாளுமன்றத்தில் திவிநெகும சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களித்த மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது யார்?

இவ்வாறு கல்முனைப் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.அன்வர் ஹாஜியார் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண சபையில் கடந்த ஒக்ரோபர் மாதம் திவிநெகும சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்ட போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாகாணசபை உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் திவிநெகும சட்ட வரைவு அமைந்துள்ளது. அதற்கு ஆதரவளித்த முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர் கள் ஏழு பேருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் உயர்பீடம் தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் அவர்கள் மீது ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்று செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

இந்தநிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திவிநெகும சட்டவரைவுக்கு மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு வழங்கியுள்ளமை எந்த வகையில் நியாயமானது.

அன்று கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்ட போது முஸ்லிம் காங்கிரஸின் மாகாணசபை உறுப்பினர்கள் எவருக்கும் அது பற்றிய போதிய தெளிவு இருக்கவில்லை என்று கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த மூன்று மாத காலத்தினுள் திவிநெகும சட்ட வரைவு பற்றி கட்சி மட்டத்தில் பல தடவைகள் கலந்துரையாடப்பட்டு அது சிறுபான்மையினருக்குப் பாதகமானது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இவ்வளவு தெளிவுகள் பெற்ற பின்னரும் திவிநெகும சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களித்ததன் பின்னணி என்ன?

ஆதரவளித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது யார்?

கட்சியின் உயர்பீடத் தீர்மானத்தின் பிரகாரமே திவிநெகுமவுக்கு நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆதர வளித்துள்ளார்கள் என்று செயலாளர் கூறியுள்ளார். பிழையான விடயத்தைச் செய்வதற்கு உயர்பீடம் தீர்மானம் எடுத் தால் அந்த விடயம் சரியாக மாறிவிடுமா? என்று கேட்க விரும்புகிறேன்.- என்றார். (ச-சி)

## மட்டக்களப்பில் வெள்ளப் பெருக்கால் 40 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

### நிவாரணம் போதாது என அறிவிப்பு



மட்டக்களப்பு,ஜன.12

மட்டக்களப்பு மாவட்டத்தில் எற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக நேற்று முன்தினம் வரை சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

ஏறாவூர் பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. எனினும் அவர்களுக்கு அரச நிவாரண உதவி போதுமானதாக இல்லை என்று கிழக்கு மாகாண சபை பிரதித் தலைவர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரை நேரடியாகச் சென்று சந்தித்த சுபைர், நிவாரண நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோருடனும் தொடர்பு கொண்ட அவர், அரச நிவாரண உதவி போதுமானதாக இல்லை என்று கூறினார். (ச)

## மண்சரிவு அபாயத்தால் பாடசாலைகள் மூடப்பட்டன

நுவரெலியா,ஜன.12

மலையகத்தில் பூஜாபிட்டிய பிரதேசசபை பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள 3 பாடசாலைகள் மண்சரிவு அபாயம் காரணமாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையிலிருந்து காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் அதிகாலையிலிருந்து அடைமழை பெய்துவருவதால் இந்தப் பாடசாலைகளில் மண்சரிவு அபாயம் காணப்படுகின்றது.

அந்த நிலையில், தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் ஆலோசனைக்கமைய இந்தப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று பூஜாபிட்டிய பிரதேசசபையின் தலைவர் அநுர மடலுஸ்ஸ தெரிவித்தார்.

கல்ஹின்னை ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயம், கல்கந்த கனிஷ்ட வித்தியாலயம், மொலகொட பியதஸ்ஸி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே மண்சரிவு அபாயம் காரணமாக மூடப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வேறு பாடசாலைகளில் கல்வியைத் தொடருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார். (ச)



மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பலாச்சோலை விவேகானந்த வித்தியாலயத்தில் சிரமதானம் நடைபெற்றது. அந்தச் சிரமதானத்தில் மக்கள், பொலிஸார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கஞ்சாவுடன் மூவர் சிக்கினர்

13ஆம் பிரிவு ஹிரா வீதியில் உள்ள வீடுகளை சோதனையிட்ட போதே மூவரும் கைது செய்யப்பட்டனர்.

அக்கரைப்பற்று,ஜன.12

அக்கரைப்பற்று , ஒலுவில் பிரதேசத்தில் சட்ட விரோதமாக கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த பெண் உட்பட மூன்று பேரை அக்கரைப்பற்றுப் பொலிஸார் கைதுசெய்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அக்கரைப்பற்று, 13ஆம் பிரிவு ஹிரா வீதியில் உள்ள வீடுகளை சோதனையிட்ட போதே மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## மீனவர்களின் படகுகளை ஒலுவில் துறைமுகத்தில் நிறுத்த அனுமதி வேண்டும்

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் வலியுறுத்து

அம்பாறை,ஜன.12

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்களின் இயந்திர படகுகளை ஒலுவில் துறைமுகத்தில் நிறுத்திவைக்க அனுமதி வழங்க வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் துறைமுக அபிவிருத்தி பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தணவிடம் மனு மூலம் வலியுறுத்தி உள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டில் நிலவி வருகின்ற சீரற்ற காலநிலை காரணமாக அடிக்கடி கடல் கொந்தளிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. அதனால் கடற்றொழில் பாதிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் படகுகளை நிறுத்த தரிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. ஆதலால் இந்தப் பகுதி மீனவர்கள் கடல் கொந்தளிப்பு மற்றும் இடர்கள் இடம்பெறும் காலப் பகுதிகளில் தமது மீன்பிடிப் படகுகளை பாதுகாப்பாக தரித்து வைப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மீன்பிடிப் படகுகள் இடர்களில் சிக்கி சேதமடைகின்றன. அதனால் இந்தப் பகுதி மீனவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழக்க நேரிடுகின்றது.

தற்போது கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதால், அம்பாறை மாவட்ட மீனவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த வருட முற்பகுதியிலும் இதேபோன்ற நிலைமை ஏற்பட்டபோது, ஒலுவிலில் அமைக்கப்பட்டு வருகின்ற துறைமுகத்தில் படகுகள் அனைத்தையும் நங்கூரமிடுவதற்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனவே தற்போதைய காலநிலை சீர்கேடு மற்றும் கடல் கொந்தளிப்பை கருத்தில் கொண்டு அம்பாறை மாவட்ட மீனவர்களின் படகுகளை ஒலுவில் துறைமுகத்தில் தரித்து வைப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மனுவின் பிரதிகளை இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர், அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)

## காத்தான்குடி காதி நீதிமன்றுக்கு பதில் நீதிபதி

மட்டக்களப்பு,ஜன.12

காத்தான்குடி காதி நீதிமன்றத்துக்கு பதில் நீதிபதியாக ஏறாவூர் காதி நீதிபதி மௌலவி எம்.மஜீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி காதி நீதிமன்றத்தின் நீதிபதியாக கடமையாற்றிய ஏ.எம்.ஹிழ்ர் தனது காதி நீதிபதி பதவியிலிருந்து கடந்த மாதம் ராஜினாமாச் செய்ததையடுத்தே, மௌலவி எம்.மஜீட் காத்தான்குடி காதி நீதிமன்றத்தின் பதில் காதி நீதிபதியாக நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு மாதகாலமாக காத்தான்குடி காதி நீதிமன்றம் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மலையகத்தில் மண்சரிவு அபாயம்



நுவரெலியா,ஜன.12

மத்திய மாகாணத்தில் கண்டி, நுவரெலியா, மாத்தளை உட்பட பல இடங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக மண், மற்றும் கருங்கற்கள் சரியும் அபாயம் உள்ளது.

அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, பலாலி வீதிக்கருகில் இரண்டாவது காணி, 3 பரப்பில் அமைந்த 1500 சதுர அடி விசாலமான வீடும், இணைந்த 2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 7251 188

(24400)(6.7.8)

## Technicians தேவை

Colombo 13 இல் இயங்கும் எலக்ரோனிக்ஸ் நிறுவனத்திற்கு டிஸ் அன்ரனாFitting செய்யத் தெரிந்தTechnician மற்றும் உதவியாளர்கள் (பழகவிருப்பமுள்ளோர்) உடன் தேவை.உணவு, தங்குமிடம் இலவசம்.

* ஓட்டோ/மோட்டார் சைக்கிள் லைசன்ஸ்
* மொழியறிவு (சிங்களம்), பேச்சுதிறன்
* Accounts/தெளிவான கையெழுத்து விருப்பத்தில் கொள்ளப்படும்
* சம்பளம் +OT= 40000/= வரை (திறமைக்கேற்ப)

தொடர்பு கொள்ளவும். T.குமார்: 0777710785.

(28250) (6.7.4)

# கடந்த ஆண்டு மட்டும் 6,600 தென்னங்கன்றுகள்

### யாழ்.பிரதேச செயலர் பிரிவில் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ். பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஆண்டு மட்டும் ஆறாயிரத்து 600 தென்னங் கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாக பிரதேச செயலர் திருமதி சுகுணாவதி தெய்வேந்திரன் தெரிவித்தார்.

திவிநெகும திட்டத்தின் கீழ் இந்தத் தென்னங்கன்றுகள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

தென்னங் காணி உள்ள ஒவ்வொரு பயனாளிகளுக்கும் இரண்டு தென்னங் கன்றுகள் வீதம் இவை விநியோகிக்கப்பட்டன.

குறுகிய காலத்தில் காய்க்கக்கூடிய இனத்தைச் சேர்ந்த தென்னங்கன்றுகளைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திவிநெகுமதிட்டத்தின்கீழ் விநியோகித்துள்ளது என்றார்.

இந்தக் கன்றுகள் குடாநாட்டின் பிரதேச செயலாளர்கள் ஊடாக பயனாளிகளுக்கு தற்போதும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன

## கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கான அறிவித்தல்

### கிளிநொச்சிமாவட்டவணிக.கைத்தொழில்.வேளாண் ஒன்றியம்.

(Kilinochchi District Chamber of Commerce, Industry & Agriculture)

## இலவச பயிற்சிநெறி

கிளிநொச்சிமாவட்டவணிக,கைத்தொழில்,வேளாண் ஒன்றியம் பின்வரும் பயிற்சிகளை ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சர்வதேசதொழிலாளர் அமைப்பு (பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டத்தினுடாக மக்களை வலுவூட்டல்)(I.L.O.LEEDS)திட்டத்தின் அனுசரணையுடன் இலவசமாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. விவசாய இயந்திரங்கள்:- உழவு இயந்திரம்,அதன் உப பகுதிகள், நெல் அறுவடை செய்யும் இயந்திரம், இவற்றுக்கான இயக்கும் முறை, பழுதுபார்த்தல் சம்பந்தமான பயிற்சிகள்.
2. நெல்பதனிடும் ஆலை:- இவற்றுக்கான இயக்கும் முறை, பழுதுபார்த்தல், நல்லதரமான அரிசியினை தயாரித்தல் சம்பந்தமான பயிற்சிகள்.

மேற்படி பயிற்சியினைப் பெறவிரும்பும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தோர் தமது சுயவிவரங்களைத் (Bio Data)தயாரித்து உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

*தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:*

**கிளிநொச்சிமாவட்ட வணிக,கைத்தொழில்,வேளாண் ஒன்றியம்,**

**இல 57, புகையிரதநிலைய வீதி,கிளிநொச்சி.**

**தொலைபேசி/தொலைநகல் இல: 021 228 5601**

*மின்னஞ்சல் முகவரி:* kdccia2011@gmail.com

சி.நவரெத்தினராஜா

செயலாளர்.

## ஊக்குவிப்புப் படி வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.12

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மாதந் தம் மூன்றுலட்சம்ரூபாவுக்கு மேல் நுகர்ச்சிப் பொருள்கள்விற்பனை செய்யும் கிளை முகாமையாளர்களுக்கு ஊக்குவிப்புப் படி வழங்கப்படும். ஒவ்வொரு மாதமும் ஊக்குவிப்புக்கள் வழங்க திட்டமிட்டுள்ளதால் அதற்கு ஏற்படும் செலவை சங்கத்தின் இயக்குனர் சபை பொறுப்பேற்கும்.

இவ்வாறு சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப்பணியாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நஷ்டத்தில் இயங்கியதால் மூடப்பட்டுள்ள கற்குளி, வேரக்கேணி, வேம்பிராய், சாவகச்சேரி வடக்கு ஆகிய கிளைகளையும் விரைவில் திறக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுமெனவும் தெரிவித்தார்.

## விவேகானந்தர் நினைவு நாள்காட்டி

தென்மராட்சி,ஜன.12

தென்மராட்சி ஓய்வூதியர் நலன்புச் சங்கத்தினர் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு நிகழ்வை முன்னிட்டு நாள்காட்டியை வெளியிட்டுள்ளனர்.

நாள்காட்டி வெளியீட்டு நிகழ்வு நேற்று சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் இடம் பெற்றது. சங்கத்தால் வருடா வருடம் வெளியிடப்படும் நாள்காட்டியில் பெரியார்களின் படம் வெளியிடப்பட்டு வருவதுடன் இம்முறை விவேகானந்தரின் படம் பொறிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலவதி நடராஜா (நயினாதீவு)



நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா, வேப்பங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலவதி நடராஜா 11.01. 2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வ.வீ.நடராஜா (கண்டி முதலாளி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பார்பதிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, செல்லமுத்து, சிவக்கொழுந்து, இராசம்மா, பொன்னம்பலம் மற்றும் தாமோதரம்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பவளமலர் (ஜேர்மனி), மாணிக்கவாசகன் (நோர்வே), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), கிரிதாஸ், யாழினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவகுமாரன் (ஜேர்மனி), அனுஷா (நோர்வே), கயல்விழி (பிரான்ஸ்), சரிதா, விவேகானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தாட்சாயினி, தர்சன், தனுஸன், சஜந்தா, சஜந்தன், சர்வின், ஹஸ்வின், ஹஸ்வி, ஜனுஷா, டிலோசன், மயூரி, தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மன்னார் வீதி, வேப்பங்குளம்,**
**வவுனியா.**
**T.P.077 2200624,**
**024 222 0325**

(27614)(2.6.7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
23.08.1944

இறைவன் திருவடியில்
14.12.2012

### அமரர் சதாசிவம் பத்மநாதன் (பப்பா)

(முன்னாள் பங்காளர்-விஜயா ரேடிங் ஏஜன்சி, 5ஆம் குறுக்குத் தெரு,கொழும்பு.)

கடந்த 14.12.2012 இல் சிவபதமடைந்த விதானையார் வீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த அமரர் சதாசிவம் பத்மநாதன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (12.01.2013) சனிக்கிழமையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (13.01.2013) ஞாயிற்றுக்கிழமையும் லண்டனில் நடைபெறவுள்ளன.

மேலும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை ஏழாலை களவாவோடை வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் 13.01.2013 காலை 9.00 மணிக்கு விசேட பூசை நடைபெற்றுத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

உறவினர்,நண்பர்களை மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

30,விதானையர் வீதி,
சுண்டுக்குளி.

குடும்பத்தினர் சார்பாக
வி.சச்சிதானந்தன்.

(28230)(5.6.7)

Study in the UK / Canada / Australia / New Zealand
April/May INTAKES IN PROGRESS
SETTLEMENT VISA
(கணவன்/மனைவி) மூலம் UK, Australia, Canada, U.S.A செல்பவர்களுக்கான வீசா தொடர்பில் ஆவணங்கள் வெற்றிகரமாகச் செய்து தரப்படும்
TOURIST VISA / FAMILY VISIT VISA
உட்பட அனைத்து நாடுகளின் வீசாவுக்களுக்குமான ஆலோசனைகளும், ஆவணங்களைத் தயார்படுத்துதல் தொடர்பில் நிபுணத்துவமான சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.
100% வீசா உத்தரவாதம் Guaranteed
Eisc EXPRESS
INTERNATIONAL STUDIES & CONSULTANTS
30-1/14, W.A.De Silva Mawatha Colombo-06
(Above Hotel Green Palace)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin-0777 222 422 Selva-0714 299 935
Web: www.expresslanka.com

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் ஆறுமுகம் தெய்வேந்திரன் (தேவன்)



தோற்றம்
19.06.1949

மறைவு
13.12.2012

கடந்த 13.12.2012 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் ஆறுமுகம் தெய்வேந்திரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த10.01.2013 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்றன வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.01.2013) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்தக் கிரியைகளில் கலந்துகொண்டு அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எமக்கு பேருதவியாகவும் ஆறுதலாகவும் இருந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

[இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்]

இல.17, சிவன் புது வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தெ. ஸ்ரீதனபதி (தனா-மகன்),
ஆறுமுகம் (குடும்பத்தினர்),
கணபதிப்பிள்ளை (மாமா - குடும்பத்தினர்).

(28226)(45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50,821 பட்டதாரிகளுக்கு இன்று நிரந்தர நியமனம்

## ஜனாதிபதி மஹிந்த வழங்குவார்

கொழும்பு,ஜன.12

50,821 பட்டதாரிகளுக்கு அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று சனிக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள விசேட நிகழ்வில், இவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

இவ்வாறு தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அமைச்சில் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

10,000 தமிழ் பட்டதாரிகள் உட்பட 50,821 பேருக்கும் விரும்பிய இடங்களில், விரும்பிய துறைகளில் நிரந்தர நியமனம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சரவை அனுமதிக்கு அமைய 50,821 பட்டதாரிகளும் கடந்த வருடம் அரசசேவையில் இணைக்கப்பட்டு ஒருவருட கால பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

அந்தவகையில் ஒரு வருட பயிற்சியைப் பூர்த்தி செய்த அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

பயிற்சிகளைப் பெற்ற அனைத்து பட்டதாரிகளுக்கும் இந்த முறை மீண்டும் விண்ணப்பம் கோராமல், நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தாமல் நிரந்தர நியமனம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதுதொடர்பாக முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. கடந்த காலங்களில் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் போது காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

பட்டதாரிகளை அவர்களின் மாவட்டங்களிலேயே நிய மிக்க அரசு தீர்மானித்துள்ளது.

மூன்று இனங்களையும் சேர்ந்த மூன்று பட்டதாரிகளுக்கு முதலில் ஜனாதிபதி மஹிந்த நிரந்தர நியமனக் கடிதங் களை வழங்கி வைப்பார்.- என்றார். (ச)

# இணைப்புச் செயலாளர்களை பதவி விலக்கினாலும் விசாரணை செய்க

## பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள்

கொழும்பு,ஜன.12

இணைப்புச் செயலாளர்களை அமைச்சர் மேர்வின் சில்வா உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பதவி விலக்கிய போதிலும், அவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு களனி பிரதேச சபை உறுப்பினர்கள் பொலிஸ் மா அதிபரிடம் மனு மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய இவர்கள் உடனடியாக பதவி நீக்கியமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பேலியகொட மீன் சந்தையில் கப்பம் பெறல் உட்பட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய அமைச்சரின் ஆதரவாளர்களே திடீரென அவர்கள் வகித்த பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சரின் ஆதரவாளர்களிடம் சட்டவிரோத ஆயுதங்களும் காணப்படுகின்றன.

தொகுதி அமைப்பாளர்களாக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பெண்கள் கள்ளச் சாராயம் மற்றும் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு கையளிக்கப்பட்டது அரசமைப்பு திருத்தமே

## அது வியாக்கியானம் அல்ல என்கிறார் கெஹலிய



நாடாளுமன்றம் அரச மைப்பை பலமானதாக ஏற்றுக்கொண்டுள்ளது. உயர் நீதி மன்றத்துக்கு மட்டுமே அரச மைப்பை வியாக்கியானம் செய்யமுடியும்

கொழும்பு,ஜன.12

உயர்நீதிமன்றத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு கையளிக்கப்பட்டது அரசமைப்பு வியாக்கியானம் அல்ல. அரசமைப்புத் திருத்தமாகும். அதனை சபாநாயகர் உட்பட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனையடுத்தே அது தொடர்பிலான விவாதம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றம் அரசமைப்பை பலமானதாக ஏற்றுக்கொண்டுள்ளது. உயர் நீதிமன்றத்துக்கு மட்டுமே அரசமைப்பை வியாக்கியானம் செய்யமுடியும் என்பதனை ஏற்றுக்கொள்கின்றது.

ஆனால், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழு விவகாரத்தில் உயர்நீதி மன்றம் அரசமைப்பை வியாக்கியானம் செய்யவில்லை. அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசமைப்பை திருத்துவதற்கான முழு அதிகாரமும் நாடாளுமன்றத்துக்கே இருக்கின்றது.

நீதிமன்றக் கட்டமைப்பில் என்ன நடந்துக் கொண்டிருக்கின்றது. பிரதம நீதியரசரின் நடத்தையை பார்த்தால் நீதித்துறை வரலாற்றிலேயே இவ்வாறான நிலைமைகள் ஏற்படவில்லை.

நீதிமன்ற விடுமுறை காலத்தில் ரிட் மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. நீதிபதிகள், நீதியரசர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பு இருக்கின்றது. தெரிவுக்குழு விவகாரம் தர்க்கிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் சட்டநிபுணர்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டது.

எனவே அமைச்சராக அல்ல இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் நீதித்துறையை அரசியல் மயப்படுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.- என்றார். (ச)

# விபத்தில் ஒருவர் சாவு: ஏழு பேர் காயம்

கொழும்பு,ஜன.12

சிலாபம் - புத்தளம் வீதி தெதுருஓயாவுக்கு அருகில் இடம்பெற்ற வான் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளது டன், ஏழு படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இராணுவ வைத்தியசாலையில் சாரதியாகப் பணியாற்றும் ஒருவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

அநுராதபுரத்தில் இருந்து கொழும்புக்கு படையினரை ஏற்றிவந்த வான் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதாலேயே விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாடு திரும்ப முயற்சிக்கின்றனர்

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,ஜன.12

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்வதற்கு முயற்சித்து வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரிசையில் நின்று முதலீடு செய்ய ஆர்வம் காட்டுவதாக அரசு பிரசாரம் செய்கின்றது. எனினும் இங்கு எஞ்சியுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களும் திரும்பிச் செல்கின்றனர்.

சட்டம் ஒழுங்கு இல்லாத நாட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்க்க முடியாது.

நாட்டில் ஜனநாயகம் மற்றும் சட்டம் ஒழுங்கு நிலைமைகளில் பாதிப்பு ஏற் பட்டிருந்தால், ஒருபோதும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்யமாட்டார்கள்.

பொருளாதாரத்தை மீளமைக்கும் நிபந்தனையுடனேயே சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும்.- என்றார். (ச)

# சட்டத்தரணிகளின் போராட்டம் தொடர்ந்தால் முழுமையான ஆதரவு

## சரத் பொன்சேகா சொல்கிறார்



கொழும்பு,ஜன.12

நீதிமன்றின் சுயாதீனத் தன்மையைப் பேணிப் பாதுகாக்க சட்டத்தரணிகள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தினால் அதற்கு முழுமையான ஆதரவு அளிக்கப்படும்

இவ்வாறு ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவோர் அச்சுறுத்தப்படுகின்றனர்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் அமைச்சர் ஒருவரின் தேவைக்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பொலிஸார் இந்த விசாரணைகளை வேறு திசைக்கு திருப்பியுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாவிட்டால் அரசு ஆட்சியை விட்டு விலக வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கையை ரத்து செய்த மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு நன்றி கூறுகிறேன்.-என்றார். (ச)



அம்பாறை , நிந்தவூர் அல் - மஷ்ஹர் பெண்கள் உயர்தர பா[illegible] நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த [illegible] அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

# தப்பிய கைதிகளில் மூவர் மாட்டினர்

கொழும்பு,ஜன.12

அவிசாவளை விளக்கமறியல் சிறையில் இருந்து தப்பிச் சென்ற 10 கைதிகளில் மூவர் கொஸ்கம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர்கள் நேற்றுமுன்தினம் இரவு கொஸ்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அவிசாவளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். அவிசாவளை விளக்க மறியல் சிறைச்சாலையில் இருந்த 10 கைதிகள் பாதுகாப்பு அதிகாரிகள் மூவரை தாக்கிவிட்டு நேற்றுமுன்தினம் அதிகாலை தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீண்ட நாளாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடிவடையும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**இடபம்:** சில நேரங்களில் வெறுப்பாகப் பேசுவீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். வாக்குறுதியை நிறைவேற்ற போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைபட்ட காரியங்களை முடிப்பீர்கள். வாகனச்செலவுகள் நீங்கும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**கடகம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டாரம் விரியும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** உடன்பிறந்தவர்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்று வீர்கள். வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். தாயின் உடல் நிலை சீராகும். மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**நாளை**

மார்கழி -29 ஞாயிற்றுக்கிழமை 13.01.2013
திதி: துதியை மு.இ. 10.35 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.இ. 10.09 வரை
சுபநேரம்: 09.34- 11.04 வரை
ராகுகாலம்: 05.04- 06.34 வரை

**துலாம்:** முடியாமல் போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும்.

**தனுசு:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். சில நேரங்களில் உங்களின் பேச்சு சிலரின் மனதைப் புண்படுத்துவதாக அமையும்.

**மகரம்:** மறைமுக விமர்சனங்களும், தாழ்வுமனப்பான்மையும் வந்து நீங்கும். உதவி கேட்டு உறவினர்களும், நண்பர்களும் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கும்பம்:** பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**மீனம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | | | 4 | |
| | | 2 | 3 | | | 1 | 7 | 6 |
| 3 | | | | 6 | 9 | 5 | | |
| | | | | 4 | 2 | 9 | | |
| 2 | 5 | | 8 | | 7 | | 3 | 4 |
| | | 8 | 9 | 3 | | | | |
| | | 3 | 2 | 5 | | | | 1 |
| 1 | 2 | 6 | | | 8 | 7 | | |
| | 4 | | | | | 8 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 3 | 6 | 5 | 9 | 8 | 1 | 4 |
| 5 | 1 | 6 | 8 | 2 | 4 | 7 | 3 | 9 |
| 9 | 4 | 8 | 3 | 1 | 7 | 2 | 5 | 6 |
| 4 | 9 | 1 | 2 | 6 | 8 | 3 | 7 | 5 |
| 8 | 2 | 7 | 4 | 3 | 5 | 6 | 9 | 1 |
| 6 | 3 | 5 | 9 | 7 | 1 | 4 | 2 | 8 |
| 3 | 5 | 9 | 7 | 8 | 6 | 1 | 4 | 2 |
| 1 | 8 | 2 | 5 | 4 | 3 | 9 | 6 | 7 |
| 7 | 6 | 4 | 1 | 9 | 2 | 5 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## அன்பே.... உமை இழந்து..... இரண்டு ஆண்டுகள் ஆனதோ?



உதயம்
05.08.1956

இறைவனடி
05.01.2011

## அமரர் தம்பிமுத்து சண்முகநாதன்

(முன்னாள் முகாமையாளர்- சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்)

திதி: பூர்வபக்க பிரதமை [12.01.2013 சனிக்கிழமை]

ஆண்டுகள் இரண்டு ஈரவிழிகள் இன்னும் காயவில்லை
அப்பா இல்லாக்குறை எப்போதும்
தீராது எம் வாழ்வில் - அது
தப்பென்று தெரியாமல் ஏன் போச்சு - எம் இறைவனுக்கு
இதுதான் விதி என்றால் யார்தான் வெல்வார் இவ்வுலகில்
சிவபதமடைந்த எம் குல தெய்வத்தை என்றும் பூசிப்போமாக.

*உங்கள் நினைவோடு என்றும் அஞ்சலிக்கும்*

தாமோதரம்பிள்ளை வீதி,
சப்பச்சிமாவடி, சாவகச்சேரி.

அன்பு மனைவி, மகள், மகன், மருமகன்,
பேரன், சகோதரர்கள், நண்பர்கள்.

(சி/2874)(2.6.7)

## ECOSTEEM PVT. LTD.
மீள்எழும் சக்திக்கான சேவை வழங்குநர்



சூரிய பகவானுக்கு நன்றி கூறும் தைத் திருநாளில்
எமது வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும் மற்றும் அனைவருக்கும்
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்

"இலவசமாக மின்சாரம் தடையின்றி கிடைக்கும்போது, ஏன் மாதாந்தம் பணம் செலுத்த வேண்டும்? "
உங்கள் தேவைக்கு ஏற்ப சூரிய மின்வலு தீர்வை எம்மால் வழங்கமுடியும்...

இகோஸ்டிம் சூரிய மின்வலு (ESP) - Stand Alone

- இலவச மின்சாரத்தை நீங்களே உற்பத்தி செய்யலாம்
- உங்கள் தேவைக்கு ஏற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்
- அதிக ஆற்றல்மிக்க, உத்தரவாதமுள்ள சூரிய மின்கலங்கள், இன்வேட்டர்கள், பற்றறிகளால் ஆனது
- உத்தரவாதம் வழங்கப்படும்



இகோஸ்டிம் சூரிய மின்வலு (ESP) -Net metering



- இலவச சூரிய மின்சக்தியால், உங்கள் மின்சக்தி பாவனைக்கு கொடுப்பனவு செய்யலாம்
- 20 வருடங்களுக்கு மேல் மின்சக்தியை வழங்கக்கூடியன
- அதிக ஆற்றல்மிக்க சூரிய மின்கலங்கள், நீண்ட கால உத்தரவாதமுள்ள மைக்ரோ-இன்வேட்டர்களால் ஆனது

இகோஸ்டிம் சூரிய நீர்பம்பி (ESW)



- சூரிய ஒளி உள்ள போதெல்லாம் நீர் இறைத்துக்கொள்ளலாம்
- அதிக ஆற்றல்மிக்க சூரிய மின்கலங்கள்,
- நம்பகரமான DC நீர்பம்பி
- உத்தரவாதம் வழங்கப்படும்

மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்...

காட்சி அறை இல.203

யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி 2013
18, 19 & 20 தை 2013
துரையப்பா விளையாட்டரங்கு
யாழ்ப்பாணம்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 071- 4546810 / 071- 4546811
No.127, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். அலுவலகம்: 021-2227689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தாய் தன் பிள்ளையை வதைப்பது போன்றே இலங்கை அகதிகள் மீதான இந்தியக் கவனிப்பு

தாயே தன்னுடைய குழந்தையை வதைப்பது போன்று இந்திய அரசு இலங்கை அகதிகளை நடத்துகின்றது. இதற்கு ஒரு விடிவு காலம் வந்தே ஆக வேண்டும் என்ற உணர்வு இந்திய மக்கள் அனைவருக்கும் குறிப்பாக தமிழர்கள் அனைவருக்கும் இயற்கையாகவே வரவேண்டிய ஒன்று.

பாரதிய ஜனதா மாநிலத் தலைவர் பொன் ராதா கிருஸ்ணன் ஊடகவியளாளரிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் 23 பேர் தங்களைத் திறந்த வெளி முகாமுக்கு மாற்றக் கோரி செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உண்ணாவிரதத்தைக் கடந்த 23ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்தனர்.

அதில் 14 பேர் வாபஸ் பெற்று அரசு ஆஸ்பத்திரியில் இருந்து சிறப்பு முகாமிக்குத் திரும்பினர். 9 பேர் செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களைப் பாரதிய ஜனதா மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டு உடல் நலம் விசாரித்தார்.

அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செங்கல்பட்டில் இருக்கக்கூடிய முகாமில் தேவையற்ற முறையில் சாதாரண வழக்கில் கூட இலங்கைத் தமிழர்களை கொண்டு வந்து அடைக்கப்படுவது தொடர்கின்றது.

கியூ பிரிவைச் சேர்ந்தவர்கள் தேவையற்ற முறையில் அகதிகளைக் கைது செய்வதும் அவர்கள் மீது வழக்குகள் போடுவதும் நிறுத்தப்பட வேண்டும். தவறான முறையில் கைது செய்யப்பட்ட அத்தனை அகதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் குடும்பத்தோடு சேர்க்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் தவறு செய்தார்கள் என்று உறுதியாக அரசு நம்புவதாக இருந்தால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைவிடுத்து சிறைகளில் அடைத்து அவர்களை வருத்தக்கூடாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (3)



தைப்பொங்கலை முன்னிட்டு மண்பானை, சட்டி, அகப்பை போன்றன யாழ்.நகர் நவீன சந்தைக் கடைகளில் விற்பனைக்காக பெருமளவில் வைக்கப்பட்டுள்ளன. (ம-14)

## தைப் பொங்கல் கலைவிழா

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''தைப்பொங்கல் கலைவிழா'' நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்வார்.

நிகழ்வில் முகிழ்நிலை ஆசிரியர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறும். (3)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தைப்பொங்கல் விசேட பூசை நடைபெறவுள்ளது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சதுர்த்தி உற்சவம் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார். (3)

* * *

யாழ். அன்னசத்திர கடையிற் சுவாமிகள் குருவார அன்ன சத்திர சிவன் ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு தைப்பொங்கல் விசேட பூசை நடைபெறும். (3)

* * *

சித்தன்கேணி நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த தைப்பொங்கல் பெருவிழாவும், தீ மிதிப்பும் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு தீ மிதிப்பும் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு தைப்பொங்கல் நிகழ்வும் நடைபெறும்.

இந்த ஆலயம் கடந்த 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (3)

# மருதடி விநாயகர் ஆலயத்தில் திருட்டு

அடைமழையைப் பயன்படுத்தி இரவு நேரம் ஆலயக் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர் மின்சாரத்தைத் துண்டித்துவிட்டு உண்டியல் பெட்டியை உடைத்து பணத்தைத் திருடிச் சென்றுள்ளார்கள்.

இந்தத் திருட்டுச் சம்பவம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

ஆலயத் திருப்பணி நடைபெறுவதால் வீதியால் செல்லும் பெரும்பாலான மக்கள் இந்த உண்டியல் பெட்டியில் பணத்தைப் போடுவார்கள். மேற்படி உண்டியல் பெட்டியில் சேரும் பணம் வாரத்தில் வெள்ளிக்கிழமை மட்டும் தர்மகர்த்தா சபையினரால் திறக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுவது வழக்கம்.

இந்தத் திருட்டுப் பற்றி மானிப்பாய் பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்பும் ஆலயத்துக்குள் சென்ற திருடர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பிள்ளையாரின் வெள்ளி முடியைத் திருடிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (3-115)

**கீரிமலை ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான புனருத்தாரண சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்**

1) இடம்: ஆலய முன்றில்
2) காலம்: 14.01.2013 பி.ப 2 மணி (தைப்பொங்கல் தினத்தன்று)

சகல உபயகாரர்கள் ஆலய புனருத்தாரண வேலைகளில் ஆர்வமுள்ளவர்கள், அடியார்கள், அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவஸ்தான புனருத்தாரண சபையினர். (28179)(6.7.11)

**ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 02.05.1943
மறைவு 01.01.2006
அமரர்
சிவப்பிரகாசம் இராசகுலசிங்கம்
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்-வருமானவரித் திணைக்களம்)
திதி: பூர்வபக்க பிரதமை (12.01.2013)

ஆண்டுகள் ஏழுநகர்ந்தாலும் -உங்கள் அழியாத நினைவுகள்
நாங்கள் வாழும் வரை என்றும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்,
அன்பு மனைவி (திலகேஸ்வரி).

'தம்பலத்தனை'
துன்னாலை வடக்கு,கரவெட்டி.
(சி/5438)(5.6.7)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

நல்ல இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 911 6052, 075 041 2670. (28247)(6.7.4)

**மணமகள் தேவை**

82 இல் பிறந்த, 4 இல் செவ்வாய், 10½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகன் வந்துள்ளார்.படித்த அழகான மணமகள் தேவை.
82 இல் பிறந்த, 8 இல் செவ்வாய், 28½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.,
83இல் பிறந்த, 4 இல் செவ்வாய், 52 ¾ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
85 இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல், 24 பாவமுடைய, ஜேர்மனி பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு ஜேர்மனியில் அல்லது உள்நாட்டில் படித்த அழகான மணமகள் தேவை.
77இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல், 45¼பாவமுடைய, லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
தொடர்பு: நல்லூர் திருமண சேவை,இல.435/3,கோவில் வீதி, நல்லூர்.(கந்தன் கருணைக்கு அருகில்) T.P:0776070862 (28125)(6.7.4)

**விற்பனைக்குண்டு**

Kubota Combine harvester (அறுவடை இயந்திரம்) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 4397013, 071 582 5239. (28137)(6.7.4)

**காணி விற்பனைக்கு**

நாவலர் வீதியில் 2¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. கிணறும், நான்கு பக்கமும் மதில்களும் உண்டு.
தொடர்பு:- 0776146434 (28236)(5.6.11)

**காணி விற்பனைக்கு**

பிறவுண் வீதி,கொக்குவிலில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0771737144. (28173)(6.7.4)

**கருங்கல் விற்பனைக்கு**

ABC ,¾" , கிறவல் போன்றவை விற்பனைக்கு உண்டு.விநியோக வசதியும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: அஜித்
0716561202, 0776258995 (28240)(6.7.4)

**தென்னிந்திய புகழ் அர்ச்சனா அக்கடமியின்..... ஆடைகளில் அச்சுக்கலை பயிற்சி - வவுனியாவில்**

Manual Fabric Screen Printing



காலை 10 மணி முதல் பி.ப 4 மணி வரை
ஜனவரி 19, 20 ஆம் திகதி (சனி, ஞாயிறு)





55, கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா.
பதிவுகள், விவரங்களுக்கு: 077 890 4131, 077 728 3192, 0715863151 (27972)(6.7.11)

**நீங்காத நினைவுகளுடன் நான்காம் வருட நிறைவினில்....**



இதயம் நிறைந்த நாள் 09.10.1989
உதிரம் உறைந்தநாள் 12.01.2009
செல்வி சாளினி தேவராஜா
(யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் - வர்த்தக பிரிவு 2008)


எங்களின் இதயத்தின் இதயமே.....
தேவன் படைத்த தேவதையே.....
தேடுகின்றோம்.... அம்மா....
மண்ணைவிட்டு விண்ணுக்குச் சென்றாயோ?.....
எம்கண்களை ஈரமாக்கி? நம் நெஞ்சத்தைப் பாரமாக்கி??
உன் நினைவுகளையே வரமாக்கி வாழ்கின்றோம்???
உன் பிரிவு உயரமான துயரமம்மா
துயரமே நம் வாழ்வம்மா....
எம் மனங்களில் இன்னும் நீயும் மரணிக்கவில்லை
தினமும் கணமும் எம் உள்ளங்களில் உயிர்க்கின்றாய்
துடிக்கின்றோம் உன் ஆன்மா அமைதிபெற
நிதமும் அனுதினமும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.
- நினைவுகளோடு உனைப் பிரியாமல் வாடும், வாழும்,
அப்பா, அம்மா, தம்பி.
இல.28, மத்தியூஸ் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலலும், 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்பு, பண்பு, பாசம் ஆகிய குணங்களுடன் விளங்கிய அருட்பெருஞ் சோதியில் சங்கமித்த எமது குடும்ப விளக்கு அணைந்த செய்தி அறிந்து உடன் உதவியவர்களுக்கும் எமது துன்பத்தில் பங்கு கொண்டும் இல்லத்துக்கு வருகை தந்து அஞ்சலிகள் செலுத்திய அன்புள்ளங்களுக்கும், உற்றார், உறவினர், அயலவர், சக நண்பர்கள், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், பணிப்பாளர், ஊழியர்கள், சாரதிகள் மற்றும் அன்னாரின் மறைவின்போதும், மறைவின் பின்னரும் அவசர உதவிகளை முன்னின்று புரிந்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஊழியர்கள் மற்றும் சாரதிகள் சங்கத்தினருக்கும், தொலைபேசி மூலம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து அனுதாபம் தெரி வித்தவர்களுக்கும், ஆறுதல் வார்த்தை கூறி எம்மைத் தேற்றியோருக்கும், கண்ணீர் அஞ்சலித் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டவர்களுக்கும், அஞ்சலி உரையாற்றியோருக்கும் எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் கடந்த 13.12.2012 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சோமசுந்தரம் கஜேந்தி ரன் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (12.01.2013) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற இருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



## அமரர் சோமசுந்தரம் கஜேந்திரன்

(சாரதி - உளநல வைத்திய பிரிவு, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்)

தோற்றம் 04.06.1978

மறைவு 13.12.2012

## குடும்பத்தினர்.

சோமசுந்தரம் (செல்வம் டீசல் எஞ்ஜினியர்ஸ் திருத்துனர்)

மகிழடி வீதி, கோப்பாய்.

(28248)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

HD-XXXX தொடரிலக்கமுடைய Toyota camy கார் விற்பனைக்குண்டு
(Reverse camera, allow weal, DVD player, TV, silver color)
மேலதிக விபரங்களுக்கு 0773747825,0212228984
(சனி,ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம்)



## கண்ணீர் அஞ்சலி

தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய விரிவுரையாளர் செல்வி.ப. சிவசித்திரா அவர்களின் அன்புச் சகோதரி

**செல்வி.ப.கலாரஞ்சிதம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பிராந்திய நிலையம்,
யாழ்ப்பாணம்

(28190)(சி)

இணைப்பாளரும் விரிவுரையாளர்களும்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 * 05 * 1960



இறப்பு 28 * 12 * 2008

**சேனாதிராஜா தயாளன்**
(மின்சாரசபை ஊழியர், சுன்னாகம்)

பாசமுடன் எம்மை வளர்த்து
பரிவுடன் வழிகாட்டிய
பாசமிகு தந்தையே
ஆண்டுகள் நான்கு என்ன
நாற்பது ஆனாலும் என்ன
நானிலம் உள்ளவரை நாம்
உம்மை மறவோம் அப்பா!

தற்காலிக முகவரி:
C1/1 சென்றல் றோட்,
கொழும்பு-12

நிரந்தர முகவரி:
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(ஏ5489)(5)

குடும்பத்தினர்.

## மரண அறித்தல்



**சுப்பிரமணியம் மணிமேகலை**
**(மணி அக்கா)**

தம்பசிட்டி புலோலி மேற்கை பிறப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மணிமேகலை (மணி அக்கா) கடந்த (08.01.2013) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார்காலஞ்சென்றசட்டத்தரணி வி.க. சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கிருஸ்ணபிள்ளை - சிவபாக்கியம் தம்பதியனரின் சிரேஷ்ட புத்திரியும், இந்துமதி விவேகானந்தன், காந்திமதி காந்தி, சிவகாம சுந்தரி, நடராஜா, சகுந்தலா, கனகரத்தினம், சாந்தகுமாரி - சிறிஸ்காந்தன், சூரியகுமாரி சிவராஜா, நவமணி- சோதிலிங்கம் ஆகியோரின் அன்புத்தாயும், டாக்டர் கும்பேசன், காலஞ்சென்றவர்களான கண்ணகை (ஆசிரியை), பொன்னம்மா (ஆசிரியை) மற்றும் மகேந்திரன், அமிர்தவல்லி, டாக்டர் மண்டலேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிஸை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியை நாளை (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று கல்கிஸை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

119 2/3 - டபிள்யு ஏ சில்வா
மாவத்தை
வெள்ளவத்தை,
கொழும்பு 06
தொ.பே. 011 2365487
077 1517204

(C/5493)

தகவல்:
பிள்ளைகள்

# ஆரம்பப்பிரிவு தனியாக

கிளிநொச்சி,ஜன.12

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பளை மத்திய கல்லூரி ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளது.

இதனால் இதுவரை காலமும் இந்தப் பாடசாலையுடன் இணைந்திருந்த ஆரம்பப் பிரிவு தனியாகச் செயற்படவுள்ளது.

பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் என்ற பெயரும் இதற்குச் சூட்டப்பட்டுள்ளது.

ஆரம்பப் பிரிவில் தற்போது 350 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காணி விற்பனை

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகில் லோட்டன் (Lawton) வீதியில் மூன்று (03) பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. வாங்கவிரும்புவோர் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி: 011 2362498

## டொல்பின் வான் விற்பனைக்கு

நிறுவனமொன்றிற்கு மாதக்குத்தகைக்கு ஓடிக்கொண்டிருக்கும் நல்லநிலையில் உள்ள GF-XXXX இலக்க வான் ஓட்டத்துடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 9399525

## விற்பனைக்கு

59-XXXX எனும் இலக்கமுடைய டொல்பின் LH 102, 5கதவு, டுவல் A/C, எலோ வீல், HM சீற்செற் வெள்ளை நிறம் மற்றும்(HONDA CD125)(GG-XXXX) விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 1846137

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேமன் சப்பேட் அலசேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும்,45நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும், வண்டம், சிங்கி, மணித்தாரா, வெள்ளடியன், முயல், கினிவிக் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- லி.மயூரன். ஆயக்கடவை பிள்ளை யார் கோயில் முன்பாக, பூதராயர் கோயிலடி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (டயலொக் ரவர் அருகில்)

## வீடு வாடகைக்கு

யாழ். கோயில் வீதியில் UN நிறுவனம் பாவித்த 07 அறைகள் கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரச/தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0776510696

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியில், வீட்டுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)

T.P- 0771942050,
0775591366

18010(16)

## மணமகள் தேவை

யாழ், இந்து கௌரவ குடும்பம், 1984, பூரட்டாதியில் பிறந்த,செவ்வாய்க் குற்றம் அற்ற கிரக பாவம் 15 உடைய, யாழ்ப்பாணத்தில் உயர் அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு, பெற்றோர் படித்த, அழகிய மணமகளை உள்நாட்டில் தேடுகின்றனர்.
தொடர்பு :0778840176 (28187)(6.711)

## தவறிவிட்டது

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைச் சேர்ந்த இராசரத்தினம் ஜெயமாலா என்பவருடைய தே.அ.அ (757483564V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு :0779639532

(28137)(6.711)

## 2 ஆம் ஆண்டுநினைவ லைகள்

நேற்றைய உதயனின் 16 ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் "செல்லையா இராசா" எனும் பெயரை "செல்லப்பா இராசா" என வாசிக்கவும்.

(28234) (6.7.4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி ஆர்த்திகா தர்சனின் அன்புத் தந்தை

**நடராசா சிவகுமார்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சோமஸ்கந்தப்பெருமானை வேண்டுகின்றோம்.

யா/ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி
புத்தூர்

ஆசிரியர் கழகம்.

(C/28193)

## யாழ் நகரில் இயங்கும் கிளினிக்குக்கு

1. மேற்பார்வையாளர் (Super visor) தேவை.
   ஆண் / பெண் : முன் அனுபவம் தேவை. அல்லது அரசாங்க சேவையில் ஓய்வு பெற்றவர்கள்.
2. Accounts Audit செய்யக்கூடிய பெண் தேவை.
3. Computer Typing செய்யக்கூடிய பெண்தேவை.
4. அனுபவம் உள்ள மருத்துவ தாதியர் தேவை.
   (தாதியர் அடிப்படைச் சம்பளம் - 12,000/=)

விண்ணப்பத்தில்: - தெளிவான முகவரி
- தொழில் செய்யும் இடம்
- தொலைபேசி இலக்கம் குறிப்பிட்டு அனுப்பவும்.

விளம்பர இல. 4429
C/O உதயன்,361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(28249)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி

**குமாரசாமி தருமராஜா**
(சிரேஸ்ட ஊழியர், அங்குசபாச பிள்ளையார் மரக்காலை)



எமது நிறுவனத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி எமக்கு தாயன்போடு சேவைகள் செய்து தந்த தருமண்ணை என எங்கள் எல்லோராலும் அழைக்கப்பட்ட எங்கள் பாசத்துக்குரிய தருமராஜா அவர்களை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(c/54488)(6.7.11)

உரிமையாளரும் ஊழியர்களும்
அங்குசபாச பிள்ளையார் மரக்காலை
(மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்)

## மரண அறிவித்தல்

**குமாரசாமி தருமராஜா**
(ஊழியர்-அங்குசபாச பிள்ளையார் மரக்காலை,யாழ்ப்பாணம்)



கொக்குவில்,தலையாழியைப் பிறப்பிடமாகவும் பூநகரி 4ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் அங்குசபாச பிள்ளையார் மரக் காலையின் நீண்டகால ஊழியருமான குமாரசாமி தருமராஜா 10.01.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி- சந்தன அம்மாள் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்-சிவகாமி தம்பதியரின் மருமகனும், வசந்தா, இந்திரா,நிர்மலா,சந்திரா, காலஞ்சென்ற குகராஜ் ஆகியோரின் சகோதரனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், சுஜந்தா,முகுந்தன்,துஷிகா,தீபா,டயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரமேஸ்,சிசாந்தினி,சுரேஸ்குமார் ஆகியோரின் மாமனும், மகிழ்ஜினி,தீட்சிகன், விபிசிகன், கஸ்னிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பூநகரி,4ஆம் கட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈணச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் கட்டை,
பூநகரி.

(சி/5487)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையற்கரசி நடராசா



துன்னாலை கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி மங்கையற் கரசி நடராசா நேற்று(11.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொடிகாமத்தைச் சேர்ந்த மகாரத்தினம் -பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நடராசாவின் (இளைப் பாறிய கல்விப்பணிப்பாளர்) அன்பு மனைவியும், தேவ ராஜன்(முன்னாள், கட்டடத்திணைக்களம்), தேவராணி(இளைப்பாறிய ஆசி ரியர்), மகேஸ்வரி(இளைப்பாறிய ஆசிரியை), மகேந்திரன் (கணக்காளர்) , சந்தி ரமதி ஆகியோரின் அன்புத் தாயும், தங்கலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை) காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை(இளைப்பாறிய மாவட்ட நீதிபதி), இலட்சுமிகாந்தன் மற்றும் பார்வதி, தில்லைநாதன்(களஞ்சியப் பொறுப்பாளர்), ஆகியோரின் அன்பு மாமியும், கேதீஸ் வரன்(கணக்காளர்), காலஞ்சென்ற நிறை ஞ்சலா, மற்றும் நிறைஞ்சன்(பொறியியலாளர்-அமெரிக்கா), கேசவன், ரேவதி, துஸ் யந்தி(கணக்காளர்), பவித்திரா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.01.2013)சனிக்கிழமை மு.ப. 11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புட்டிதூ மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி. தொ.பே.077 7302917

தகவல்:
ந.தேவராஜன்.

## செயலமர்வு

கல்முனை,ஜன.12

நீதியமைச்சால் ஏற்பாடு செய்யப் பட்ட மத்தியஸ்தம் தொடர்பாக அறி வூட்டும் செயல மர்வு நேற்றுமுன் தினம் வியாழக் கிழமை கல்முனைப் பிரதேச செயலகத் தில் இடம்பெற்றது.

இந்தச் செயல மர்வில் பிணக்கு களுக்கான தீர்வு, மத்தியஸ்த சபைகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள், மத்தி யஸ்தம் தொடர்பான நடவடிக்கை களில் பொலிஸாரினதும், கிராம உத்தி யோகத் தர்களினதும் பணிகள் ஆகிய விடயங்கள் குறித்து அறிவூட் டப்பட்டமை குறிப்பி டத்தக்கது.

## வெள்ளநீர் வழிந்தோட நடவடிக்கை

ஏறாவூர்,ஜன.12

ஏறாவூர் நகரில் வெள்ள நீரை வழிந் தோடச் செய் யும் முயற்சிகள் நேற்று வெள்ளிக்கிழமை ஏறா வூர் நகர பிதா அலி ஸாஹிர் மௌலா னாவின் வழி காட்ட லில் இடம் பெற்று வருகின் றன.

நீரை வழிந்தோடச் செய்வதற் கான முயற் சியில் பெக்கோ இயந்தி ரங்கள் பயன்படுத் தப் பட்டு கின்றன.

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வநாதஐயர் ஜெகதீஸ்வரசர்மா



காரைநகரைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை மற்றும் சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றிய ஆனந்தபவனத்தில் வசித்தவருமாகிய இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்(யாழ்ற்றன் கல்லூரி காரைநகர்) விஸ்வநாதஐயர் ஜெகதீஸ்வரசர்மா நேற்று(11.01.2013) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னாரின்பூதவுடல் சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றிய தலைமைச் செயலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று (11.01.2013) வெள்ளிக்கிழமை மாலை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (28257)

தலைமைச்செயலகம்
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
சோ.அகிலேஸ்வரி அம்மா
(சகோதரி)
(சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்.

## வல்லிபுரம் பாக்கியம்



நீர்வேலி வடக்கு காமாட்சிஅம்பாள் ஐக்கிய கைத்தொழில் சங்கத்தடியைச் சேர்ந்த வல்லிபுரம் பாக்கியம் நேற்று(11.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரும் மேற்படி சங்க முகாமையாளர் கனகசபை வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், கனகசபேசன், சசிதேவி (ஆசிரியை நீர்வேலி -சீ.சீ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், அன்பழகன், சிறீவதனி ஆகியோரின் அன்பு மாமியும், தெய்வீகன்(மொறட்டுவ பல்கலைக் கழகம்), அபிராமி(யாழ். தொழிநுட்பக் கல்லூரி), ஆர்த்தீபன்(யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), உதயமாலினி, திபாகர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, இராசையா, பூரனம், இராசம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், குமாரசுவாமி, செல்வநாயகம், நடராசா, சின்னராசா J.P ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (12.01.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.2மணியளவில் நீர்வேலி சிவியக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகபவனம்,
நீர்வேலிவடக்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

வடக்கின் மிகப்பிரசித்திவாய்ந்த இக்கண்காட்சி, வடபகுதி மக்களுக்கான மிகச்சிறந்த வர்த்தகக் களமாக அமையவுள்ளது.

உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் சேவைகள், விசேட உணவு வகைகள் மற்றும் குடிபானங்கள், உங்கள் வீட்டுக்கு தேவையான அனைத்து உபகரணங்கள், கட்டட நிர்மாண பொருட்கள் மற்றும் உபகரணங்கள், அழகு-சாதன மற்றும் ஒப்பனை சேவைகள் இக்காண்காட்சியில் இடம்பெறும் பிரதான அம்சங்களாகும்.

அத்துடன் தென்னிலங்கையைச் சேர்ந்த முன்னணி இசைக்குழுவினரின் இசைநிகழ்வுகளுடன் கூடிய களியாட்டமும் ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தவுள்ளது.

தினசரி இசை நிகழ்ச்சி



யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2013

JITF 2013
JAFFNA INTERNATIONAL TRADE FAIR
4th Edition

உடன் இணைந்து
கல்வி யாழ்ப்பாணம்

ஜனவரி 18ம் 19ம் 20ம் திகதிகளில்
மு.ப 10.00 தொடக்கம் பி.ப 8.00 வரை
துரையப்பா விளையாட்டரங்கில்

Organized by
LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
Co-Organized by
FCCISL

In Association with
CCIY
Consulate General of India Jaffna
Supported by
Jaffna Municipal Council
SRI LANKA

Gold Sponsor
dimo TECHNOLOGY அபார ஆற்றல்
Co-Sponsors
Necto
Elephant House
Education Partners
ICBT CAMPUS
CINEC

Official Logistic Provider
Official Insurance Partner
Official Print Media-Tamil
Official Electronic Media
Official Leasing Partner

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கான தடை நீடிப்பு உறுதியானது இந்தியாவில்

## தமிழக அரசின் வர்த்தமானியில் வெளியீடு

சென்னை, ஜன.12

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் விதித்த தடை நீட்டிப்பு உறுதி செய்யப் பட்டுள்ள தாக தமிழக அரசின் வர்த்த மானியில் வெளியிடப்பட் டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படு கொலை செய்யப்பட்ட தைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு விடுதலைப் புலி கள் அமைப்புக்கு இந்தி யாவில் தடை விதிக்கப் பட்டது.

அந்தத் தடை 2 ஆண்டு களுக்கு ஒருமுறை நீடிக் கப்படுகிறது. இறுதியாக 14-5-2012 இல் விடு தலைப் புலிகள் மீதான தடையை நீடித்து மத்திய உள்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டது.

குறித்த தடை நீடிப்பு சரியானதா இல்லையா என்பது குறித்து நீதிபதி வி.கே. ஜெயின் தலைமை யிலான சட்டவிரோத நட வடிக்கைகள் தடுப்பு தீர்ப் பாயம் விசாரணை நடத் தியது.

மேற்படி தீர்ப்பாயத்தின் விசாரணை சென்னை, ஊட்டி, டில்லி ஆகிய இடங் களில் நடைபெற்றது.

ம.தி.மு.க. பொதுச்செய லாளர் வைகோ உள்ளிட் டோர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்புக்கு எதிரான தீர்ப்பாயத்தில் வாதிட்டனர்.

இந்தநிலையில் விடு தலைப் புலிகள் மீதான தடையை நீடித்து மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கையை நீதிபதி எம்.கே. ஜெயின் தலைமையிலான தீர்ப்பாயம் உறுதிப்படுத்தியுள்ளது.

இது குறித்த உத்தரவு தமிழக அரசின் வர்த்தமா னியில் வெளியிடப்பட் டுள்ளது. (வ)

# உள்ளூராட்சிச் சபை காசோலைகளில் தலைவர்கள் கையொப்பமிடத் தடை

தென்மராட்சி,ஜன.12

உள்ளூராட்சி சபை களின் காசோலைகளில் சபைத் தலைவர் கை யொப்பமிடுவது நிறுத் தப்பட்டு சபையில் பணி யாற்றும் இரண்டு அலுவ லர்களின் கையொப்பமிடல் வேண்டுமென அரசி னால் அறிவிக்கப்பட் டுள்ளது.

அரசின் ஆணைப்படி 2012 நவம்பர் 16 ஆம் திகதி இலங்கை சனநாயக சோச லிசக் குடியரசின் வர்த்த மானப் பத்திரிகையின் 2 ஆம் பகுதிக்கு குறை நிரப் பியாக வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கக உளள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடு கள்) சட்ட்டததின் கீழ் இது வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம்: முதன்மை சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவு அதன் 121 ஆம் உட்பிரிவை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் திருத் தப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகள் உள்ளூர் நிதியங்களி லிருந்து பணங்களைக் கொடுப்பனவு செய்வதற் கான எல்லாக் காசோலை களும் அல்லது கட்டளை களும் உள்ளூர் அதிகார சபைகளின் ஆணை யாளரின் அங்கீகாரத்துக் கமைய அந்த நோக்கத் துக்காகச் சபையினர் விசேடமாக அதிகாரமளிக் கப்பட்ட சபையின் தலை வர் தவிர்ந்த இரண்டு அலுவலர்களினால் கை யொப்பமிடுதல் வேண்டு மென்பதுடன் நிதியம் எந்த வங்கியில் தாபிக்கப் படுகின்றதோ அந்த வங்கி சொல்லப்பட்ட நிதியத்தி லிருந்து அவ்வாறு கை யொப்பமிடப்பட்ட எல்லாக் காசோலைகளையும் அல் லது கட்டளைகளையும் செலுத்தலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு மாநகர சபைகள், நகர சபைகள் , பிரதேச சபைகள் ஆகிய வற்றுக்கு தனித்தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. (த-9)


# வருடாந்த பஜனை ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜன.12

பொன்னாலை வரத ராஜப் பெருமாள் ஆலய 41 ஆவது வருடாந்த பஜனை ஊர்வலம் நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆலயத்திலிருந்து புறப்படவுள்ளது.

இந்தப் பஜனை ஊர் வலம் பொன்னாலைச் சந்தி மூளாய் வீதி, மாவடிச் சந்தி யூடாகச் சென்று சித்தன் கேணி மகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்தைச் சென்றடையும்.

அங்கு அன்னதானம் நடைபெற்று பிற்பகல் 2மணிக்கு சுழிபுரம் வீதி வழியாக மீண்டும் ஆல யத்தைச் சென்றடையும். (3)



அச்சுவேலி பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கம், தனது செயற்படும் அங்கத்தவர் களுக்கும், பணியாளர்களுக்கும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பொங்கல் பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்கியது.நேற்றுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சங்கத்தின் தலைவர், செயலாளர், பொது முகாமையாளர் மற்றும் அங்கத்தவர்கள், பணியாளர்களைப் படத்தில் காணலாம்.

# ‘புறநெகும’ திட்டத்தில் நவீன கடைத்தொகுதி

யாழ்ப்பாணம், ஜன.12

வேலணை வங்களாவடி சந்தியில் ‘புறநெகும’ திட் டத்தின் கீழ் நவீன வடிவி லான இருமாடிக் கடைத் தொகுதி அமைக்கப்பட வுள்ளது.

‘புறநெகும’ திட்டத்தில் இதற்கென 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக சபையின் தவிசாளர் சி.சிவ ராசா தெரிவித்தார்.

புதிய கட்டட நிர்மாணிப் புத் தொடர்பாக மாவட்ட மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட உயரதிகாரி களுடன் பேச்சு நடத்தப் பட்டுள்ளது.

இதற்கான அத்திபாரக் கல் நடும் வைபவம் பொங் கல் தினத்தை அடுத்து இடம்பெறும்.

புறநெகும திட்டத்தில் இதற்கென 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதக சபையின் தவிசாளர் சி.சிவராசா தெரிவித்தார்.

வேலணை வங்களா வடியில் அமையவுள்ள கட்டடக் தொகுதிக்கு வட்டு. தென்னிந்திய திருச்சபை பேராயர் அதி.வண. கலா நிதி டானியல் எஸ்.தியாக ராசா 6 பரப்பு காணியை வழங்க முன்வந்துள்ளார். (3-50)

## குர்திஷ்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டுள்ளதாக வும் கூறினார்.

சுட்டுக்கொல்லப்பட்ட இந்தப் பெண்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக் கு தங்களின் தீவிரமான ஆத ரவை வழங்கி வந்தவர்கள். தமிழர்களால் நடத்தப்படும் போராட்டங்களிலும் பங் கேற்று, தமது ஆதரவுக் குரல் களையும் பதிவு செய்தவர் கள். இந்த நிலையில் இவர் களின் இழப்பு பிரான்ஸ் வாழ் தமிழர்களுக்கு அதிர்ச்சி யைக் கொடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த நவம்பர் 8 ஆம் திகதி தலைநகர் பரிஸில் வைத்து தமிழர் ஒருங் கிணைப்புக் குழுப் பொறுப் பாளர் பரிதி துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டது போன்றே, இவர்களும் துப் பாக்கியால் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டுள்ள னர். சுட்டுக்கொல்லப்பட்ட பெண்களுக்குத் தலையி லேயே ஒவ்வொரு குண்டு களும் பாய்ந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (த)

## நாட்டை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் இராணுவத்தி னரை யுத்தக்குற்ற நீதிமன்றத் தில் நிறுத்துவதற்காக இவர் கள் நடவடிக்கைகளை மேற் கொள்கின்றனர். எமது நாட் டின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் இவர்கள் சில நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ள னர். போர் நடத்துவதற்காகப் புலிகளிடம் எவ்வளவோ பணம் இருந்தது. ஆனால், இப்போது தமது நாட்டுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேறுவிதத் தில் அந்தப் பணத்தைப் பயன் படுத்துகின்றனர். திரைப் படம் தயாரிக்கின்றனர்; புத் தகம் வெளியிடுகின்றனர்; அரசியல்வாதிகளைப் பயன் படுத்துகின்றனர். இவர்கள் ஐரோப்பாவிலுள்ள சில நாடு களில் பெரும் பலமுடைய வர்களாக இருக்கின்றனர்.

இவர்களுக்கு வாக்குப் பலம் இருக்கிறது. ஆட்சி யொன்றை ஏற்படுத்தக் கூடிய தகுதி அவர்களிடம் இருக்கிறது. அத்துடன், நம்மை யும், இராணுவத்தினரையும் யுத்தக் குற்றவாளிகளென உலகத்துக்குக் காட்ட பெரு மெடுப்பில் நடவடிக்கை களை மேற்கொள்கின்றனர்.

போர் முடிவடைந்த நிலை யில் இவ்வளவு பெருந் தொகையான இராணுவப் படை எதற்கு எனச் சிலர் வின வுகின்றனர். யுத்தம் முடிவ டைந்த பின்னரும் பெருந் தொகையான இராணுவப் படையை வைத்திருப்பத னால் நாட்டின் பொருளா தாரத்துக்குத் தாக்கம் ஏற்படும் தானே என்றும் சில தூதரகங் களில் உள்ளவர்களும் எம்மி டம் [illegible] என்றார் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ.

## தரம்–5 மாணவர் விவரம் கோரல்

தேசிய சேமிப்பு வங்கி யின் வடபகுதிக் கிளைகளில் சிறுவர் சேமிப்புக் கணக்கை நடைமுறைப்படுத்தி வரும் 2012 ஆம் ஆண்டு தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்த மாண வர்கள் தமது விவரங்களை அந்தந்தக் கிளைகளில் எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன் னதாக பதிவு செய்யுமாறு மேற் தரக் கிளையின் பிராந் திய முகாமையாளர் தெரிவித் துள்ளார். (ம-14)

## கணினிப் பயிற்சியில் இணைந்து கொள்ளலாம்

வடமராட்சி, ஜன.12

பருத்தித்துறை, வடம ராட்சி வடக்கு பிரதேச செய லக விதாதா வள நிலையத் தில் கணினிப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப் பில் பங்குபற்றி பயிற்சி பெற விரும்புவோர் பொலி கண்டியில் உள்ள விதாதா வள நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது. (ம-8)

## பிரான்ஸ்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துரையாடல் நடத்தினார். நேற்று முன்தினம் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற் றது.

இதில், மீனவர்களின் மிகப்பெரும் துறைமுகமான மயிலிட்டித் துறைமுகம் பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக வும் மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட முடியா மல் இருப்பது தொடர்பில் மீனவர் சங்கப் பிரதிநிதிக ளால் தூதுவரிடம் சுட்டிக்காட் டப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பிரான்ஸ் தூதுவர், இலங்கை யில் பிரான்ஸ் அரசின் நிதியுத வியில் இரண்டு துறைமுகங் கள் அமைப்பதற்குரிய நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

சிலாபத்துறையிலும் குரு நாகலிலுமே இந்தத் துறை முகங்கள் நிர்மாணிக்கப்பட வுள்ளன.

பிரான்ஸ் நிறுவன மொன்று பிரான்ஸ் அரசின் நிதியுதவியில் இந்தத் திட் டத்தை செயற்படுத்தவுள் ளது. இதற்குரிய ஆரம்பக் கட்டப் பேச்சுக்களை இலங்கை அரசின் மீன்பிடித்துறை அமைச்சருடன் மேற்கொண்டு வருகின்றோம் என்று தெரி வித்தார். இதன்போது கருத் துத் தெரிவித்த மீனவ சங்கப் பிரதிநிதிகள் எமக்கு ஆழ் கடல் மீன்பிடி நடவடிக்கை களில் ஈடுபட்டு குறித்த படகுகளை நங்கூரம் இடுவ தற்கே மயிலிட்டித் துறை முகத்தை பயன்படுத்தி னோம். குருநகரில் துறை முகம் அமைப்பதால் பிரயோ சனம் இல்லை.

குருநகர் கடல்பகுதி ஆழம் குறைந்த கடல் நீரேரி இதனால் இந்தப் பிரதேசத் தில் ஆழ்கடல் மீன்பிடி நட வடிக்கைகளில் ஈடுபடமுடி யாது. யாழ்ப்பாணத்தின் வடகிழக்கு கடல் பிரதேசம் அதாவது காரைநகர் முதல் வடமராட்சி கிழக்கு வரையான கடல்பிரதேசமே ஆழ்கடல் மீன்பிடிக்கு உகந் தது.

இந்தப் பிரதேசத்தில் ஆழ் கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீன்பிடிப்படகுகளை நங் கூரம் இடுவதற்கு ஏற்றவகை யில் துறைமுகம் அமைத்துத் தர வேண்டுமென்று தெரி வித்தனர். இது தொடர்பில் ஆராய்வதாக பிரான்ஸ் தூது வர் பதிலளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-5)

## புலனாய்வாளர்கள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வருவதாவது:-

யாழ்.நகரின் மையப் பகுதியில் பல தனியார் நிறு வனங்கள் நீண்டகாலமாக இயங்கி வருகின்றன. கடந்த மூன்று தினங்களுக்கு முன் னர் மணிக்கூட்டு நிலைய வீதியிலுள்ள வர்த்தக நிலை யங்களுக்கு சிவில் உடையில் சென்ற இருவர் தம்மை படைப் புலனாய்வாளர்கள் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் யார் ? வர்த்தக நிலையத்தில் எத்தனை பேர் பணிபுரிகின்றனர்? அடை யாள அட்டை இலக்கம் என்ன? தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் யாராவது பணி புரிகின்றனரா? என்ற விவரங் களை அவர்கள் பெற்றுச் சென்றுள்ளனர்.

இதேவேளை, சிவில் உடையில் இருவர் வர்த்தக நிலையங்களுக்குள் விசா ரணை செய்த போது வர்த்தக நிலையங்களுக்கு வெளி யில் ஆயுதம் தரித்த படை யினர் நின்றிருந்ததாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர் பில் வர்த்தக சங்கத்திடம் கேட்டபோது இது தொடர் பில் தமக்கு எந்த முறைப் பாடுகளும் கிடைக்கவில்லை யென்று அவர்கள் தெரிவித் தனர். (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆதிசக்தியின் 'ஏ','பி' அணிகளுக்கு வெற்றி

**ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் 'ஏ', 'பி' அணிகள் பரபரப்பான ஆட்டங்களில் தமது எதிரணிகளை சமநிலை தவிர்ப்பு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தோற்கடித்தன.**

யாழ்ப்பாணம்,ஜன.12

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ் மாவட்ட ரீதியிலான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தின் 'ஏ', 'பி' அணிகள் வெற்றி பெற் றுள்ளன.

முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இந்தப் போட்டியில் இரு அணிகளுமே சமபலத்தோடு மோதிக்கொண்டன. ஒரு அணி கோல் அடித்தால் பதிலுக்கு மறு அணியும் கோல் அடித்தது. மாறி மாறி இரு அணி வீரர்களும் தத்தம் அணி சார்பில் தலா இரு கோல்களை அடித்தனர். இதனால் ஆட்டம் தொடர்ந்தும் சமநிலையிலேயே சென்று கொண்டிருந்தது. எனினும் இந்தச் சமநிலையை மாற்றி அமைத்து ஒரு கோலைப் பெற்று வெற்றியை தம் வசமாக்க இரு அணி வீரர்களும் எடுத்த முயற்சிகள் கடைசிவரைகைகூடவில்லை.

ஆட்ட நேர நிறைவில் இரு அணியினரும் தலா இரண்டு கோல்களை பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்கான 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக 'ஏ' அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இந்த ஆட்டத்திலும் அனல் பறந்தது. றெட்றேஞ்சர்ஸ் அணி இலகுவான வெற்றியை பெற்றுவிடும் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆயினும் சவாலான ஆட்டத்தைஆதிசக்தி விளையாட்டுக் கழக 'பி' அணியினர் வெளிப்படுத்தினர். ஆட்டத்தில் இறுதியில் இரு அணியினரும் தலாஒவ்வொரு கோலினை பெற்றி ருந்தனர். இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே இந்தப் போட்டியிலும்சமநிலை தவிர்ப்பு உதைகள் மூலமே வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் இரு அணிகளும் தமக்கு வழங்கப்பட்ட 5 சமநிலை தவிர்ப்பு வாய்ப்புகளையே சரியாகப் பயன்படுத்தி கோல் அடித்தனர்.

இதனால் தொடர்ந்தும் இரு அணிகளும் சமநிலை யில் நீடித்தன. எனவே இரு அணியினருக்கும் மேலதிக மாக இன்னொரு சமநிலை தவிர்ப்பு வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதில் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் தனக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தினை வீணாக்கியது.

எனினும் ஆதி சக்தி விளையாட்டுக் கழக 'பி' அணி தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை கோலாக மாற்றியது. இதனால் இறுதியில் ஆதிசக்தி விளை யாட்டுக் கழக 'பி' அணி 6:5 என்ற கோல் கணக்கில் றெட்றேஞ்சர்ஸை வீழ்த்தியது. (ங-23)

# மானிப்பாய் இந்து சாதித்தது மண்டியிட்டது யூனியன்

**51 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரியினர் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.**

யாழ்ப்பாணம்,ஜன.12

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் 19 வயதுப்பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியினர் 7 இலக்குகள் வித்தியாசத்தில் யூனியன் கல்லூரி அணியினரை வெற்றி கொண்டனர்.

கடந்த வாரம் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், யூனியன் கல்லூரியும் ஒன்றையொன்று களத்தில் சந்தித்தன.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யூனியன் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதனடிப்படையில் முதல் இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய யூனியன் கல்லூரி வீரர்கள் மானிப்பாய் இந்துவின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சொற்ப ஓட்டங்களுக்குள் இலக்குகளை பறிகொடுக்கத் தொடங்கினர். யூனியன் கல்லூரியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் வந்த வேகத்திலேயே வெளியேற அந்த அணி அதிர்ச்சியில் உறைந்தது. மானிப்பாய் இந்துவின் பந்துவீச்சாளர்களின் ஆவேசத் தாக்குதலால் யூனியன் கல்லூரி 100 ஓட்டங்களை எடுப்பதே சந்தேகமான நிலை தோன்றியிருந்தது. ஆயினும் யூனியன் அணியின் கீர்த்தனனும், அதீசனும் நிலைமையை உணர்ந்து ஆடியதால் ஓரளவுக்கு கௌரவமான இலக்கை அந்த அணி எட்டமுடிந்தது. இறுதியில் சகல இலக்குளையும் இழந்த யூனியன் அணி 132 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கீர்த்தனன் 26 ஓட்டங்களையும், அதீசன் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக ப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில்மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பில் நிக்ஸன் 15 ஓட்டங்களினை கொடுத்து 3 இலக்குகளையும்,சபேசன் 28 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியினர் அபாரமாக ஆடினர். மானிப்பாய் இந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குளையும் இழந்து 214 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணி சார்பாக சஜீவன் 63 ஓட்டங்களையும் , நிக்ஸன் 33 ஓட்டங்களையும், நிதர்ஸன் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். யூனியன் கல்லூரி சார்பாக சித்தாகரன் 60 ஓட்டங்களைக் கொடுத்து 7 இலக்குகளை வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரியினர் மீண்டும் மானிப்பாய் இந்துவின் பந்துவீச்சில் சுருண்டனர். இரண்டாவது இன்னிங்ஸிலும் யூனியன் அணி 133 ஓட்டங்களை எடுத்து தனது ஆட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது. யூனியன் கல்லூரி சார்பாக கீர்த்தனன் 36 ஓட்டங்களையும், மகிழ்ராஜ் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பாக பிரதீபன் 16 ஓட்டங்களைக் கொடுத்து, 3 இலக்குகளையும் சேந்தன் 33 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

51 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரியினர் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். இதனால் யூனியன் கல்லூரி அணி இந்த ஆட்டத்தில் 7 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது.

மானிப்பாய் இந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில் டில்ஸான் 29 ஓட்டங்களையும் நிதர்ஸன் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (ங-38-23)

## பொங்கல் சிறப்பு கூடைப் பந்துப் போட்டி



யாழ்ப்பாணம்,ஜன.12

தைப்பொங்கல் திருவிழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடாத் தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் நாளை மறுதினம் திங்கட் கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம் பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ங-23)

## தேசத்தின் மகுடம் கரப்பந்து இன்று

'தேசத்தின் மகுடம்' கண்காட்சியை முன்னிட்டு விளையாட்டுக் கழக அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்றும், நாளையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் அணிகள் யாவும் இன்று காலை 8.30 மணிக்கு முன்னர் மைதானத் துக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். போட்டிக்கான ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையான ஆண், பெண் இருபா லாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி கூடைப் பந்தாட்ட திடல்களில் நடத்தி வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகள் விவரங்கள் வருமாறு:-

★யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டதிடல்

காலை 8.30 மணி (பெண்கள் பிரிவு )

பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பட்டர் பிளை விளையாட்டுக்கழகம்.

முற்பகல் 9.30 மணி (ஆண்கள் பிரிவு )

கே.ஸி.ஸி.விளையாட்டுக் கழகம் எதிர் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக "பி" அணி.

பி.ப. 2.30 மணி (பெண்கள் பிரிவு )

உடுவில் மகளிர் விளையாட்டுக்கழகம் எதிர் கே.கே.எஸ். விளையாட்டுக்கழகம்.

மாலை 4 மணி

இராமநாதன் விளையாட்டுக் கழகம். ''பி'' அணி எதிர் இந்து மகளிர் விளையாட்டுக் கழகம்.

மாலை 6.30 (ஆண்கள் பிரிவு )

கே.ஸி.ஸி விளையாட்டுக் கழக ''பி'' அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக் கழகம்.

★வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டதிடல்

பி.ப. 2.30 மணி (பெண்கள் பிரிவு )

இராமநாதன் விளையாட்டுக் கழக ''ஏ'' அணி எதிர் கே.ஸி.ஸி விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாடடச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணியின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

சிவானந்தா விளையாட்டுக் கழகம் எதிர் நவசக்தி விளையாட்டுக் கழகம்.

மாலை 4.30 மணி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு பற்றவுள்ள அணிகள் விவரம் வருமாறு:-

மாலை 6 மணி

லயன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

இமையாணன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மோதவுள்ள அணியின் விவரம் வருமாறு-

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வல்வெட்டித்துறை கழுகு விளையாட்டுக் கழகம்

(ங-23-8)




வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு கடந்தவாரம் வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கடந்த வருடம் இலங்கை சங்கத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச ரீதியிலாக அழைக்கப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பூங்கன்குளம் சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.நவநீதன் 8 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். இவருக்கு வவுனியா பிரதேச செயலர் ஆ.சிவபாலசுந்தரம் நினைவு பரிசில் வழங்கி கௌரவித்தார். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட



ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது. இப்போட்டியில் ஆஸ்திரேலிய அணி 107 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

மெல்பேர்ண் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 305 ஓட்டங்களைக் குவித்தது. முதலாவது இலக்குக்காக 53 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, 2 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும், அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி, ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பிலிப் ஹியூஸ் இருவரும் 140 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பிலிப் ஹியூஸ் 129 பந்துகளில் 112 ஓட்டங்களையும், ஜோர்ஜ் பெய்லி 79 பந்துகளில் 89 ஓட்டங்களையும், டேவிட் ஹசி ஆட்டமிழக்காமல் 34 பந்துகளில் 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக நுவான் குலசேகர, லசித் மலிங்க, அஞ்சலோ மத்தியூஸ், அஜந்த மென்டிஸ் ஆகியோர் தலா ஒரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

306 என்ற மிகப்பெரிய இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 40 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்று 107 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. முதலாவது இலக்கை 8 ஓட்டங்களுக்கு இழந்த இலங்கை அணி, 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியது.



ஆனால் மூன்றாவது இலக்குக்காக 94 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், திலகரட்ண டில்ஷானின் இலக்கு இழப்பிற்குப் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக டினேஷ் சந்திமால் 95 பந்துகளில் 73 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 70 பந்துகளில் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.



இப்போட்டியில் திலகரட்ண டில்ஷான், அஞ்சலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன ஆகியோர் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்திருந்தனர். லஹிரு திரிமன்ன பந்தெதனையும் சந்திக்காது ஆட்டமிழந்திருந்தார்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கிளின்ட் மக்காய் 33 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், மிற்சல் ஜோன்சன் 43 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மிற்சல் ஸ்ரார்க் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக பிலிப் ஹியூஸ்



தெரிவானார்.

(ந)

# மீண்டும் அடி வாங்கியது இந்தியா

இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான ஒரு நாள் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி இந்தியாவை அதன் சொந்த மண்ணில் 9 ஓட்டங்களால் தோற்கடித்தது.

ராஜ்கோட்டில் உள்ள செளராஸ்ர மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நேற்று இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் ஆட்டத்தை தொடங்கியது. ஆரம்பமாக களமிறங்கிய வீரர்கள் மிகவும் சிறப்பாக ஆட்டத்தை ஆரம்பித்தனர்.இந்திய அணிவீரர்களின் பந்து வீச்சை மிகவும் துல்லியமாக சமாளித்து ஓட்டங்களைக் குவித்தனர். முதல் இலக்குக்காக இணைந்து கொண்ட அலெஸ்ரர் குக், இயன் பெல் 158 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆயினும் அரைச்சதம் கடந்திருந்த இயன் பெல் 9 பவுண்டரி, 1 சிக்ஸர் அடங்கலாக 85 ஓட்டங்களை பெற்ற வேளையில் ரகானேயால் ரன்அவுட் செய்யப்பட்டார். தொடர்ந்து பீற்றர்சன்



களமிறங்க மறுமுனையில் ஆரம்ப வீரராக களமிறங்கிய அலெஸ்ரர்குக் 11பவுண்டரிகள் 1சிக்ஸர்கள் அடங்கலாக 75 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் ரெய்னாவின் பந்து வீச்சில் ரகானேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்து கொண்ட மோர்கனும் பீற்றர்சனும் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த வேளை அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த மோர்கன் 4 பவுண்டரி 2 சிக்ஸர் அடங்கலாக 41 ஓட்டங்களை பெற்றவேளை அரைச்சதத்தை பூர்த்தி செய்யாமல் டின்டாவின் பந்துவீச்சில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார். அணி 255 ஓட்டங்களைப் பெற்ற வேளை பீற்றர்சன் 4பவுண்டரி 1 சிக்ஸர் அடங்கலாக 44 ஓட்டத்தை பெற்று டின்டாவின் பந்து வீச்சில் ஹோக்லியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த கீஸ்வெற்றர்-பட்டேல் ஜோடி அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்தனர். ஆட்ட முடிவில் அதிரடியாக ஆடிய பட்டேல் 6பவுண்டரி 1சிக்ஸர் அடங்கலாக 44 ஓட்டங்களுடனும் கீஸ்வெற்றர் 36 ஒட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நிர்ணயிக்கபட்ட 50 பந்துபரிமாற்ற முடிவில் இங்கிலாந்து அணி 325 ஓட்டங்களுக்கு 4 இலக்கையும் இழந்திருந்தது.

இந்திய அணி சார்பில் டின்டா 2 இலக்குகளையும், ரெய்னா 1இலக்கையும் கைப்பற்றினர். 326 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு முன்னேறத்தொடங்கியது இந்திய அணி. இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான ரகானே, கம்பீர் அதிரடியாக ஆடத் தொடங்கினர். எனினும் அணி 96 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை ரகானே 47 ஓட்டத்துடன் ரிட்வெல்லின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். சிறுது நேரத்தில் அரைச் சதத்தை கடந்திருந்த கம்பீர் 7 பவுண்டரி அடங்கலாக [illegible] பந்துவீச்சில் [illegible] ஹோக்லி 15 ஓட்டத்துடன் வெளியேறினார். பின்னர் இணைந்த யுவராஜ்சிங், ரெய்னா ஆகியோர் சிறப்பாக ஆடியபோதும்



198 ஓட்டத்தை பெற்ற வேளை யுவராஜ்சிங் 8பவுண்டரி 1 சிக்ஸர் அடங்கலாக 61 ஓட்டத்துடனுடன் ரிட்வெல்லின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். ரெய்னாவுடன் இணைந்த டோனி நிதனாமாக ஆட்டத்தை வெளிப்படுத்தினர். மறுமுனையில் 7பவுண்டரி அடங்கலாக 75 ஓட்டத்தை பெற்ற ரெய்னா ரிட்வெல்லின் பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய பின்வரிசை வீரர்கள் பொறுப்பாக ஆடத் தவறியதால் 50 பந்துப்பரிமாற்ற முடிவில் 9 இலக்குகளை இழந்து 316 ஓட்டங்களை பெற்றிருந்துது. இதனால் இங்கிலாந்து அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றது

இங்கிலாந்து அணி சார்பாக ரிட்வெல் 4 இலக்குகளையும், பிரெஸ்னன், டெரண்பீ் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ரிட்வெல் தெரிவு செய்யப்பட்டார்.

(ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கா ஆதிக்கம்

நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல்நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வலுவான நிலையை அடைந்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் பங்கேற்று வருகிறது.

முதல் போட்டியில் தென்னாபிரிக்கா அணி இலகுவெற்றி பெற்றுத் தொடரில் 1-0 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி போர்ட் எலிஸபெத் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.


நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிக்கா முதலில் துடுப்பெடுத்தாடியது. எனினும் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பீற்றர்ஸன் 21 ஓட்டங்களுடன் பிரஸ் வெல்லின் பந்தில் இலக்கைப் பறிகொடுத்தார்.

தொடர்ந்து இணைந்த அணித்தலைவர் சிமித்தும், அம்லாவும் நியூசிலாந்து பந்துவீச்சைப் பதம்பார்த்தனர். அரைச் சதம் கடந்த சிமித் (54) வோக்னரின் பந்தில் பிடிகொடுத்து வெளியேறினார்.



அணியின் நம்பிக்கை நட்சத்திரமான கலிஸ் (8) ஏமாற்றினார். பின்னர் அம்லாவுடன் இணைந்துகொண்ட டி.வில்லியஸ் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்து 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களம் புகுந்த பிளஸிஸும் தன் பங்குக்கு நியூசிலாந்துப் பந்துவீச்சாளர்களைப் போட்டுத்தாக்கினார். அவரும் அரைச்சதம் அடித்து அணிக்கு வலுவூட்டினார்.

இதேவேளை மறுமுனையில் நங்கூரம் போன்று அணியை நிலைநிறுத்திய தென்னாபிரிக்காவின் அம்லா சதம் கடந்தார். முதல்நாள் ஆட்டநேர நிறைவில் தென்னாபிரிக்கா அணி 4 இலக்குகளை இழந்து 325 ஓட்டங்களைக் குவித்திருந்தது. களத்தில் ஹசிம் அம்லா 106 ஓட்டங்களுடனும், டூ பிளஸிஸ் 69 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.



பந்துவீச்சில் நியூசிலாந்தின் பிறஸ்வெல் 2 இலக்குகளையும், வோக்னர், பட்டேல் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரும். (ஙு)


Join Srilanka's #1 ESOFT
The Leader in Professional ICT Education

Vacancies @ ESOFT Nelliady Branch

SriLanka's Leader in Professional ICT Education is looking For skilled individuals who can work in a team environment,to achieva set goals.

**Available Positions**

Lecturers in IT (Permanent & Visting)

Should Possess a Degree Or Higher diploma in IT. professional qualification will be an added advandage. The fulltime position, Abillity to work on the weekends is also a plus point.

**How to Apply**

Send us CV (preferable by Email) within5 days to reach the Coordinator. If sending by post, mark the position thatyou are applying for on the top left corner of the envelope

**Contact**

Esoft Computer Sudies
151,Jaffna Road Nelliady,Karaveddy
TEl: 0212264940, Hotline:077 154 7677
Email:nelliady@esoft.lk, web:www.esoft.lk



சாதனை ஆலோசனை நிறுவனத்தில்

வீசா ஆலோசனைக்கு Laptop (மடிக்கணினி) இலவசம்.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் 14/01/2013 அன்று எந்த ஒரு நாட்டுக்கும் எந்த வகை விசா ஆலோசனை செயற்திட்டத்தில் இணைந்தால் Laptop மடிக்கணினி இலவசமாக வழங்கப்படும் (நிபந்தனைகளுக்கமைவாக)

திசைகாட்டி (பிறைவேற்)லிமிட்
(PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016



வீடு வாடகைக்கு தேவை

நல்லூர், கல்வியங்காடு, இருபாலை ஆகிய பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 0718751754



வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதியில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு முன்பாக 4 அறைகள், வளவு, சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள், NGO விரும்பத்தக்கது.

தொடர்பு-0777704298








யாழ். அக்வரியம் அன் பிளான்ட் பரடைஸ் இன் மலிவு விற்பனை

பல இன பூங்கன்றுகள், பழமரங்கள், நிழல் மரங்கள், புதியவகை செவ்வரத்தை இன்னும் பல பூமரங்கள், சாடிகள், மீன்தொட்டிகள், குருவிகள், கூடுகள் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். (எம்மிடம் நல்லின பொமேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு)

9/7, K.K.S. வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்.



Sky Computers (Pvt) Ltd

புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
பிரிவு-1 செவ் 10:30am, 3:00 pm
பிரிவு-2 புதன் 10:30am, 3:00 pm
Ms Office, DTP, Hardware ,Graphic Designing, Web Designing, Internet & E-mail , Computer Type Setting, Kids Program. (சிறுவர்களிற்கானது)
(பிரத்தியேகமாக/ குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி)

TP:-021 - 222 - 1417
162, Main Street, Jaffna.



கணினி திருத்தம் Computer Repair

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள் -0779086737
GUNAA BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.



பொங்கல்பண்டிகையை முன்னிட்டு கணினி மலிவு விற்பனைக்கு

HP FULL SET - 24750/= மட்டுமே
(17" LCD,IGB, DVD )
FREE வருட உத்தரவாதம்
(WEB CAM/ HEAD PHONE/8GP PENDRIVE/ BAG)
- HP C2 58 LAP TOP - 49500/=
- IBM DUAL/C 3.4(FS) - 29750/=

எம்மிடம் அனைத்துவகையான கணனி உதிரிப்பாகங்கள் உண்டு

ST. ANTONY 'S
187, K.K.S Road
Jaffna.
0212224865,0750698608

14ஆவது வருடசேவையில்

(c5420)(6)





SMC

SUPRAMANIYAM MEDI CLINIC
Near Puttur Junction,Meesalai,Jaffna.

12-01-2013 அன்று முற்பகல் 8.00 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது

பிரதம விருந்தினர்
Dr.S.ரவிராஜ்(Consultant Surgeon),
Senior Lecturer&Head Of Department Of Surgery,Faculty Of Medicine,University Of Jaffna

சிறப்பு விருந்தினர்
Dr.K.சுரேஷ்குமார் (V.O.G),Teaching Hospital,Jaffna

சேவைகள்

- கிளினிக் (தினமும் 6-7.30A.m,4-10.30Pm)
- வைத்திய நிபுணர் சேவை
- பார்மசி
- ஸ்கான் • E.C.G • X-Ray
- ஆய்வுகூடம்

- தோல் நோயாளர்கள் தினமும் பார்வையிடப்படுவர்
- உத்தரவு பெற்ற இலகு வாகன மருத்துவ சான்றிதழ் வழங்கப்படும்.
- 13-01-2013 இருந்து 20-01-2013 வரை இரத்த சலரோக பரிசோதனை (Blood sugar)குருதி அழுத்த பரிசோதனை (Blood Pressure) இலவசமாக மேற்கொள்ளப்பட்டு ஆலோசனையும் வழங்கப்படும்.

T.P:0213214120
:0778811396

(அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




மனிதன் எவ்வளவோ மாறிவிட்டான். நவீன விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சி அவனது மனதை மட்டுமல்ல, அன்றாட செயற்பாடுகளிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது.

இருந்த இடத்தில் இருந்தவாறே சகல தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் ஆற்றல் தற்போது அவனிடத்தில் காணப்படுகின்றது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த வாழ்க்கை முறைஇன்றில்லை.எதிலும்வேகம், எதிலும் மாற்றம் என்பதே இன்றைய உலகின் தாரக மந்திரமாகி விட்டது. ஆறுதலாக ஓர் இடத்தில் அமர்ந்து சிந்திப்பதற்குக் கூட அவனுக்கு நேரம் கிடைப்பதில்லை. எதிர்காலத்தில் அவனது சார்பாக இயந்திரங்கள் சிந்தித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வதற்கு பணம் இன்றியமையாதது என்பதால் அதனைத் தேடுவதிலேயே மனிதனின் காலம் கழிகின்றது. பணமும் எல்லா இடங்களிலும் புகுந்து விளையாடுகின்றது. பணம் இருந்தால் எதனையும் நிறைவேற்றிக் கொள்ளலாமென்ற சிந்தனையே ஓங்கி நிற்கின்றது.

ஆனால் ஒன்றை மட்டும் பணத்தை வீசிவிட்டு பெற்றுக் கொள்ள முடியாது. நிறையவே பணம் இருக்கும் இடங்களிலிருந்து இது சொல்லாமல் கொள்ளாமல் நழுவி விடுகின்றது. அன்றாடம் கூலி வேலை செய்து கிடைத்ததை உண்டுவிட்டு நிம்மதியாகத் தூங்கச் செல்பவனிடம் இது நிறைந்தும், பணம் படைத்தவர்களிடமிருந்து மறைந்தும் காணப்படுகின்றது. இதற்குப் பெயர்தான் நிம்மதி.



பறவைகள், மிருகங்கள் தமக்குத் தேவையான உணவு கிடைத்ததும் திருப்தியடைகின்றன. நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றன. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் எல்லா விடயங்களிலும் குழம்பி நிற்கின்றான். நிம்மதியைத் தேடி அலைகின்றான். நிம்மதி என்பதை நாம்தான் தேடிக் கொள்ள வேண்டும். மனதில் நிம்மதியை இழந்த ஒருவனால் எதனையும் ஒழுங்காக மேற்கொள்ள முடியாது. அவனது செயல்களில் நிறையவே தவறுகள் ஏற்படுகின்றன. இத்தகைய தவறுகள் அவனை சில வேளைகளில் மீளவே முடியாத நிலைக்கும் தள்ளி விடுகின்றன. ஆகவே நாம் எந்தவொரு காரியத்தை ஆற்றும்போதும் எம் மனம் குழப்ப நிலையில் இருக்காது நிம்மதியால் நிறைந்திருக்க வேண்டும்.

கோடீஸ்வரன் ஒருவன் மிகப் பெரிய மாளிகையொன்றில் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட உயர்ந்த ரக மெத்தைகளால் ஆன படுக்கையில் இரவு முழுவதும் நித்திரையின்றிப் புரள்கின்றான். கோடிக்கணக்கான சொத்துக்கள், அன்பும், அழகும் மிக்க மனைவி, கண் நிறைந்த குழந்தைகள். இவனுக்கு இன்னமும் என்ன வேண்டும்? நிம்மதிதான் இன்னமும் கிடைக்கவில்லை. இவனால் உருவாக்கப்பட்டதே இந்தநிலை.

படுக்கைக்குச் சென்ற பின்னரும் அன்றாட வரவு செலவுகள் அவனது மனதிலே நிழலாடுகின்றன. இதில் ஏதாவது தவறுகள் நேர்ந்திருக்குமோ என்ற ஐயம் வேறு. மேலும் தனது மிகப்பெரிய சொத்துக்களுக்கு எவராலும் தீங்கு விளைவிக்கப்பட்டுவிடுமோ எனவும் அவன் யோசிக்கின்றான். அருகில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும் மனைவி மீதும் அவனுக்குச் சந்தேகம். இவள் என்னிடம் விசுவாசமாக நடந்து கொள்வாளா? அல்லது தனது குடும்பத்தினருக்கு எனது சொத்துக்களை அள்ளிக்கொடுப்பதில் குறியாக இருப்பாளா? இவ்வாறு அவனது சிந்தனைகள் நீண்டு கொண்டே போக தூக்கம் அவனை விட்டுவிலகி எங்கோ தொலை தூரத்துக்குச் சென்று விடுகின்றது. இந்த நிலையில் மன நிம்மதியை அவன் எவ்வாறு அடைய முடியும்

இவ்வாறு தான் சில அலுவலகங்களில் தனக்குக் கீழே பணிபுரியும் பணியாளர்களின் நிம்மதியைக் கெடுக்கும் கைங்கரியத்தில் சில உயரதிகாரிகள் ஈடுபடுகின்றனர். பல்வேறு காரணங்களால் தமக்கு ஏற்பட்டுள்ள இயலாமையினால் அவதிப்படும் அவர்கள் சிறு விடயங்களையும் பெரிதுபடுத்தி ஏனைய பணியாளர்களை மன ரீதியில் புண்படுத்துவதுடன் அவர்களது நிம்மதியைக் குலைப்பதற்கும் முயலுகின்றனர். இதனால் மனச்சோர்வை எதிர்கொள்ளும் ஏனையவர்கள் தமது நாளாந்தக் கடமைகளை ஆற்றுவதில் தவறுகளை இழைக்கின்றனர். இதனால் பாதிக்கப்படுவது அந்த அனைவருமே.

சிலரை ஏதாவது அலுவல் காரணமாக அணுகும்போது 'எனக்கு மனம் சரியில்லை, வேறொரு நாள் வாருங்கள்' என்று கூறுவார்கள்.

அவர்கள் குறிப்பிடும் அந்த நாளில் அவர் மனக்குழப்பமின்றி இருப்பாரா என்பதில் எந்தவித உத்தரவாதமும் இல்லை. ஏதோ ஒரு நம்பிக்கையில் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம்.

எனவே தான் இவை முழுக்க முழுக்க மனம் சம்பந்தமானதொரு விடயமெனக் கூறப்படுகின்றது.

சிலர் எனக்கு மன நிம்மதியில்லை, எனது மனைவியாலும், குழந்தைகளாலும் நான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளேன். ஆகவே இவர்களை விட்டுப் பிரிந்து செல்லவுள்ளேன். செல்லும் இடத்திலாவது அது கிடைக்கட்டும் என்று கூறிவிட்டு ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் தலைமறைவாகி விடுவார்கள். ஆனால் இதனால் பாதிக்கப்படப்போவது தமது குடும்பமே என்பதை இவர்கள் ஏனோ உணருவதற்குத் தவறி விடுகின்றனர்.

மற்றவர்கள் எப்பாடாவது பட்டுவிட்டுப் போகட்டும். எனது சுகம் தான் எனக்கு முக்கியம் என்ற சுயநலத்தின் வெளிப்பாடே இவர்களிடம் காணப்படுகின்றது.

வேறு சிலர் இதற்கு எதிர்மாறாக இருப்பார்கள். தமது சுகதுக்கங்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு தனது குடும்பத்தினரின் மகிழ்ச்சியே பிரதானமெனக் கருதுவார்கள். அதில் கிடைக்கும் நிம்மதியில் சுகமும் அனுபவிப்பார்கள்.

எனவே தான் காசி யாத்திரை செல்வதாலோ கோயில்களைச் சுற்றி வருவதாலோ இமயமலைச் சாரலை நாடிச் செல்வதாலோ அல்லது சாமியாராக மாறி அமர்வதாலோ எமது மனக் கோளாறுகளை சீர்செய்து விட முடியாது.

குழந்தைப் பாக்கியம் இல்லாத குடும்பமொன்று ஏனைய குழந்தைகளிடத்தில் பாசத்தைப் பொழிவதன் மூலமாகத் தமது மனக்கவலையை மறக்கின்றது. இதைவிட்டு குழந்தையில்லாத குறையையே மீண்டும் மீண்டும் அசைபோட்டு கவலையில் மூழ்கியிருப்பதில் பயன் ஒன்றுமே இல்லை.

ஆகவே நிம்மதி என்பது எமது மனம் சம்பந்தப்பட்டதே. அதனை நாம் தான் தேடிச் செல்ல வேண்டும். அது ஒரு போதும் எம்மைத் தேடி வராது. மற்றவர்களை மதித்து அன்பு செலுத்துவதன் மூலமாக இது எமது மனங்களில் புகுந்து விடும். ஆத்திரம், கோபம், வஞ்சம் தீர்த்தல், மற்றவர்களைப் புண்படுத்துதல் , அதிகாரம் செய்தல், சுயநலம் என்பவற்றை அறவே உதறித் தள்ளிவிட்டு மனதை அமைதியாக வைத்திருப்பதன் மூலமாக நிம்மதி தானாகவே எம்மை நாடி வரும்.


**நிம்மதி என்பது எமது மனம் சம்பந்தப்பட்டதே. அதனை நாம் தான் தேடிச் செல்ல வேண்டும். அது ஒரு போதும் எம்மைத் தேடி வராது. மற்றவர்களை மதித்து அன்பு செலுத்துவதன் மூலமாக இது எமது மனங்களில் புகுந்து விடும். ஆத்திரம், கோபம், வஞ்சம் தீர்த்தல், மற்றவர்களைப் புண்படுத்துதல் , அதிகாரம் செய்தல், சுயநலம் என்பவற்றை அறவே உதறித் தள்ளிவிட்டு மனதை அமைதியாக வைத் திருப்பதன் மூலமாக நிம்மதி தானாகவே எம்மை நாடி வரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கள் எல்லோரும் ஒன்றிணைவோம் இந்து சமயத்தை வளர்த்தெடுப்போம்

சைவப்புலவர்
செ.கந்தசத்தியதாசன்



சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தினம் இன்றாகும்

நரர் என்றால் மனிதர் எனப் பொருள் படும். தேவர்களுக்குத் தலைவன் இந்திரன் போன்று மனிதர்களுக்குத் தலைவனாக 1863 ஆம் ஆண்டு தைமாதம் மகர ஜோதியன்று வங்காளத்தில் அவதரித்தவரே நரேந்திரனாவார். இங்கிலாந்து நாட்டினர் இலங்கை இந்திய நாடுகளை யெல்லாம் நசுக்கி எம்மை அடிமையாக்கி நம் கோயில்களை இடித்தழித்து அரசாண்ட காலத்தில் வீறு கொண்ட வீரத்துறவியாக இந்துக்களுக்கோர் உதய சூரியனாக எழுந்தவர் நரேந்திரன்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடராகி அவருடைய உபதேசத்தாலும் ஆன்மிக ஞானத் தாலும் இறைவனைக் கண்டுகழித்த பெரியார் விவேகானந்தர். இவர் உலகமே போற்றுகின்ற உத்தம ஞானியானார். 1883 ஆம் ஆண்டு செப்ரெம் பர் மாதம் அமெரிக்க சிக்காக்கோவில் நடை பெற்ற சர்வமத மாநாட்டின் மேடையை இந்துத் துறவியாக அலங்கரித்தவர். இந்து சமயத்தின் மேன்மைத் தன்மையையும் ஏனைய சமயங்க ளுக்கெல்லாம் தாய்ச் சமயமான பெருமைக ளையும் நவீன விஞ்ஞானத்துக்கே அடிகோலிய மெய்ச்சமயம் என்பதையும் மேலைநாட்டினருக் கும் பிற சமயத்தவருக்கும் இவர் எடுத்து முழங்கினார்.

பல கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த கல்வி மான்கள் இந்துசமயப் பெருமைக ளையும் சிறப்புக்களையும் அறிந்து இந்துக் களாவதற்கு சுவாமி விவேகா னந்தரின் வார்த்தைகள் தத்துவ முத்துக் களாகத் திகழ்ந்தன.

பல மாதங்கள் அமெரிக்காவில் வாழ்ந்து இந்து சமயத்தைப் பரப்பி பின்னர் லண்டனுக்கும் சென்று இந்து சமய சிந்தனைகளைப் பரப்பினார். பல பெரியோர்கள், பேராசிரியர்கள் மத்தியி லும் இந்துசமய திருநூல்களை எடுத்து விளக்கினார். இதனால் பலர் சுவாமி விவேகானந்தரின்பால் கவரப்பட்டனர். இந்து சமயத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். இவர்களில் கிறிஸ்த வர்களான பலரும் அடங்குவர். எடுத்துக் காட்டாக சேவியர் தம்பதிகள் தம் உட மைகள் அத்தனையையும் விற்று அந்நிதி யையும் தம்மையும் இந்துசமயத்திற்கே அர்ப்பணித்தனர். குட்வின், கரிசன் ஆகியோரும் அவ்வாறே இந்துகளாகி சுவாமி விவேகானந்தருடன் இலங்கை திரும்பினர். பின் இந்தியா சென்று இந்துக்களுக்கு பணிவிடை செய்து இந்துசமயத்தைப் பற்றி இந்தியர்க ளுக்கு பரப்புரை செய்தார்கள். இந்துக் களே நாம் எங்கே நிற்கிறோம் என்ன செய்கின்றோம் என்பதைச் சற்றுச் சிந்தியுங்கள்.

சுவாமிஜி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1897 ஆம் ஆண்டு தைமாதம் 25 ஆம் திகதி கூறிய கருத்து நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டியது ''ஒருவனுக்கு ஒரு வேளை உணவு கொடுத்தால் மறுவேளை பசிக்கும். மறுவேளை கொடுத்தால் மறுநாள் பசிக்கும். உணவைத் திரும்பத் திரும் பக் கொடுக்க வேண்டும். ஆனால் ஆன்மிகக் கல்வியை வழங்குங்கள், ஞான தானம் செய்யுங்கள், ஒவ்வொரு வரும் மேனிலை அடைந்து மறுபிறப் பின்றி சிவன்கழல் சேர்வார்கள் என்று அவர் கற்றோர் சமூகத்தினரிடையே கூறிய வார்த்தைகள் இன்றும் பொருந்துகின்றதல்லவா?

ஆனால் இன்று இந்துக்கள் இந்து சமய புனிதத் திருநூல்களை ஆழ மாகக் கற்பது அருகிவிட்டது. மறு தலையாக கீழ்த்தரமான புலனின்பங் களை நாடுகிறார்கள். படித்தவர்களும் பகடைக் காய்களாக மாறிவிட்டார்கள். ஆன்மிகம் உயர்ந்து என்பதைப் போதிப்பவர்களும் இந்து சமயத் தலைவர்கள் என்று நினைப்பவர் களும் இன்று ஆன்மிகத்தை மறந்து விட்டார்கள் போலும். அன்பானவர் களே! ஆன்மிகம் எமக்குள் ஏற்படுத் தும் சக்தியைப் போன்று வேறு எவை யும் சக்தி வாய்ந்ததில்லை. சுவாமி விவேகானந்தர் ஆன்மிகத்தினால் அகிலத்தையும் வென்றாரல்லவா?

ஆன்மிக அறிவு, உணர்வு இன்றி லௌகிக அறிவு மட்டுமே செயற்படு வது எரியும் நெருப்பில் எண்ணய் ஊற்று வது போல் தீமையையே ஏற்படுத்தும். நாம் உண்மையான ஆன்மிக நெறியில் சமுகத்தை உருவாக்க வேண்டும்.

சமுதாயத்தின் தேவைக்கேற்ப உண்மை மாறமுடியாது. சிவனே! இன்று சமுதாய எண்ணிக்கைக்காக உண்மையையே விற்கிறார்கள். சமுதாயம் உண்மைப் பொருளை ஏற்க வழிகாட்ட வேண்டும். உண் மையைத் தேட வழிகாட்ட வேண் டும். சமுதாயத்தை உண்மைக் காகத் தயார்படுத்துங்கள். எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அவ் வளவுக்கு அவ்வளவு நல்லது என்று இளைஞர்களை எழுச்சி பெற வைத் தவர் சுவாமி விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தர் கூறிய ஒரு மேலான சிந்தனையை நாம் சிந்திக் கும் காலம் செயற்படுத்தும் காலம் வந்துவிட்டது. 40 மில்லியன் இங்கி லாந்து நாட்டு ஆங்கிலேயர்கள் 300 மில்லியன் தொகை கொண்ட இலங்கை, இந்தியர்களை 19 ஆம் நூற்றாண்டில் அடக்கி ஆண்டனர் என்றால் என்ன காரணம் தெரியுமா? இந்த 40 மில்லியன் ஆங்கிலேயர்களும் ஒருங்கிணைந்த சமூகமாக இருந்தனர். ஆனால் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகவே உள்ளோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சங்கங் களைக் கொண்டிருக்கிறோம்.

இந்து இளைஞர்களே, யுவதிகளே நல்ல எதிர்காலம் இந்துக்களுக்கு அமைய இருக்கின்றது. மேலைநாடு களில் இந்துக்கள் இணைவது அதிக ரித்து வருகின்றது. இலங்கையிலும் இந்துக்களை ஒன்றிணைப்போம். ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என் பது பழமொழியல்ல, இன்று அவசி யமான பொன்மொழி. நம்முடைய தமிழர்கள் எல்லோரும் ஒரு காலத் தில் இந்துக்களே. ஆனால் இன்று தமிழினம் குன்றிப்போகின்றது. தமிழர் கலாசாரம் கேள்விக்குறியா கின்றது. எதிலும் அந்நிய கலா சாரம், அந்நிய மோகம், தமிழர் என்ற அடையாளத்தைத் தேடித்தான் காண வேண்டும்.

நாம் சில தசாப்தங்களாக எத்தனை துன்பங்களை அனுபவித்தோம் என் பதை எண்ணிப்பாருங்கள். இதற்குக் காரணம் தான் என்ன? எம்மிடத்தில் ஒற்றுமையில்லையே! எனவே இந் துக்கள் எல்லோரும் ஒன்றுசேருங்கள். இதுவே எங்கள் முதல் பணியாகட்டும்.

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனன ஆண்டிலாவது நாம் எல்லோரும் ஒன்றிணைவோம். இந்து என்பதில் எல்லா வேற்றுமை களை யும் மறந்து ஒன்று சேர்வோம். குப்பை யில் போட்டாலும் குண்டுமணி மங்காது தான். ஆனால் குப்பையில் குண்டுமணி மறைந்து கிடந்தால் தெரியுமா? அதே போன்று இந்து சமயத் தின் நிலையும் மாறுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதா? இந்துக் களே விழித்துப் பாருங்கள். சிவனருள் உங்களுக்குண்டு. உமை சக்தி தருவாள் என் பதை மறந்துவிடாதீர்கள். இந்து வாக வாழ்வோம். இந்து சமயத்தைக் காப்போம். இந்துக்களே எழுந்து வாருங்கள். ★

மருதங்கேணியூர் வே.வே.அகிலேஸ்வரன்.

# உங்களுடன் நான்...



நேசக்கரங்கள் நீட்டும் போது பாசம் வழி திறந்துபார்க்கும் உயி ரின் வாழ்விலே உலகம் சுழல் கிறது. நிறைவின் முகவரியில் அன்புச் சுவடிகள் புன்னகை பூப்பது ஓர்மனம் யாசிப்பது வேறொரு மனமாய் இருக்கிறது. பதிவுகள் தொடர்ந்திடின் பதவி கள் பறிபடும். கையில் பண முள்ள வரை தான் உலகமே எம் கைவசம். அறிவுகள் பல நூற்றாண்டு கடந் தன. நிறைவான உணர் வுகளில் நிர்ணயம் செய்பவை. உயிர் கொன்று பழி தீர்க்கும் உலகமும் உண்டு. அந்த உலகினையே வாழ வைக்கும் வையகமும் உண்டு. நெருப்பு இருந் திடின் அழிப்பு உண் மையே. பிழைப்பு இல்லாத வீடின் சோர்வு எஞ்சுமே. மனதில் இருட்டை கலைக்க சோகங்கள் கலைத்திட வேண் டும்.

செருக்கைக் கண்டு செந்தமிழின் வாழ்வு அழிவதில்லை. வாழ்த்தும் உள் ளங்களினால் அது எப்பவும் வாழ்ந்து கொண்டே இருக்கும். பூக்களைத் தேடியே வண்டின் நகர்வுகள். நல்ல மனங்களைத் தேடித்தேடியே எம் வாழ்வு மலர வேண்டும். மானம்



இறுதிவரை காக்கப்படல் வேண்டும் . அலைவுகளால் மனதில் நிம்மதி உணர்வில்லை [illegible] கண்டு கரைகள் [illegible] சொர்க்கம் நிறைந்திடின் பூலோகமும் புதுமையில் ததும்பும். சந்தோச மனதில் சந்தேகம் தோன்றாது. உள்ளக்கோயிலில் உண்மை பூக்கிறது. ஆழங்களின் அருமை தாளங்களின் மகிமை எண்ணும் அறிவும் எப்பவும் தேவை. அருள் வாக் கின் ஓசையில் உலக மலர்வின் அதிசயம் உண்டு.

உடன்படாத செயற்பாடுகளில் ஈடு படுவது அழகல்ல. ஜனனம் நிலைத்து நிற்கும் போது கிடைக்கும் சந்தோசம் அளவற்றது. பேரின்ப வாழ்வு சில வேளை சறுக்கலுறச் செய்கிறது. நம் பிக்கை இருந்திடின் எந்தச்சூழல் தனிலும் முன்னேறலாம். நிறைவானம் சிலவேளை குறைவானமாய் போகிறது. மயக்கம் வந்ததன் பிற்பாடே அதன் தன்மை புரியும். எதனையும் வரும் முன் காப்பதற்கு நாம் முயல்வது கிடையாது. வந்ததன் பிற்பாடே ஏங்கித் தவிப்பது கவலைக்குரிய செயலாகும்.

ஊட்டச்சத்து உடலுக்குத் தேவை. [illegible] பலம் மனதுக்குத் [illegible] உன்னை நீ உணர்ந்தால் உலகம் கூட சிறிதே. தத்துவக் காரர் எல்லாம் அதனைக் கடைப்பிடிக்கிறார் கள் என்பதுதான் புலம்ப செய்கிறது. திறமைகளின் ஊன்று கோலுக்குள்ளே தியாகங்கள் நிறையவுண்டு.

உலகில் எத்தனை வீடுகள் தீக்குச்சி இல்லாமல் இருளுக்குள்ளே வாழ்கின் றன என்பது இன்று மட்டும் புரியவில்லை.

இம்மையிலும் அழகு உள்ளதை அறிய உய்யும்போது விளங்கும். இல்லை என்று எதனை ஒதுக்குகின்றோமோ அதுவே சிலவேளை எமக்குக் கிடைக்கும் போது எதிர்பார்ப்பற்ற மகிழ்ச்சி உருவாகின்றது.


எளிமைக் கோலத்தில் தெளி வுகள் உண்டு . மனது தேடலின் பொருளாய் செயற்படும் வரை வாழ்வில் கவலைகள் தொடர்வது கிடையாது. கடல் உள்ள வரை தான் மீனின் வாழ்க்கை. அன்பு உள்ளவரைதான் மனித வாழ்கை தொடர்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்ரியோட் கைக்கடிகாரம்

ஜப்பானிய பிரபல இலத்திரனியல் நிறுவனமான சொனி கூகுள் அன்ரியோட் இயங்கு தளத்துடன் கூடிய கைக்கடிகாரத்தை வெளியிட்டுள்ளது.

புளுடூத் வசதி மூலம் ஏனைய அன்ரியோட் இணைய இயங்கு தளம் பயன்படுத்தப்படும் கைபேசிகளில் இணைத்து இதனை பயன்படுத்தலாம். இதன் மார்க்கெட் விலை 150 அமெரிக்க டொலர்களாகும். 1.3 அங்குல தொடுதிரை அளவு உடைய இந்தக் கைபேசி, அதிர்வு அறிவிப்பான் அல்லது ஒலி சமிக்ஞை மூலம் உள்வரும் அழைப்புக்களை அறிவிக்கும். இக் கைக்கடிகாரத்தின் மூலமே அழைப்புகளை எடுக்கவும், பேஸ்புக், டுவிட்டர் என்பவற்றை பயன்படுத்தவும் முடியும்.




சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

# அ வரிசை பழமொழிகள்

அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்
அரைக் காசுக்கு போன மானம் ஆயிரம் கொடுத்தாலும் வராது
அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவுவார்களா?
அற்பன் சினேகிதம் உயிருக்கு மோசம்
அகதிக்குத் தெய்வம் துணை
அண்ணன் வரும் வரை அமாவாசை காக்குமா?
அஞ்சு பணத்திற்கு குதிரையும் வேண்டும்
ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்
அஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
அடை மழை விட்டும் தூவானம் போகவில்லை
அன்றை ஆயிரம் பொன்னிலும் இன்றை ஒரு காசு மேல்

சுவேந்திரன் ஆகீசன்
யாழ்ப்பாணக்கல்லூரி





# நட்சத்திர மீன்



சௌ.ஜெசிந்தா
அளவெட்டி

நட்சத்திர மீன் ஒன்றின் ஐந்து கரங்களும் இறுக பற்றக்கூடிய வகையில் நூற்றுக் கணக்கான மயிர்ப் பீலி உறிஞ்சிகளை கொண்டிருக்கும். இம் மீன்கள் நிமிடமொன்றுக்கு 2 அங்குலம் வரையிலான வேகத்தில் நகரக்கூடியன. இந்த நட்சத்திர மீனின் கரம் ஒன்று துண்டிக்கப்பட்டால் மிக விரைவில் வளர்ந்து விடும் இயல்புடையது. அத்துடன் துண்டிக்கப்பட்ட கரத் துண்டும் தனியானதொரு நட்சத்திர மீனாக மாறி விடும்.



# தேவையில்லாதது என்று ஏதுமில்லை...

முனியனிடம் சில ஆடுகளும் ஒரு நாயும் இருந்தன. தினமும் அவன் ஆடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வான்.கூடவே அவனது நாயும் செல்லும். மர நிழலில் முனியன் படுத்து உறங்க ... ஆடுகள் புல் மேயும்.... அந்த ஆடுகளை ஓநாய் போன்றவை அணுகாமல் நாய் காக்கும்.

முனியன் தூங்கி எழுந்ததும், தான் சாப்பிட்டுவிட்டு நாய்க்கும் சாப்பாடு அளிப்பான். இது ஆடுகளுக்கு பிடிப்பதில்லை. ஒரு நாள் ஆடுகள் முனியனிடம்' நாங்கள் உனக்கு பால் தருகிறோம்...நீ உயிர் வாழ உதவுகிறோம்.. ஆனால் நீயோ எங்களை நாங்களாகவே மேய விட்டுவிட்டு ... சும்மாயிருக்கும் நாய்க்கு உணவளிக்கிறாயே' என்றன.

அப்போது முனியன் ஆடுகளிடம்' நீங்கள் சொல்வது சரி.. ஆனால் சற்று சிந்தித்து பாருங்கள் இந்த நாய் ..., நீங்களெல்லாம் மேயும் போது உங்களைப் பார்த்துக் கொள்ளாவிட்டால் ஓநாய் வந்து தினசரி உங்களில் ஒருவரை கொண்டு சென்று உணவாக்கிக்கொள்ளும்.

அப்படி நேராமல் உங்கள் உயிரைக் காக்கிறது இந்த நாய் என்றான். ஆடுகளும் சிந்தித்துப் பார்த்துவிட்டு நாயின் முக்கியத்துவத்தை உணர்ந்தன.

தேவையில்லாதது என எதுவும் கிடையாது. சற்று சிந்தித்தால் தேவையில்லாதவை என நினைப்பவையின் தேவையும் அவசியமும் புரியும்.

# வௌவால்களைக் கண்டு மனிதன் பயந்தானா? வியந்தானா?



பாலூட்டிகளான வௌவால்களைக் கண்டு வியந்த மனிதன் அதைப் பற்றி பல்வேறு கதைகள், திரைப்படங்கள், கேலிச் சித்திரங்கள் வரை பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தோ கற்பனையாகவோ பல பரிமாணங்களை கொடுத்திருக்கிறான்

உலகத்தில் வௌவால்கள் 1240 வகைகள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளன. இவை உணவு உண்ணும் பழக்கத்தைப் பொறுத்து இருவகையாக பிரிக்கப்படுகிறது, 30 சதவீதம் பழந்திண்ணிகள் 70 சதவீதம் பூச்சியுண்ணிகள். அவற்றில் சில இனங்கள் மீன், தவளைகளை பிடித்து உண்பவை, சில ரத்தகாட்டேரிகள் அல்லது இரத்தம் உறிஞ்சிகள் என வகை பிரிக்கப்பட்டுள்ளன.

''கிட்டி'' என அழைக்கப்படும் பன்றி மூக்கு வௌவால்கள் அளவில் மிகச்சிறியன, இறக்கையின் நீளம் 15 சென்ரிமீற்றர்கள். தங்க கீரிடம் சூட்டிய – பறக்கும் நரி என அடைமொழி கொண்ட மிகப்பெரும் வௌவாலின் இறக்கையின் நீளம் 4 அடி 11 அங்குலம். இதனுடைய இரத்த சம்பந்த உறவுக்காரர்கள் டொல்பின், நீர்யானை என்று சொன்னால் நம்ப முடிகிறதா?

வௌவால்கள் மீயொலிகளை ஒலிக்கச்செய்து கிரகித்து பறக்கின்றன. எந்த அளவு துல்லியம் என்றால் எதிரில் ஒரு கொசுவோ அல்லது மயிரிழையோ இருப்பதாக கொண்டால் அதன் மீது இமைப்பொழுதில் மோதாமல் செல்லும். அவை கண்பார்வை அற்றவை அல்ல, ஆனால் சற்று மந்த பார்வை உடையவை. அதற்கு பதிலாக மீயொலிகளை எதிரொலிகளாக கிரகித்து உணர முடியும். பறவைகளிடையே போட்டியைத் தவிர்க்கவே அவை இரவில் உணவு தேடுகின்றன. அதன் பயணம் சில சமயம் 800 கிலோ மீற்றர்களுக்குத் தொடர்கிறது. சில வகை அல்ட்ரா வயலட் ஒளி சிதறல்களை உணரும் சக்தி படைத்தவை. கூட்டங்கள் வெவ்வேறானாலும் இவை சத்தங்களிலே உரையாடல் நிகழ்த்துகின்றன. இருட்டு மற்றும் ஈரப்பதமுள்ள பகுதிகளில் வசிக்க விரும்புகின்றன. இருந்தாலும் எல்லா வகைகளுக்கும் குகைப்பகுதிகள் தேவை இல்லை. பாழடைந்த கட்டடங்கள், கோயில் மாடங்கள், பெரிய மரங்கள் இதன் வசிப்பிடங்கள். பெரிய குகைகளில் வாழும் இவற்றின் கூட்டத்தின் மொத்த உறுப்பினர்கள் கிட்டத் தட்ட ஒரு மில்லியன். இதன் பிறப்பு விகிதம் குறைவு தான். தாய் வௌவால்கள் குட்டியை ஆறு அல்லது எட்டு வாரங்கள் நன்றாக பறந்து இரையைப் பிடிக்கும் வரை கூடவே இருந்து கவனித்துக் கொள்ளும்.

மழைகாலங்களில் மீயொலி எதிரொலிப்பைக் கிரகிப்பதில் பிரச்சினை உண்டு என்பதால் மழை காலங்களில் இவை வெளியில் பறப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 400 வருடங்களுக்கு முன் அழிந்து போன 'டூடூ' பறவை



இந்தப் பறவையைப் பற்றி 1507 ஆம் ஆண்டுவரை எவரும் அறிந்திருக்க வில்லை. ஆபிரிக்காவைச் சுற்றி கப்ப லில் சென்ற மாலுமிகள் தண்ணீருக்காக மொரீசியஸ் தீவில் ஒதுங்கியபோது அந்தப் பறவையைப் பார்த்தார்கள்.

பழங்காலத்தில் வாழ்ந்த பறவை இனங்களில் கடந்த 400 ஆண்டுகளுக்கு முன் அழிந்துபோன ஓர் அபூர்வப் பறவையின் பெயர் தான் டூடூ.

இந்தியப் பெருங்கடலில் ஆபிரிக்கா வுக்கு அருகிலுள்ள மொரீசியஸ் தீவில் தான் டூடூ என்ற அழிந்துபோன பறவை வாழ்ந்து வந்தது. டூடூ என்ற சொல்லுக்கு போர்த்துகேய மொழியில் 'முட்டாள்' அல்லது 'அற்பமான' என்பது பொருள்.

இந்தப்பறவை வான்கோழியைவிட சற்றுப் பெரியது. சதைப்பற்று மிக்கது. வளைந்த பெரிய அலகு உடையது. இறகு களும், வாலும் வளர்ச்சியுறாமல் காணப் பட்டன. கால்கள் குட்டையாகத் தடித்து மஞ்சள் நிறத்தில் இருந்தன. எனவே, இவை பறக்கவும், ஓடவும் முடியாதவைகளாக இருந்தன. ஒரு தடவைக்கு ஒரு முட்டையே இடும். தரையில் புற்களால் கூடு அமைத்து முட்டையை அடைகாக் கும்.

இந்தப் பறவையைப் பற்றி 1507 ஆம் ஆண்டுவரை எவரும் அறிந்திருக்க வில்லை. ஆபிரிக்காவைச் சுற்றி கப்பலில் சென்ற மாலுமிகள் தண்ணீருக்காக மொரீசியஸ் தீவில் ஒதுங்கியபோது அந்தப் பறவையைப் பார்த்தார்கள். அதனைப் பிடித்து உண்டார்கள். 1598 இல் அங்கு குடியேறிய டச்சுக்காரர்கள், மனிதர்கள் விரும்பாத அழகற்ற பறவை என்று அதனை அறிவித்தார்கள்.

குடியேற்றக்காரர்கள் வளர்ப்புப் பறவை களையும் விலங்குகளையும் இறக்குமதி செய்த பின்னர் இது படிப்படியாக அழியத் தொடங்கியது. 1681 இற்குப் பின்னர் அந்தப்பறவையில் ஒன்றுகூட உயிருடன் இல்லை. அழிந்துபோன பறவையாக மாறி விட்டது. காலத்துக்கு ஏற்றபடி தன்னை மாற்றிக் கொள்ளாத மனிதர்களை மொரீசியஸ் தீவில் டூடூ என்று குறிப்பிடுகிறார்கள்.

-மிது

# இலக்கிய இதிகாச புராணங்கள்



"மனித நாகரிகத்துக்கு உறுதுணை புரிந்த இலக்கிய இதிகாச, புராணங்கள் புதுவடிவில் மனித சமூகத்தை பிளவு படுத்தி விட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டுக்களையும் மறுப்பதற்கில்லை."

(சென்றவாரத் தொடர்ச்சி)

விஞ்ஞானங்களுடனும் இன்றைய வாழ் வியல்களுடன் புராணங்கள் நேரடியாக ஒத்துப்போகக் காரணம் இவைகளை மனிதன் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்பதற்காய் எம்மிடமிருந்து தூர விலக்கி வைத்து ஆனால் பக்தியை மேம்படுத்தியும் உள்ளது. இந்த வகையில் புராணங்கள், இதிகாச காலத்தில் உருவாக்கப்பட்டமையால் இதிகாசங்களின் தாக்கமும் புராணங்களில் உண்டு.

அதாவது புராணங்கள் அதன் சில உள்ளார்ந்தங்களை மறைத்து அதற்கு எதிர்மாறாய் கற்பனை இதிகாசங்களையும், தத்துவங்களையும், இன்னும் பல நோக்கங்களையும் வெளிப்படுத்துகின்றன. ஆனாலும் சில இதிகாசங்கள் புராணங்களுடன் நேரடியாக ஒத்துப்போகாமலுமில்லை. தவிர விஞ்ஞானக் கருத்துக்களையும் தருகின்றன. உதாரணம் முருகனின் தோற்றம், உலகின் தோற்றங்களையும் உயிரான தோற்றங்களையும் சூக்குமமாகச் சொல்லியுமிருக்கின்றன. அறுவகைச் சமயங்களில் முருகனின் கௌமாரத்தை எடுத்து நோக்கினால் பல அடையாளங்களில் மேற்கொள்ளப்பட்ட அருவ வழிபாடுகளை முருகனின் 'தனி அடையாளத்துக்குள் கொண்டு வந்து மனித பேதங்களை நீக்கவும் முயற்சி செய்திருக்கிறது. தவிர அருவம், அருவுருவம் போன்ற வழிபாடுகளையும் விளக்கியுமிருக்கிறது.

மனித நாகரிகத்துக்கு உறுதுணை புரிந்த இலக்கிய இதிகாச, புராணங்கள் புதுவடிவில் மனித சமூகத்தை பிளவு படுத்தி விட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டுக்களும் மறுப்பதற்கில்லை. அதாவது நிறுவனமயமான வழிபாட்டு முறைகளும் நிறுவனமயமாகாத வழிபாட்டு முறைகளும் என மனித சமூகம் தொழில்முறை ரீதியான வேறுபாடுகளுக்கப்பாலும் , தொழில் முறைகளுடன் கலந்தும் இருந்தவை இப்போது படிப்படியாக மாற்றமடைந்து வருவது கண்கூடு. மனிதர்களிடம் உயர்வு, தாழ்வுகள் காணப்படுவது உலகை இயக்கும் சக்தி. அதற்குள் மதம் கலந்திருந்தமை, இருக்கின்றமை அல்லது வேறு வடிவில் மனித சமூகத்தைப் பிளவுகள் பல செய்து வைத்திருப்பது கவலை தருகின்ற விடயமே. எனவே இவைகளிலிருந்து மதங்களை விடுவித்து இலகுவாக எல்லோரும் தாம் விரும்பும் வகையில் இறை நம்பிக்கை கொள்ள வைப்பது ஆன்ம ஈடேற்றத் துக்கு வழி வகுக்கும்.

(முற்றும்)

■ இராமஜெயபாலன்






# கண்ணாடி உ... வரலாறு...!



எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே
கண்ணாடி களை உபயோகப்படுத்தினான். அந்
எரிமலைக் குழம்பு காய்ந்து கட்டியாகும்போது
அந்தக் கட்டிகளைக் கத்தி, அம்புகள்
படுத்திக்கொண்டான். கண்ணாடிகளை மனி
முறை கி.மு. மூவாயிரம் ஆண்ட ளவில் மத்
களில் உண்டாகியிருக்கலாம் என்று ஆய்வா
றனர்.
கி.மு. ஆயிரம் ஆண்டுளவில் வெட்ட வெளி
குழம்புகளை வார்த்து கண்ணாடி செய்யும் முறை
கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின்னர் உரோ
முதல் நூற்றாண்டளவில் கண்ணாடிகளாலான
உருவாக்கிக் கொண்டார்கள்.
12 ஆம் நூற்றாண்டு வரை இஸ்லாமிய ந
மற்றும் கெய்ரோவில் கண்ணாடி செய்யும்
இதனால் தான் இந்தக் காலகட்ட கண்ணாடிச
கண் ணாடிகள்' என்று அழைத்தார்கள். 12-16 ஆ
வெனிஸ் நகரில் இந்தக் கலை உச்சகட்ட
பாதரசத்தைப் பயன் படுத்தி முகம் பார்க்கும் கண்
யாகச் செய்யும் தொழில்நுட்பத்தையும் அவர்
ஆனால், அந்த நுணுக்கங்களை அவர்கள் இரகசிய
ஆனால், 17 ஆம் நூற்றாண்டளவில் அந்
ஐரோப்பிய நாடுகள் பலவும் கண்ணாடிகள்
நூற்றாண்டு வரை கண்ணாடிகளால் டெலஸ்
மைக்ரோஸ்கோப் போன்ற பல அறிவியல்
வளர்ச்சியடைந்தன.
இதன் தொடர்ச்சியாக பார்வைக் கோளாறு
ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டன. 1903 ஆ
ரிக்காவில் ஒரு நிமிடத்தில் ஆயிரக்கணக்
தயாரிக்கும் தானியங்கி இயந்திரம் உருவா
வைக்கப்பட்டிருப்பது கண்ணாடியின் அடிப்ப
கொல்கத்தாவில் உள்ள ஓர் ஆய்வுகூட
இங்கு கொண்டு வரப்பட்டது. கண்ணா
தன்மையை வைத்தே அது எந்தக் கால
என்பதைக் கண்டுபிடிக்கலாம். நம் உருவங்
கண்ணாடிகள், அந்தந்த காலகட்டத்தின்
சியையும் பிரதிபலிப்பது ஓர் அழகான ஆ

# கடலில் மூ...

சுமார் 2 ஆயிரம் தீவுகள் மாலைதீவில் உ
கடலுக்கு அடியே சுழியோடினா
அடித்தளம் தெரியும். அங்கு பார்த்தால் ம
தான மலை என்பதைக் கண் கூடாக
வது கடலில் குச்சிகளை நட்டு வைத்
லிமோரியாக் கண்டத்தில் தோன்றி
உருவமைப்புக் கொண்ட பிராணிக
உடையவை எனக் கூறப்படுகி
பிராணிகள் சில தாமாகவே பலவண்
தோற்றுவிக்கக் கூடியவை. உதா
மீன்கள். அதேபோல பல விதமான
ஒளிக்கீற்றைத் தோற்றுவிக்கக் கூடி
மனிதன் இருந்திருக்கவேண்டும்
அடியில் காணப்படும் சில பளிங்
வெளிச்சத்துக்குப் பாவித்து வந்த
இருக்கின்றன. இதனாலேயே தற்
உருவாகுவது பன்னீர் குடம் என்று
திரவத்தில் தான். தாயின் கருப்பை
இந்தத் திரவ பலூனுக்குள் தான் இ
உருவாகிறான்.
இவ்வாறு சில கண்டங்கள் அல்ல
புக்கள், நீரில் மூழ்கியதற்கு இந்து ம
இருக்கிறது. பகவத் கீதையிலும் சரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ... உருவாகிய

..!



...முன்பே ஆதி மனிதன் ...ர். அந்தக் கண்ணாடிகள், ...போது உண்டானவை. ...கள் செய்வதற்கு பயன் ... மனி தனே படைக்கும் ...ல் மத்திய கிழக்கு நாடு ... ஆய்வாளர்கள் கருதுகின் ...

... வெளிகளில் கண்ணாடிக் ...ம் முறை எகிப்தியர்களால் ... உரோமானியர்கள் கி.பி. ...லான சிறிய பொருள்களை ...

...மிய நகரங்களான பக்தாத் ...சய்யும் கலை வளர்ந்தது. ...ணாடிகளை 'இஸ்லாமியக் ...12-16 ஆம் நூற்றாண்டுவரை ...சகட்டத்தை அடைந்தது. ...ம் கண்ணாடிகளை செயற்கை ... அவர்கள் அறிந்திருந்தனர். ...இரகசியமாக வைத்திருந்தனர். ...ல் அந்த இரகசியம் கசிந்து, ...டிகள் செய்தன. 17-19 ஆம் ...டெலஸ்கோப், தேமாமீற்றர், ...வியல் தொழில்நுட்பங்கள் ...

...கோளாறுக்கான கண்ணாடிகள் ... 1903 ஆம் ஆண்டில்தான் அமெ ...கணக்கான கண்ணாடிகளை ...உருவானது. அங்கு காட்சிக்கு ... அடிப்படை மூலக்கூறு ஆகும். ...வுகூடத்திலிருந்து 1959 இல் ...கண்ணாடியில் உள்ள சுத்தத் ... காலத்தில் செய்யப்பட்டது ...உருவங்களைப் பிரதிபலிக்கும் ...த்தின் தொழில்நுட்ப வளர்ச் ...ன ஆச்சரியம் தான்.

-றஜி

# கோயில் சிற்பங்களில் மட்டும் காணக் கிடைக்கும் விசித்திரமான மிருகம் யாளி




-பாலா

தென்னிந்தியக் கோயில் சிற்பங்களில் மட்டும் காணக் கிடைக்கும் ஒரு விசித்திரமான மிருகம் யாளி. கோயில் கோபுரங்கள், மண்டப தூண்களில் மட்டுமே காணப்படும் ஒரு கற்பனைச் சிலை என்பது தான் பலரது எண்ணம். சிங்க முகமும் அதனுடன் யானையின் துதிக்கையும் சேர்ந்தாற் போல் காட்சி தருவதைப் போன்று பல கோயில்களில் இவற்றின் சிலைகள் அமைக்கப்பெற்றுள்ளன. சிங்கத்தின் தலை கொண்டதை 'சிம்ம யாளி' என்றும் ஆட்டுத்தலை கொண்டதை 'மகர யாளி' என்றும் யானை முகத்தை 'யானை யாளி' என்றும் அழைக்கின்றனர்.



நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இதே பூமியில் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ராட்சத உடல் அமைப்புடன் 'டைனோசர்' என்ற மிருகங்கள் வாழ்ந்தன என்று கூறிய போது முதலில் நம்ப மறுத்தது உலகம். பின்னர் அது குறித்த ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடத்தி அவற்றின் எலும்புகள், முட்டைகள், உருவ அமைப்பு போன்றவற்றை ஆதாரத்துடன் வெளியிட்ட பின்பு தான் நம்பத் தொடங்கினார். பின்னர் இதுகுறித்த திரைப்படங்களை இயக்கியதும் அந்த மிருகங்கள் குறித்த தகவல் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை சென்றடைந்தது.

அப்படியானால் பல்லாயிரம் ஆண்டுகள் வரலாற்றுப் பின்னணி கொண்ட இந்திய துணைக்கண்டத்தின் தென்பகுதியில் இவ்வாறான ஒரு பிரமாண்ட விலங்கின் பதிவுகள் அதிகமாகப் பரவிக்கிடப்பதைப் பார்க்க முடிகிறது. சில கோயில்களில் இந்த மிருகத்தை குதிரையைப் போன்று கடிவாளமிட்டு அடக்கி அதன்மீது வீரர்கள் கையில் வாளுடன் அமர்ந்திருக்கிறார்கள். அப்படியானால் அவை போருக்குப் பயன்படுதப்பட்டிருக்குமா?



அவற்றை எல்லாம் விட்டு ஒரு படி மேலே சென்று பார்த்தோமேயானால், யாளிகளுக்கென்று தமிழர்கள் தனியாகவே ஒரு வரிசையை கோயில் கோபுரத்தில் ஒதுக்கி இருக்கிறார்கள். அதை 'யாளி வரிசை' என்றே அழைக்கிறோம். ராஜராஜன் கட்டிய பிரம்மாண்டமான தஞ்சை கோயிலில் கூட யாளிக்கென்று ஒரு முழு தனி வரிசையே ஒதுக்கப்பட்டுள்ளது. உருட்டும் கண்களோடும், கோரப்பற்களோடும் ஒரு விலங்கின் முகத்தை கோபுரத்தின் நான்கு திசையிலும் எளிதில் பார்க்க முடிகிறது. மேலும் தஞ்சை பெரியகோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் போன்ற தமிழ் மன்னர்களால் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான பழமையான கோயில்களில் எல்லாம் இரண்டு கால்களில் நிற்கும் முழு உயர முப்பரிமாண யாளியின் சிலையும் அந்த யாளி சிலையின் முழங்காலுக்கு கீழே யானை நிற்கும் சிலையையும் வடித்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட யாளி சிலை தென்னிந்தியாவில் உள்ள நூற்றுக்கணக்கான கோயில்களில் ஆயிரத்துக்கு மேல் உள்ளன. உலகில் எந்த விலங்குகளுக்கும் இந்த எண்ணிக்கையில் முழு உருவ, முப்பரிமாண சிலைகள் கிடையாது என்பது உலகம் அறிய தவறிய உண்மை. குறிப்பாக தமிழர்கள் அறியத் தவறிய உண்மை. நம்மில் பலர் கோயில்களுக்குச் சென்றிருந்தாலும் யாளி சிலைகளை முழு மனதோடு இதுவரை கவனித்திருக்க மாட்டோம். அதுதான் யாளி என்ற அதிசய விலங்குக்கு இதுவரை நடக்கும் அவலநிலை.

யாளிக்கு எத்தனை கோயில்களில், எத்தனை விதமான சிலைகள் உள்ளன? யாளியில் எத்தனை வகைகள் உள்ளன? பண்டைய காலத்தில் வாழ்ந்த சிற்பக்கலை நிபுணர்கள் காணாத ஓர் உருவத்தை சிலையாக வடித்திருப்பார்களா? யாளி உருவம் எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது? சிறிய கோயில்களிலும் யாளியின் உருவம் உள்ளதை நாம் அறிவோமா? யாளியைப் பற்றி புராணங்கள் என்ன சொல்கின்றன? யாளி என்ற உயிரினம் கற்பனையா? இல்லை அறிவியல் பூர்வமாக அது ஓர் உயிரினமா? யாளி லெமூரிய நாகரிகத்தின் உண்மையான மிருகமா? வாழாத ஓர் உயிரினத்தை ஆயிரக்கணக்கில் சிற்பங்களாக வடிக்க காரணம் என்ன? குடிக்கு அடிமையாகிக் கிடக்கும் தமிழ் சமூகத்தில் இவற்றை குறித்து யார் ஆராய்ச்சி செய்யப்போகிறார்கள்?

# ...மூழ்கிய லிமோரியா கண்டம்

■ இணையவன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

...தீவில் உள்ளன. அங்கு சென்று ...டினால், மாலை தீவின் ...ந்தால் மாலை தீவு ஒரு செங்குத் ... கூடாகக் காணலாம். அதா ... வைத்ததுபோல இருக்கும். ...தோன்றிய மனிதன் போன்ற ...ாணிகள் ஒளிரும் தன்மை ...படுகிறது, கடல் வாழ் ...லவண்ண ஒளிக்கதிர்களை ... உதாரணமாக ஜெல்லி ...மான நிறங்களுடன் கூடிய ... கூடிய ஒரு பிராணியாக ...டும் எனவும், கடலுக்கு ... பளிங்குகளை அவர்கள் ... வந்ததாகவும் ஊகங்கள் ...ய தற்போதும் மனிதன் ...ன்று அழைக்கப்படும் ஒரு ...ருப்பையில் காணப்படும் ...ான் இன்றுவரை மனிதன் ...

... அல்லது பெரிய நிலப் பரப் ...ந்து மதத்திலும் ஒரு சாட்சி ...ம் சரி, மகாபாரதத்திலும் சரி

கண்ணன் ஆண்டுவந்த மதுரா என்னும் நகரம் கண்ணபிரான் இறந்ததும் கடலில் மூழ்கியதாக வரலாறு சொல்கிறது. அதாவது தான் ஆண்ட மதுரா நகரம், தான் இறந்ததும் நீரில் மூழ்கிவிடும் என கண்ணபிரான் சொல்கிறார். எனவே அங்கிருக்கும் மக்களை உடனடியாக வெளியேறுமாறு காயப்பட்டு உயிர் பிரியும் நிலையில் உள்ள கண்ணபிரான் சொல்வதாக பாரதத்தில் சொல்லப்படுகிறது.

அண்மையில் 'மதுரா நகரம்' என்று ஒன்று உண்மையாகவே கடலில் புதைந்து கிடப்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அதற்காக கண்ணபிரான் வாழ்ந்தார், பின்னர் இறந்தார் என்பதை உறுதிப்படுத்துவதாகச் சொல்லவில்லை. புராண நூல்களில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே கண்ணன் என்று அழைக்கப்படும் கடவுள் அந்தக் காலத்தில் ஒரு விஞ்ஞானியாகவும் இருந்திருக்கலாம், மறுப்பதற்கு இல்லை. இருப்பினும் மதுரா நகரம் எவ்வாறு அழிந்தது? ஏன் டைனோசர்கள் முற்றாக அழிக்கப்பட்ட பின்னர் மனிதன் தோன்றினான்? உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் 5அறிவு. ஆனால் மனிதனுக்கு 6 அறிவு என்று ஏன் சொல்லவேண்டும்? ஏனைய ஜீவராசிகளை விட நாம் ஏன் பல நூறு மடங்கு முன்னேறி, அறிவில் சிறந்து விளங்க[illegible]? என்று பல கேள்விகள் எமக்குள் எழ[illegible].

(முற்றும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “மனமே இவற்றை மனதில் கொள்”

21 ஆம் நூற்றாண்டு உலகை எதிர்கொள்ளவும், மனதை உற்சாகத்துடன் வைத்திருக்கவும், மன இறுக்கத்தைக் குறைத்துக் கொள்ளவும், சுவையான வாழ்வு வாழவும் “ மனமே இவற்றை மனதில் கொள்” இவற்றை மனதில் கொண்டால் மகிழ்ச்சியோடும் ஆனந்தமான மனோபாவத்தோடும் சந்தோஷமாக சுமையில்லாத வாழ்வு வாழலாம்.

★ தொலைக்காட்சி மோகம் உம்மை தொலைத்துவிடும்.

★ கற்றல் ஆர்வம் தூண்டப்படாமல், கற்றலைத் திணிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

★ ஏதாவது தோல்விகளைச் சந்தித்திருந்தால் அவை பெறும் அனுபவப் பாடமாக ஏற்கும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.



★ வாசித்தல் தொழிற்பாடு அலட்சியப்படுத்தப்படும் காரியமல்ல. அது உன்னை முழு மனிதனாக்கும் என்பதை புரிந்து கொள்.

★ இன்றைய எம் ஊக்கம் நாளைய நம் தலைவிதியை நிர்ணயிக்கும்.

★ கட்டாயத்தினால் எதனையும் நிரந்தரமாகச் சாதித்துவிட முடியாது. விருப்புடன் முயல்வது வெற்றிக்கு வழி கோலும்.

★ எல்லா மனிதர்களிடமும் பலமும்,பலவீனமும் இருக்கின்றது. முதலில் பலத்தை உணருங்கள். பலத்தை செயற்படுத்தும் போது பலவீனம் தானாகவே பலவீனமடைந்துவிடும்.

★ மனிதப் பண்புள்ளவனாக வாழ கல்வியே அச்சாணி.

★மனம் நம்பிக்கையை இழப்பது, மரம் வேரை இழப்பது போன்றது.

★ சிரிப்பு மூளையை சிறப்பாக்கி, ஆரோக்கியமான வாழ்வினை நோக்கி நகர்த்த உதவும்.

★ பெற்றோரின் முன் மாதிரியான வாழ்க்கை முறை பிள்ளைகளுக்கு வழிகாட்டி.

★ மன்னிப்பதும், மறப்பதும் தெய்வகுணம்.

★ துணிச்சலை துணையாகக் கொண்டவருக்கு வெற்றி நிச்சயம்.

★ தள்ளிப் போடுவதை கிள்ளிப் போடுங்கள்.

★ கவலையே, மனிதருக்கு நினைவாற்றல் குறையக் காரணம்.

★ வெறுப்புணர்வை ஒழிக்க நம் எண்ணங்களையும், செயல்களையும், சிந்தனைகளையும் அகலப்படுத்திக் கொள்வது முக்கியம்.

★ பிள்ளைகளை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். தாழ்வு மனப்பான்மை பிள்ளைகளின் மனதில் தோற்றம் பெறும்.

★ பொருத்தமற்ற கட்டுப்பாடுகள், தவறான தண்டனை முறைகள், கல்வித் திணிப்புக்கள் உள நெருக்கீட்டை ஏற்படுத்தும்

★ எடுத்த காரியத்தை முடியும் வரை தொடரும் திறன் அவசியம்.

★ உணர்ச்சிகள் எமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

★ உடற்பயிற்சி வாழ்நாளை நீடிக்கும்.

★ மனத்திருப்தியுடன் காரியங்களை மேற்கொள்ளும் போது மன அழுத்தத்திலிருந்து விடுபட முடியும்.

★ குழந்தைகளின் அறிவுத்திறன் ஆவேசத்தை கட்டுப்படுத்தவோ, இடையூறு செய்யவோ கூடாது.

★ ஆன்மிக ஈடுபாடு உள அமைதிக்கு இட்டுச் செல்லும்.

★ ஆங்கில அறிவையும், கணினி அறிவையும் வளர்த்துக்கொள்.

★ நல்லொழுக்கம் தான் ஒரு மனிதனைப் பிற்காலத்தில் சிறந்த பண்புடையவனாக ஆக்குகின்றது.

★ தோல்வியை ஏற்றுக்கொள்ளப் பழகுங்கள்.

★ பிறரை ஏமாற்றுவதைவிட தோற்பது கண்ணியமானது.

★ குடும்பப் பிணக்கை விட்டுக்கொடுத்தல், கலந்துரையாடல் மூலம் தவிர்த்துக் கொள்.

★ மனப்பலம், பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பலம் இல்லாமை மனிதரை இறப்புக்குத் தூண்டிவிடும்.

★ பிள்ளைகளிடமிருக்கும் தனித்திறமையை அடையாளம் கண்டு அதில் அவன் தனது ஆற்றலை வெளிக்காட்ட உதவ வேண்டும்.

★ பெற்றோரைப் பாதுகாக்கத் தவறும் பிள்ளைகளைத் தண்டிக்கும் வகையில் சீனாவில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இலங்கையில் இந்த நிலையை ஏற்படுத்தாதீர்கள்.

★ பாலியல் வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விழிப்படையுங்கள்.

★ வாழ்க்கை என்பது இன்பமும், துன்பமும் கலந்த ஒன்றே.

★ அடக்கம் அமரருள் உய்க்கும், எல்லாருக்கும் நன்றாம் பணிதல்.

★ எந்தவொரு செயலையும் என்னை நினைத்து ஆணவமின்றிச் செய்தால் வெற்றி நிச்சயம்.

★ சிறந்த வகுப்பறை, முகாமைத்துவம் தவறுகளைப் பூச்சிய மட்டத்துக்கு இட்டுச் செல்லும்.

★ கடின உழைப்பு, நேர்மை, அன்பு, தன்னம்பிக்கை போன்றவற்றை நம் வாழ்க்கையின் ஊன்றுகோலாகப் பயன்படுத்த வேண்டும்.

சி.நற்குணலிங்கம், கரவெட்டி.

# நினைவுச் சிதறல்கள்

சங்கமித்தை வந்திறங்கிய
சம்பில் துறைமுகம்
மாது + அகல் = மாதகல்
என்ற நாமம் கொண்டது

வயல்கள் பல நிறைந்த இடம்
கடல் வளம் மிக்க இடம்
வினைகள் தீர்க்கும் விநாயகா
அந்த அரசடி அது உன் இடம்

அம்மன் இருந்து அருள்
பாலித்திடவே பாணாவெட்டி
நாணா மரங்களின் மத்தியிலே
கடம்பமரம் அதில் கடம்பனவன்

மரபுவழியில் நுணசை
முருகனாயும் நீ ஆனாய்
உன் அருகில் குடி கொண்டார்
சாந்த நாயகி சமேத சந்திர
மௌலீசர்

வயலுக்கு நடுவில் ஐயனார்
வந்துதித்தார்
காஞ்சிபுரத்தடியில் வைரவர்
குடிகொண்டார்
மாதகலின் மத்தியிலே பேச்சி
அம்மனும்
கடலுக்கு அருகிலே வார்து
அன்னையும்

கல்விதனை பெற்றிடவே
நுணசை சென்யோசெப்
சென் தோமஸ், விக்னேஸ்வரா
கல்விச் சாலைகள் பல

ஒரு கிராம மக்கள் நாம்
ஊரை இழந்து உறவை இழந்து
திக்கு திசையற்று
ஒவ்வோர் ஊரில் ஒவ்வோர் மக்கள்

இடம் பெயர்ந்து மாறியது
நாம் மட்டுமா - இல்லையே
சம்பில் துறைமுகமும் அல்லோ
ஜம்புகோளப் பட்டினமாகியது

மகிழ்ச்சியுடன் நம் ஊரிலே
நாம் வாழ்ந்த நினைவுகளை
மீட்டுத்தான் பார்க்கிறேன்
பகிர்கிறேன் உங்களுடன்

மாதகலூர் சுபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநலமே போ.. போ..! நிம்மதியே வா.. வா..!

சுயநலம் என்னும் பேய்தான் மனிதர்களின் நிம்மதியை அழித்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சுயநலத்தை அழித்தாலன்றி நாம் எக்காலத்திலும் நிம்மதியைப் பெற இயலாது. எம்மைப் போன்ற கோடிக்கணக்கான மக்கள் பசியால் வருந்தும்போது அறுசுவை உணவை நாம் உண்பது கூடச் சுயநலம்தான். கணக்கற்ற மனிதர்கள் நோயினாலும், வறுமையினாலும் வாடுகிறார்கள். அவர்களுக்காக மனமிரங்காமல் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருப்பது சுயநலம்தான் .

ஒரு மனிதனை நல்வழிப்படுத்துவதற்காக நூறாயிரம் முறை பிறக்கவும் தயாராக உள்ளேன் என்றார் சுவாமி விவேகானந்தர். என் சகோதர மக்களுக்கு வேத இரகசியங்களைப் போதிப்பதால் எனக்கு நரகம் கிடைக்குமானால் அதை ஏற்பேன் என்றார் இராமானுஜர். எந்தளவு பெருந்தன்மை நிறைந்த சொற்கள் இவை.? தன்னலம் கருதா இந்தப்பண்பினர் இலட்சத்தில் ஒரு பகுதியினர் எம்மிடம் இருந்தால் இந்த உலகம் பொன்னுலகமாக மாறிவிடாதா? நிம்மதியைத் தேடுகின்ற அவல நிலைதான் தோன்றுமா? சிந்தனை செய்து பாருங்கள். தெளிவு ஏற்படும். ஒரு குடும்பம் சுயநலமற்று இருந்தால் அங்கே பூசல்கள் எப்படித்தோன்றும்? நான்தான் உயர்ந்த ஆடைகளை உடுத்துவேன்.

நான்தான் நல்ல உணவுகளை உண்பேன். எனக்குத்தான் எல்லோரும் மரியாதை செய்யவேண்டும். நான் சொல்வதுதான் வேதவாக்கு. நான் சொல்கிறபடி தான் எல்லோரும் கேட்க வேண்டும். இவையெல்லாமே சுயநலத்தின் ஊற்றுக்கண்களாக இருக்கின்றன. இந்தப் பேய்க்குணங்களைத் தேக்கி வைத்துக்கொண்டு நீங்கள் நிம்மதியை எப்படி எதிர்பார்க்க முடியும். பிள்ளையைக் கொன்றுவிட்டு தந்தைக்கு உபகாரம் செய்தால் எந்தத் தந்தை தான் அதை ஏற்றுக்கொள்வார்? இவ்வுலகத்து மக்கள் அனைவரும் ஆண்டவனின் பிள்ளைகள்.

அந்தப் பிள்ளைகளைத் துன்புறுத்தி விட்டு ஆண்டவனிடம் சகாயம் கேட்டால் அவர் எப்படித் தருவார்.? இதனை ஆழ்ந்து சிந்தியுங்கள். பாற்கடலைக் கடைந்த போது பல அற்புதப் பொருள்கள் எல்லாம் கிடைத்தன. தேவர்கள் அதனை வாங்கிக் கொண்டார்கள். இவை கிடைப்பதற்கு முன்பு ஆலகால விஷம் வந்தது. அந்த விஷம் அகில லோகங்களையும் அழிப்பது போல கிளம்பியது. பரமேஸ்வரன் அந்த விஷத்தைத் தான் உண்டு அகிலத்தைக் காத்தருளினார். மற்ற தேவர்களுக்கு அரிய பொருள்களை அளிப்பதற்காக எம்பெருமான் விஷத்தை உண்டார். அதனால் தான் தியாகராஜன் என்ற பெயரை அடைந்தார். பாற்கடலைக் கடைவதற்கு முன்பு சிவபெருமானைக் கலந்து ஆலோசிக்காமல் அவர்கள் செயலில் ஈடுபட்டனர். விஷம் வந்தபோது தான் எம்பெருமானின் நினைவு அவர்களுக்கு வந்தது.

சிவபெருமான் இதையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தவில்லை. தன்னிடம் சொல்லாமல் செயலில் ஈடுபட்டார்கள். அவர்கள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்று அவர் விடவில்லை. அறியாமல் செய்யும் பிள்ளைகளின் பிழைகளை மன்னிப்பது போல் அவர் மன்னித்தார். ஆனால் விஷத்தைத் தான் உண்டு அகிலத்தைக் காத்தருளினார். ஆனால் நாம் என்ன செய்கிறோம்? நாம் வாழ்வதற்காக பிறருக்கு விஷம் போன்ற செயல்களைச் செய்கிறோம். தாம் நலமாக வாழ மனிதர் பிறர் சொத்துக்களைக் கபடமாக வஞ்சிக்கிறோம். எம் சுயநலத்திற்காக அப்பாவி மக்கள் மீது பழிகள் போடுகிறோம். தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற மற்ற குடும்பங்களைப் பிரிக்கிறார்கள். கேவலம் பணத்திற்காக பொய்சாட்சி சொல்கிறார்கள்.

பெற்றெடுத்த தாயைக் கூட அவதிக்குள்ளாக்குகிறார்கள். ஒருபடி மேலே சென்று தெய்வத்தை நிந்திக்கிறார்கள். பெரியோர்களை அவமதிக்கிறார்கள்.. செல்வத்தை ஈட்டுவதற்கு எந்த முறையையும் கையாளலாம் என்று நினைக்கிறார்கள். ஒழுக்கம் தவறுகிறார்கள்.. மனம்போன போக்கில் செல்கிறார்கள். போதைப் பொருள்களுக்கு அடிமையாகிறார்கள். குடும்பத்தைத் துயரப்பட வைக்கிறார்கள்.

இப்படியெல்லாம் செய்துவிட்டு நிம்மதி எங்கே? நிம்மதி எங்கே? என்று தேடுகிறார்கள். இதை அறியாமை என்று சொல்வதா? ஆணவம் என்று சொல்வதா? சிறுபிள்ளைத்தனம் என்று சொல்வதா. சிலர் விதியின் மீது பழி போட்டுத் தப்பித்துக்கொள்ள நினைக்கிறார்கள்.

தப்பித்துக்கொள்ள நினைப்பது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதுதான். விதியை ஏற்படுத்திக் கொள்வது நீங்கள் தான். சுயநலத்தை அகற்றினால் விதி உங்களை எதுவும் செய்ய முடியாது. நிம்மதியை நீங்கள் தேடவேண்டியதில்லை. தானாக அது உங்களை வந்தடையும். நாம் நினைத்தால் ஓரிடத்தில் அமர்ந்து முக்தியினைப் எளிதாக பெற்றுவிட முடியும்.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# வாசகர் திருமுகம்

## இ.போ.ச வின் நேர அட்டவணை பார்வைக்கு வைக்கப்படுமா?

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் யாழ். மத்திய பஸ் தரிப்பிடத்தில் இருந்து புறப்படும் நேரங்கள் தெரியாத காரணத்தால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அனைத்து இடங்களுக்கும் தகுந்தாற் போல் பஸ்கள் பஸ் தரிப்பிடத்தில் தரித்து நின்றாலும், என்னென்ன நேரங்களில் புறப்படும் என்பது தெரியாது உள்ளது. இதனால் பயணிகள் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் நின்றாலும், தனியார் பஸ்களில் மிக நெரிசலுடன் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

குறிப்பாக மாதாந்த பருவகால பயணச் சிட்டை பெற்றவர்களும், வயது முதிர்ந்தவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

எனவே, இலங்கை போக்குவரத்துச் சபை அந்தந்த பஸ் தரிப்பிடங்களில் நேர அட்டவணைகளைப் பொதுமக்கள் பார்க்கக் கூடிய விதத்தில் காட்சிப்படுத்தினால் தனியார் பஸ்களில் பொதுமக்கள் நெரிசலான பயணத்தை மேற்கொள்வதைத் தவிர்க்கலாம். நடவடிக்கை எடுப்பார்களா இ.போ.சவினர்.

**கே.பாலகுமார்,**
**அச்சுவேலி.**

## இந்திய வீட்டுக்கு சரியான தெரிவு தேவை

இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவு தொடர்பாகச் சில வாரங்களுக்கு முன்னர் சகல பிரதேச செயலர்களுக்கும் அதிபர், ஆளுநர் ஆகியோருக்குமிடையில் எத்தனையோ கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. ஆனால் கடைசிக் கலந்துரையாடல்கள் தீர்க்கமான முடிவுகள் இடம்பெற்று முடிவுறுத்தப்பட்டு அவை பத்திரிகைகளி லும் செய்திகளாக வெளிவந்து உள்ளன.

வன்னிக்கு இடம்பெயர்ந்து இருத்தல்,

வன்னியில் இருந்து 2009 இற்குப் பின்னர் சொந்த இடத்துக்கு திரும்பியிருத்தல்,

வீடு இல்லாதவர்களாக இருத்தல்,

உறவினர்களுடன், நண்பர்களுடன் தங்கி இருத்தல்,

சொந்தக் காணி உறுதி வைத்திருத்தல்,

வருமான மட்டம் மிகக் குறைவாக இருத்தல்,

18 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் உழைக்கும் பிள்ளைகள் பெற்றோரைக் கவனத்தில் கொள்ளாதிருத்தல்,

கணவனை இழந்திருத்தல் அல்லது காணாமல் போயிருத்தல் அல்லது தொடர்புகள் அற்று இருத்தல்,

பெண்களின் உழைப்பில் அவர்கள் தங்கியிருத்தல்,

குழந்தைகள், சிறுவர்களை வைத்திருத்தல்,

போரின் தாக்கமும் வடுக்களும் குடும்பக் கட்டமைப்பை சிதைத்தமை,

பெண் தலைமைத்துவமுள்ள பெண்களையும் அவர்களின் உளவியல் தாக்கத்தையும் கருத்தில் எடுத்தல்

இந்த நிபந்தயைின் கீழ் தான் மேற்படி திட்டத்துக்கு உள்வாங்கப்படுவார்கள் என்று கூறப்பட்டது. ஆனால் நிலைமை வேறு. கிராம சேவையாளர்கள் மூலம் பெற்ற பழைய தகவல்கள் மூலம் தெரிவு செய்யப் பட்டவர்கள் எண்ணிக்கைதான் அதிகம். தற்போதைய நிலையில் ''மீள் வடிகட்டல்'' என்ற செயன்முறை யாழ். அரச அதிபரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அறியக் கூடியதாக உள்ளது. அரச அதிபரின் இந்தத் திட்டம் வெற்றியாக அமைய வேண்டும் எனின், சகல பிரதேச செயலகங்களிலும் தமது பதிவுகளை மேற்கொண்ட அனைவரதும் உண்மைத் தன்மைகளை ஆராய வேண்டி உள்ளது. அதன் உண்மையான நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. உண்மையாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டும் தான் சகல உதவிகளும் சென்றடைய வேண்டும் என்பதில் விழிப்பாக இருத்தல் வேண்டும்.

ஏதேனும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறின் பிரதேச செயலர், கிராம சேவையாளர் நேரடியாகச் சென்று ஆராய்ந்து முடிவு எடுத்தல் வேண்டும். மக்களின் தேவையை அறிந்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். காலம் கடந்த தரவுகளை விடுத்து தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் எடுத்து மேற்படி நிபந்தனைகளுக்கு அமைவாக மீள்பதிவை மேற்கொண்டு மக்களுக்கு உதவுங்கள்.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் சிறந்த மனநிலையில் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் மீள் எழுச்சி அடைவார்கள்.

**க.கனகமணி,**
**கிளிநொச்சி.**

## ஏன் இந்த அசமந்தம்? கவனிப்பார்களா?

யாழ்.நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள, ஆரியகுளத்தில், பல மாதங்களாக, சல்பீனியாப் பூண்டு பல்கிப்பெருகி, நுளம்புப் பெருக்கத்தை உண்டுபண்ணி சுகாதாரச் சீர்கேட்டை விளைவிக்கிறது. இதை மாநகர சபை கண்டும் காணாமல், அசமந்தப் போக்கில் செயற்படுவதையிட்டு, சுகாதார நலன்விரும்பிகளும், அதையண்டி வாழும் கிராம மக்களும் கடும் விசனம் கொண்டுள்ளனர்.

இந்துக் கோயில்களும், புத்தவிகாரையும் அருகருகே அமைந்து தினமும் பல யாத்திரிகர்கள், வழிப்போக்கர்கள், ஏனைய தேவைகளுக்காக ஆரியகுளம் நகரப் பகுதிக்கு வருகை தரும் மக்களுக்கும், கிராமத்தில் வாழும் மக்களுக்கும் நுளம்புத் தொல்லையைக் கொடுத்து நோய் பரப்பும் இந்தக் கொடிய சல்பீனியாப் பூண்டை ஆரியகுளத்திலிருந்து நிரந்தரமாக அகற்ற உரிய நிர்வாகம், நடவடிக்கை எடுக்காதையிட்டு, மக்கள் வேதனையும், விரக்தியும் அடைகின்றனர்.

மேடையேறி, நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்துவோம். மலேரியா, டெங்குக் காய்ச்சல் நோய்கள் பரவுவதை தடை செய்வோம் என வாய்ப்பந்தல் போட்டு அறிக்கைகளை விடும் சம்பந்தப்பட்ட அதிகாரத்தினர் இந்தச் சுகாதாரச் சீர்கேட்டை போக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை கவனத்துக்குத் தருகிறோம். மக்களுக்கு சுகாதாரம் பேண் புத்திமதி கூறும் அதிகாரிகள், தமது பொறுப்பைத் தட்டிக் கழித்து, அசமந்தம் காட்டுவது சரியா என்று சிந்தித்துச் செயற்படும்படி, மக்கள் நலன் சார்பாக, பொதுநல நோக்கில், கோரிக்கை விடுகின்றோம்.

ஆரிய குளத்தில் வளர்ந்து, சுகாதாரச் சீர்கேட்டையுண்டாக்கும் சல்பீனியாப் பூண்டை அழிக்கும்படி, மக்களுக்கும், கிராமத்து பொது அமைப்புக்களும், சமூக நல ஆர்வலர்களும் நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் கோரிக்கைகளை உரிய பகுதியினருக்கு முன்வைத்தும் கவனம் எடுக்காததையிட்டு வேதனை அடைகின்றோம்.

எனவே இனியாவது தாமதம் செய்யாது, ஆரியகுளம் சல்பீனியாப் பூண்டை அழிக்க, உரிய நிர்வாகம் ஆவன செய்யும்படி தயவாகக் கேட்டு, மக்கள் சார்பாக இந்தக் கோரிக்கையை முன் வைக்கின்றோம்.

**வ.கு.ஜெயபாலன்,**
**சமூக நல ஆர்வலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- சுருகேஷி செல்வதாஸ்

# கனவுகளைத் தொலைத்து விடாதீர்கள்

நிஜங்கள் எப்போதும் யதார்த்தப் போர்வை போர்த்திக் கொண்டு இயல்புகளை வெளிக் காட்டினாலும் கனவுகளில் எப்போதும் சிறகடித்து எங்கெங்கோ பறக்க முடியும் ஒரு வாய்ப்பையும் சேர்த்தேதான் பிரபஞ்சம் எமக்குக் கொடுத்திருக்கிறது. இயல்புகளை அவ்வப்போது மென்மையாய் மறந்து விட்டு கனவுகளுக்கு வர்ணம் தீட்டி தீரத் தீர காதலிக்க நான் எப்போதும் தயங்குவதில்லை.

ஒரு மழை, எங்கோ வேகமாய் செல்லும் வெண்மேகம், பேசாமல் பூத்துச் சிரிக்கும் ஏதோ ஒரு பூச்செடி, சல சலத்து ஓடும் ஓர் ஓடை, அடர் கானகம், யாரென்றே தெரியாமல் எம்மை வசீகரிக்கும் பஸ்ஸின் ஜன்னலோர ஒரு பெண்ணின் முகம், காதலிக்க விரும்பிக் காதலைச் சொல்ல முடியாமல் தவிக்கும் தவிப்பு... மதிய உறக்கத்துக்குப் பின்னான ஓர் ஆழமான அழகிய சோகம்.... அந்த சோகத்தை சூழ்ந்திருக்கும் ஓர் அடர்த்தியான மௌனம்.... என்று எப்போதும் எங்கோ இழுத்துச் செல்லும் வாழ்வின் இரகசியங்களை மனதுக்குள் இருத்திக் கொண்டு நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்....

என்ன ஒன்று அதற்காக புறத்தொடர்பை நாம் அறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். தத்துவங்களையும் கோட்பாடுகளையும், விவாதங்களையும் விட்டொழிக்கும் அந்தக் கணத்தில் காதல் ஓர் அரக்கனாய் விசுவரூபம் எடுத்து நிற்பதை எம்மால் தவிர்க்க முடியாது ...

காதலால் நிறைந்து கிடக்கையில் சூரியனின் கதிர்களின் ஓரங்களில் கை தேய்த்து விளையாடலாம். மேகங்களின் மீது மல்லாந்து படுத்துக் கிடந்து வானத்தின் நீல நிறத்தில் நாம் கரைந்து போகலாம். மரங்களின் மீது ஒரு சிறு பூச்சியாய் ஊர்ந்து செல்லலாம். ஒரு வண்ணத்துப் பூச்சியாய் பூக்களைத் தொட்டும் தொடாமலும் மென்மையாய் புணர்ந்து சென்று ஜடங்களை ஜடங்கள் ஆளும் மானுட காமங்களுக்கு சவுக்கடிகள் கொடுத்து பாடங்கள் சொல்லலாம்...

ஏன்.... யாருமற்ற சாலையில் நடந்து செல்கையில் தூரத்தில் பறந்து செல்லும் நாரைக் கூட்டங்களை உதடு குவித்து விசிலடித்து எம்முடன் குளிக்க கூட்டிச் செல்லலாம்.... என்ன செய்ய முடியாது எம்மால்....? காதலாய் இருக்கையில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்...! வேண்டுமென்றால் யாரேனும் ஒரு பெண்ணைக் கூட லௌகீகமாய் காதலித்துக் கூட பார்க்கலாம்.

ஆமாம் கனவுகள் சுகமானவை. நிஜத்துக்கு எப்போதும் மிகத் தூரமானது. நிஜம் ஒரு போதும் கனவின் பாதங்களைக் கூட தொட முடியாது. அது எப்போதும் யதார்த்தம் பேசும். விளக்கம் கேட்கும். அதற்கு எப்போதும் முரட்டுத்தனமான சாட்சிகளிலும், கரடு முரடான உண்மைகளிலுமே கவனமிருக்கும். மறந்தும் கூட புன்னகைக்கத் தெரியாத நிஜத்தை விட எப்போதும் நேசிக்கும் கனவுகள் வசீகரமானவை.

கற்பனைக்கு அடுத்த வீடு கனவுகள் என்று கொண்டால் கற்பனையும் கனவும் சேர்ந்த கூட்டுக் கலவைதான் காதல். காதல் எப்போது நமக்குள் மிகையாகிறதோ அப்போதெல்லாம் இப்படி கிறுக்கிக் கொண்டு கூட நாம் இருக்கலாம்.

யார் தடுப்பது? எமது எல்லைகளைத் தீர்மானிக்க ஓர் இலக்கு இல்லாத போது நாம் மேற்கே பறந்து சட்டென்று தாழ இறங்கி, ஓடும் ஒரு நதியின் மீது பட்டும் படாமல் நடந்து, ஒரு கருநீலக் கடலின் ஆழத்தில் சென்று மண்ணள்ளி வந்து சுடு பாலைவனத்தில் தூவி, பாலைவனச் சூட்டை உடலில் ஏந்திச் சென்று ஒரு வயல் வெளியின் வரப்பின் மீது நின்று கொண்டு கூவும் குயிலை சண்டைக்கு இழுத்து விட்டு, ஊர்ந்து செல்லும் ஒரு சர்ப்பத்தின் முதுகிலேறி அதன் புற்றுக்குள் சென்று சுகமாய் முடங்கிக் கிடந்து அரை குறை தூக்கத்தில் அதிசயமாய் ஒரு கனவு காணலாம்.... நிச்சயமாக.

ஆமாம் கனவுகள் நிஜம்தான். நிஜத்தில் உங்களுக்கு பணம் தேவை. பொருள் தேவை. இடம் தேவை. அனுமதி தேவை. மனிதர்களின் அனுசரணை என்னும் அவஸ்தைகள் எல்லாம் தேவை..! உங்களுக்கு திக்குகள் மறந்து உற்சாகமாய் அலைய விருப்பமா? இல்லை கடிகாரத்துக்குள் வாழ்க்கையை அடைத்து விட்டு ஓடி ஓடி... வாழ்க்கையை லயித்து வாழ்வது என்றால் என்னவென்று தெரியாமல் மரிக்க விருப்பமா?


எத்தனை வேகமாய் ஓடினாலும் இயந்திரங்கள் எல்லாம் இயந்திரங்கள்தான். அட்டவணைக்குள் வாழ்க்கையை அடைத்துக் கொண்டு வெற்றியடைய வழி சொல்பவர்கள் எல்லாம் என்றாவது ஒரு நாள் அவர்கள் வீட்டு வாசலில் நிற்கும் ஒரு மரத்தை நலம் விசாரித்து இருப்பார்களா? அவர்கள் தோட்டத்துப் பூக்களோடு கை குலுக்கி இருப்பார்களா? பக்கத்து வீட்டுக்காரரின் பெயர் தெரியாமல் வாழும் ஒரு வாழ்வியல் முறையில் இவர்கள் எப்படி இதை எல்லாம் செய்திருக்க முடியும்..?

கனவுகளைத் தொலைத்து விடாதீர்கள் மனிதர்களே...! அது மனித இருப்பின் சூட்சும சொர்க்கம்...! வார இறுதியிலாவது கனவுகளுக்கு நேரம் ஒதுக்குங்கள். கற்பனைகளில் ஒரு ஆடாகவோ, மாடாகவோ, புல்லாகவோ, புழுவாகவோ, பூனையாகவோ சட்டென்று மாறுங்கள்..., யாரையேனும் காதலியுங்கள், காதலில் வெற்றி பெறுங்கள் அல்லது தோற்றுப் போங்கள். மனதால் அழுங்கள். அப்படி அழுததை எண்ணிச் சிரியுங்கள்...விடியலை அந்திக்கும் அந்தியை விடியலுக்கும் மாற்றிப் போட்டு விளையாடுங்கள்...

ஆமாம்.... கனவுகள்....மனித வாழ்க்கை என்னும் இருப்பின் சூட்சும சொர்க்கங்கள்...!



# மனம் என்றால் என்ன ?



மனம் ஒரு குரங்கு. பெரும்பாலும் நாம் சீண்டியடிக்கும் விஷயம் இதுதான்.

மனம் ஒரு குரங்கு என்றால் பெருமைப்பட வேண்டிய விடயம்தான்.

குரங்கு மரத்துக்கு மரம் தாவுவதுபோல் மனம் ஓரிடத்தில் இருப்புக் கொள்ளாமல் அலைவதை குறிப்பிட, இவ்வாறு மனம் ஒரு குரங்கு என்று சொல் வழக்கு வந்திருக்கலாம். ஆனால் உண்மையில் மரத்துக்கு மரம் தாவுவது தானே குரங்கின் இயல்பு. அது எதற்காக அவ்வாறு தாவுகிறது. இருப்பிடம், உணவு, பாதுகாப்பு மற்றும் உடலின் சுறுசுறுப்பை தக்கவைத்து கொள்ள நோக்கமுடன் தாவும் குரங்கை மனிதனோடு ஒப்பிட முடியுமா?

குரங்கின் மனதைப்போல் மனிதனின் மனமும் இவ்வாறான மேம்பட்ட நோக்கத்துடனே இருக்கிறது ?

மனதுக்கு எண்ணற்ற அறிஞர்கள் பலவிதமான விளக்கங்கள் கொடுத்துள்ளனர். இவற்றில் வேதாத்ரி மகரிஷியின் மிகவும் பிடித்தமானது.

அவர் மனம் ஒரு காந்தம் என்கிறார். எமது உடல் இயக்கங்களின் போதும் ஏற்படும் மின் ஆற்றலால் ஓரிடத்தில் குவிந்து அது இந்த பிரபஞ்ச வெளியோடு தொடர்பு கொண்டு மனம் என்ற நிலையை உருவாக்குகிறது.

அதாவது மனம் என்பது உடல் சார்ந்த விடயம் மட்டுமல்ல. அது பிரபஞ்ச வெளியோடு இந்த உடலை இணைக்கும் ஆற்றல். எவ்வளவு அழகான அருமையான விளக்கம்.

நான் சிந்தனை செய்வது, நான் எண்ணுவது என்னுள் மட்டும் ஏற்படும் செயல் அல்ல, அது இந்த பிரபஞ்ச வெளியோடும் தொடர்புடையது. அதாவது நான் ஓர் ஊரை நினைக்கிறேன் எனில் என் மனம் அதிவிரைவாக கடந்த முறை இந்த ஊருக்குச் சென்ற நினைவுகளைக் கொண்டு வருவதோடு, இப்போதும் அங்கு பயணித்து அங்கு மோதி பிரதிபலித்துத் திரும்புகிறது.



-இணையவன்

இது ஒரு வினாடியில் நிகழ்ந்து விடுகிறது. ஓர் இடத்தை மட்டுமல்ல, நீங்கள் விரும்பும், நினைக்கும் எதன் மீதும் இதுதான் நிகழ்கிறது.

முகவசியம் மற்றும் ஜகவசியம் பற்றியும் எம் முன்னோர்கள் ஏகமாக சொல்லி சென்றிருக்கிறார்கள்.

இந்த முகவசியம் அதிகரிக்க வள்ளலார் சுவாமிகள் பல சிறப்புப் பயிற்சிகளையும் சொல்லியிருக்கிறார்கள்.

முகவசியம் என்றால் என்ன?

முகப்பூச்சுக்களையும், பேசியலையும் பூசிக் கொண்டு பளபளவென இருப்பதா ?

முகவசியத்திற்கு அழகிற்கு சம்பந்தமே இல்லை. அதாவது அறிமுகம் இல்லாத நபர்களைக் கூட எம்முடன் இணைத்து எமக்குத் தேவையான உதவியைப் பெற்றுத் தரும். இதுதான் முக வசியம் என்பது.

இதுவும் மனதின் ஒரு மந்திர சக்திதான். இந்த முகவசியத்தை எல்லாராலும் பெற முடியும். ஏன் எல்லோர் வாழ்விலும் நடந்திருக்கும். ஆனால் எப்போதும் நடந்திருக்காது. எப்போதாவது நடந்திருக்கும். எப்போதும் நடைபெற என்ன செய்யவேண்டும்.

முடியுமா என்றால் ? முடியும்! அதற்கு முகவசியத்தை அதிகரிக்கும் மனப் பயிற்சி தேவை. நினைப்பதை தீர்க்கமாக எந்தவித சலனமும் இன்றி நினைத்தால், கேட்பது கிடைக்கும்! நினைப்பது நடக்கும்!

உங்கள் கவலைகளை நீங்கள் பட்டியலிட்டால், நிச்சயம் அதில் தொண்ணூறு சதவீதம் அர்த்தமற்றது தான்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசையாக உங்கள் கவலையை தாள் ஒன்றில் எழுதுங்கள்.

பின்னர் அந்தக் கவலையின் காரணம், அவசியம் எப்படித் தீர்க்கலாம், அதற்கான வாய்ப்புகள், கால அளவு என அனைத்தையும் அருகில் எழுதுங்கள். தாளில் எழுதும் போதே பெரும்பாலான கவலைகள் அர்த்தமற்றவை என்பதை உணர்வீர்கள்.

மீதமுள்ளவைகளுக்கு காலத்தின் அடிப்படையில் தீர்வு கிடைக்கும்.சில தீர்க்க [illegible]லைகள் பற்றி கவலைப்பட்டு ஒன்றும் நடக்கப் போவதில்லை. [illegible]ல் அவற்றைத் தூக்கி குப்பையில் போடுங்கள்.

கவலையை ஒழிக்க சில மனோதத்துவப் பயிற்சிமுறைகளும் இருக்கின்றன. அவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள். வாழ்வு சிறக்கும். ★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org